# முன்னேற்ற அறிக்கை

# 2025

## கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

மாளிகாவத்த, கொழும்பு - 10

# உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| 01 | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | 03 – 18 |
| 02 | கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் | 19 – 46 |
| 03 | தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை | 47 – 60 |
| 04 | தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 61 – 83 |
| 05 | இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | 84 – 93 |
| 06 | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 94 – 99 |
| 07 | வ/ப. சீ – நோர் நிறுவனம் | 100 – 102 |
| 08. | நோர்த் சீ லிமிட்டட் | 103 – 108 |
| 09 | பேலியாகொட மத்திய மீன் சந்தை தொகுதி | 109 - 110 |

# 01
# கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

## நோக்கம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களைப் பாதுகாத்தல் அதன் நிலைபேறான பயன்பாட்டுக்கு தெற்காசிய பிராந்தியத்தில் முதன்மை நாடாக ஆக்குதல்.

## நடவடிக்கை

தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக மீன் வளங்கள் மற்றும் நீரியல் வளங்களின் பயன்பாட்டை உறுதியாக முகாமைத்துவம் செய்தல்.

## கொள்கைப் பிரகடனம்

1. நீரியல் வளங்களை நிலைபேறாக முகாமைப்படுத்தல்
2. நல்லாட்சியை வலுவூட்டல்
3. மீன்சார் உற்பத்தியை அதிகரித்தல்
4. சர்வதேச மற்றும் வலய உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் தரநிர்ணங்களுடன் இணங்கியிருத்தல்
5. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்
6. தொழிற்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பினை வலுப்படுத்தல்
7. உணவுசார் பாதுகாப்பு மற்றும கடற்சார் உற்பத்திகளை ஊக்குவித்தல்
8. நீல பொருளாதார எண்ணக்கருவினை உள்வாங்கல்
9. ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிததல்
10. தொழில் உருவாக்கம்
11. சமுக பாதுகாப்பு முறைகளை மீனவர்களிடையே பிரபல்யப்படுத்தல்
12. பயிற்சி மற்றும் இயலளவு விருத்தியினூடாக முயற்சியாண்மைசார் திறன்களை ஊக்குவித்தல்
13. காலநிலை மாற்றங்களினூடாக நிகழக்கூடிய தாக்கங்களை எதிர்கொள்ளல்
14. பால்நிலை சமத்துவம்
15. மீனவ மக்களது சமூக – பொருளாதார நலன்களை மேம்படுததல்
16. நிவாரணங்களில் தங்கிவாழும் நிலையை குறைத்தல்
17. தனியார் துறையின் பங்களிப்பினை அதிகரித்தல்.
18. மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமை
19. நல்லொழுக்க மாண்புகளை நிலைநிறுத்தல்
20. சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல

| கடற்றொழில் பிரிவுக்கு பங்களிப்பு வழங்கும் நிறுவனங்களும் நோக்கமும் | |
|---|---|
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் (DFAR) | எதிர்பார்க்கும் நோக்கம் - இலங்கையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் முகாமைத்துவம், அபிவிருத்தி மற்றும் பேணல்<br>பொறுப்புகள்- பிராந்திய, சர்வதேச பிரமாணம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக 1996இன் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டங்களை அறிமுகம் செய்தல், கடற்றொழில் முகாமைத்துவ நடவடிக்கை மற்றும் நியதி நிபந்தனைகளை முறையாக மேற்கொள்ளல். |
| தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA) | எதிர்பார்க்கும் நோக்கம் - நீரியல் வளங்கள் சம்பந்தமான ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் வளங்கள் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்.<br>பொறுப்புகள் - 1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் சமுத்திர உயிரின வளங்கள், நன்னீர் நீரியல் வளங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை, கடற்றொழில் தொழில்நுட்பம், பின் அறுவடையின் வீண் விரய தொழில் நுட்பம், சுற்றாடல் ஆய்வு, சமுத்திர உயிரின விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் |
| தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) | எதிர்பார்க்கும் நோக்கம் - செய்கை அடிப்படையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு<br>பொறுப்புகள் - 1998இன் 53ஆம் இலக்க இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கைக்குத் தேவையான குடம்பிகள் வழங்கல், இறால் செய்கை நடவடிக்கையை கண்காணிப்பதற்கு நிலையங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கைக்கான பயிற்சிகளை வழங்கல். |
| இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் (CFHC) | எதிர்பார்க்கும் நோக்கம்- மீன்பிடித் துறைமுகம் மற்றும் நங்கூரமிடும்தளம் திட்டமிடல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல்.<br>பொறுப்புகள் - 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் 20 கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் 58 நங்கூரமிடும் தளங்களை பேணி வருகிறது. |
| இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் (CFC) | எதிர்பார்க்கும் நோக்கம்- மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும்தளங்கள் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்<br>பொறுப்புகள்- 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் 20 கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் 58 நங்கூரமிடும் தளங்களை பேணி வருகிறது. |
| சீ-நோர் நிறுவனம் (Cey-Nor) | எதிர்பார்க்கும் நோக்கம் -கடற்றொழில் மற்றும் அது சார்ந்த தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கல்.<br>பொறுப்புகள் - 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மூலம் பயிபர் க்ளாஸ் படகுகள் உற்பத்தி மற்றும் விற்பனை மீன்பிடி வலைகள் உற்பத்தி மற்றும் விற்பனை அத்துடன் மீன்பிடி உபகரணங்களையும் வழங்கி வருகிறது. |
| நோர்த் சீ லிமிடட்ட | எதிர்பார்க்கும் நோக்கம் - கடற்றொழில் கைத்தொழிலுக்குத் தேவையான உயர்தரமிக்க மீன் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்.<br>பொறுப்புகள்- 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க புதிய கம்பனி சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வலை உற்பத்தி செய்யும் கம்பனியாகும். |
| பேலியாகொட மத்திய மீன் சந்தைத் தொகுதி | 10/0958/438/001ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் முகாமைத்துவ பொறுப்புக் குழ நிறுவப்பட்டது.<br>பொறுப்புகள்- மீன் சந்தை தொகுதியின் செற்பாட்டு நடவடிக்கை தொடர்பான கொள்கை தயாரித்தல் |

# தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு கடற்றொழில் பிரிவின் பங்களிப்பு

## 2025 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் பிரிவினது முன்னேற்றம்

ஒவ்வொரு தனிநபரும் உடல் உள ரீதியாக சிறந்து விளங்குவாராயின் அது முழு நாட்டினதும் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு காரணியாக கருதப்படுகின்றது. அது தேசிய கொள்கையில் நின்றும் விலகிவிட முடியாததொன்றாகும். நற்பண்புசார் பல்லின சுற்றாடல் அடிப்படையானது, ஆரோக்கியமான மக்களினால் வெளிப்படுகின்றது. அரசாங்கம் பூகோள, வலய மற்றும் தேசிய தகுவிதிகளை நோக்கி பிரவேசிக்கும் போது அரசாங்கத்திலுள்ள மனித, பௌதீக மற்றும் நிதி வளங்களை வலுவாதார அடிப்படையில் முகாமைப்படுத்தி, தேசிய அபிலாசைகளை அடைவதே கொள்கையாகும். அது தொடர்பாக எமது கடற்றொழில் சார்ந்த பாரியளவிலான வளங்கள் காணப்படுகிறது. அவ் வளங்களை வலுவாதார அடிப்படையில் முகாமைப்படுத்தி, தரமான மீன் வளங்களை பெற்றுக்கொள்வதற்காக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கு ''வளமான நாடு – அழகான வாழ்வு'' எனும் தேசிய கொள்கையின் எட்டு (08) கோட்பாடுகள் ம்றறும் பன்னிரண்டு (12) செயற்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

புள்ளிவிவரங்களின்படி, இலங்கையின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் 517,000 சதுர கிலோமீட்டர்கள். வரலாற்று நீர் மண்டலம் 21,500 சதுர கிலோமீட்டர்கள். தடாகங்கள் மற்றும் ஆற்று முகத்துவாரங்கள் உட்பட உள் ஆற்றல் 4,890 சதுர கிலோமீட்டர்கள் ஆகும், மேலும் இந்த மொத்தம்; நமது இயற்கை நீர்வாழ் வளங்களின் கொள்ளளவு.

மனிதர்களால் ஆக்கப்பட்ட நீர்த்தேக்கங்களும் அடங்குகின்றன. கால்வாய், கடனீரேரி, பொதுமக்களின் மீன் புரோட்டின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்தல், அதில் 320,470 ஆன மொத்த மீனவ சமுதாயத்தின் தொழில் மறறும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், அறுவடைக்குப் பின்னரான இழப்பைக் குறைத்தல், நுகர்வோருக்கு நியாயமான விலையில மீன் வழங்கல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியன பிரதான நோக்ககங்களாகும்.

முழுமொத்த மீனவ சமுதாயத்தினருள் நூற்றுக்கு 70% அல்லது 225,480 கடற்றொழில் தொழிநுட்பவியலாளர்கள் உவர்நீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். பன்னாட் மீன்பிடிப் படகின் மூலம் கரைக்கு அப்பால் மற்றும் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் 33,980 பேர் ஈடுபடுவதாக கடற்றொழில் அமைச்சின் புள்ளிவிபரங்கள் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டு மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை 272,900 ஆகும். நேரடி மீன்பிடித் தொழிலில் சார்ந்திருப்பவர்கள் சுமார் 1,031,160 வரையாகும். மேலும் இத்தொழிலுடன் தொடர்புடைய மற்றும் மறைமுகமாக இத்தொழிலில் ஈடுபடும் மற்றும் இது சார்ந்த பிற சார்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை 2.7 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையில் மொத்த சனத் தொகையில் சுமார் 12.3% வீதமானோர் மீன்பிடித் தொழிலில் இருந்து தமது வாழ்வாதரத்தை மேற்கொள்கின்றனர் .

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்தெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் உவர்நீர் மீன்பிடித் தொழிலின் மூலம் 237,395 மெற்றிக் தொன் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலின் ஊடாக 44,360 மெ. தொன் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய இக்காலப் பகுதியில் மொத்த மீன் உற்பத்தி 281,755 மெற்றிக் தொன ஆக இருந்தது.

மக்களின் புரோட்டின் தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வது பிரதான குறிக்கோள்களுள் ஒன்றாவதுடன், மேற்படி காலப்பகுதியினுள் தனிநபர் மீன் நுகர்வு நளொன்றுக்கு 34.03 கிராம் ஆகும். தற்போது இந்நாட்டு நுகர்வுக்குத் தேவையான மொத்த மீன் தேவைப்பாட்டின் 60.5 % வீதமானவை உள்ளூர் மீன் உற்பத்தியிலிருந்து கிடைக்கிறது.

தற்போதைய சவால்களுக்கு மத்தியில் அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு மீன்பிடித் தொழலின் பாரரிய பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், 2025 சனவரியில் இருந்து செப்தெம்பர் வரையான காலப்பகுதியினுள் ஏற்றுமதியிலிருந்து ரூபா 68,889.0 மில்லியன் ஈட்டிக் கொண்டுள்ள. அது 230.1 வீத அமெரிக்க டொலர் ஆகும்.

தேசிய ஏற்றுமதி வருமானத்தில் மீன்பிடித் துறையின் பங்களிப்பு 2.4% வீதமாகும். அதில் 1.3% ஐரோப்பிய சங்கம் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கும், அதில் 1.1% ஐரோப்பா அல்லாத நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்கு மேலதிகமாக இக் காலப்பகுதியில் அலங்கார மீன் ஏற்றுமதியின் மூலம் ரூபா 5,382.9 மில்லியன் வருமானமாகப் பெற்றுக் கொள்வதற்கான திறனைக் கொண்டுள்ளது.

செலவினத் தலைப்பு 151 இன் கீழ் நடப்பாண்டு தொடர்பாக ரூபா 5,278.54 மில்லியன் ஆன மூலதனம் மற்றும் மீண்டுவரும் ஒக்கீடாக 2,020.04 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் நிதி முன்னேற்றம் முறையே ரூபா 1,320.78 மில்லியன் மற்றும் ரூபா. 1,442.11 மில்லியனாகும். 2025 ஆம் ஆண்டில் 290 செலவுத் தலைப்பின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்துக்கு ரூபா 187.0 மில்லியன் மூலதன ஏற்பாடும், மீண்டுவரும் ஒக்கீடாக ரூபா 4,191 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் நிதி முன்னேற்றம் முறையே ரூபா 46.83 (24%) மற்றும் ரூபா. 2,564.60(61.19%) மில்லியனாகும்.

மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துவதன் கீழ் தற்போது ஹிக்கடுவை, அம்பலாங்கொட, வாழைச்சேனை மற்றும் தொடந்துவ என்பன அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரித்து அப்பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், வாழைச்சேனை மீன்படித் துறைமுகம் 2026 ஆண்டில் செயற்படுத்தப்படவுள்ளது. அதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது. வட மாகாணத்தின் 04 மீன்பிடி தளங்களும் 62 நங்கூரத்தளங்களும் தொடர்பாக ஒதுக்கப்பட்ட தொகை ரூப 280 மில்லியன் ஆகும்.

கரையோர மீன்பிடித் ஈடுபடும் மீன்டி தொழிநுட்பவியலாளர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமுகமான முன்னெச்சரிக்கை அழைப்பு தொடர்பாக அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களையும் ஒன்றிணைத்து ஒப்பந்தமொன்றுக்கு வந்துள்ளது. அதனூடாக பயன்பெறுநர்களின் எண்ணிக்கை 120,000 ஆகும். புள்ளிவிபரங்களுக்கு அமைய படகு கண்காணப்பு முறைமையின் அவதானிப்புக்கு உட்படுகின்ற பலநாள் மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை 4,869 ஆகும்.

ஐரோப்பிய நாடுகளின் மதிப்பீட்டுக்குட்பட்ட இக் கண்காணப்புச் செயற்பாடானது, ஆசியாவிலுள்ள அதிநவீன கண்காணிப்பு செயன்முறையாக இனங்காணப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளைக் கொண்டு அதனூடாக கிராமிய மக்களது உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், வாழ்வாதார மேம்பாட்டிற்கான மீனினப்பெருக்க வசதிகளை வழங்கல், புதிய மீனினப்பெருக்க அலகுகளைத் தாபித்தல், தாய் மீன்களை இறக்குமதி செய்தல், விழிப்பூட்டல் ஆகிய பல்வேறு வேலைத்திட்டங்கள் இவ்வாண்டில் முன்னெடுக்கப்பட்டன. ஊலகளாவிய நவீனமய முறைகள் மற்றும் போட்டி வாய்ப்புக்களை கவனத்திற்கொண்டு புதிய மூன்று (03) அலங்கார மீனின வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

முறையான அறிவியல் முறைகள் மற்றும் நடைமுறைகள் உத்திகள் ஆகிவற்றின் ஊடாக சூழலுக்கு இணக்கமான அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொண்டு, அதன் ஊடாக மீன் உற்பத்தியை இலகுவாக பெறுதல் மற்றும் நுகர்வோர்களுக்கு சாதாரண விலைக்கு கிடைக்கக்கூடிய நிலையை உருவாக்கல், தொழிலில் வாழ்வாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் புதிய அரசாங்கத்தின் ‘‘வளமான நாடு அழகான வாழ்க்கை’’ எனும் கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவம் - தரமான மீன் வளம் ஒரு முக்கிய கொள்கையாகவும் அதற்கேற்ப வேலைத்திட்டங்கள்/ செயற்றிட்ட மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கு 2026ஆம் ஆண்டுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அனைத்து மீன் உற்பத்திகளின் பங்களிப்பு

## 1.1. வருடாந்த மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்

2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்தெம்பர் வரையான காலப் பகுதியில் நாடு முழுவதிலுமுள்ள மீன் உற்பத்தி 281,755 மெற்றிக் தொன்னாகும். இதற்கு கரையோர கடற்றொழில் துறை அதிக பங்களிப்பு வழங்கியுள்ளது. இதன் முன்னேற்றம் 45.6% மாகும். இது முறையே 38.7% மும், ஆழ் கடல் மற்றும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கையில் 15.7% மும் நீர்வாழின வளர்ப்பின் மூலம் பங்களிப்பாக கிடைத்துள்ளது.

## 1.2 உவர்நீர் மீன் உற்பத்தி (கரையோர, கரைக்கப்பால்/ ஆழ்கடல்)

அனைத்து மீன் உற்பத்திக்கு கரையோர மற்றும் ஆழ்கடலின் பங்களிப்பு முறையே அதிகரிப்பதற்கான இயலுமை கிடைத்துள்ளது. 2025ஆம் ஆண்டின் ஜனவரி முதல் செப்தெம்பர் வரையான காலப் பகுதியில் ஆழ்கடல் கடற்றொழில் கைத்தொழிலின் ஊடாக 109,085ක් மெ. தொன் மீன்களும் கரையோர கடற்றொழிலின் ஊடாக 128,310மெ. தொன் மீன்களையும் அறுவடையாகப் பெறக்கூடியதாக இருந்தது. அத்துடன் அனைத்து உவர்நீர் மீன்களின் அறுவடை 237,395 மெற். தொன்னாகவும் உள்ளது.

## 1.3. நன்னீர் மற்றும் நீர்வாழின உற்பத்தி

2025 ஜனவரி முதல் செப்தெம்பர் வரையான காலப் பகுதியில் அனைத்து நன்னீர் மற்றும் நீர்வாழின மீன் உற்பத்தி 44,360 மெற்றிக் தொன்னாகும். அத்துடன் அனைத்து மீன் உற்பத்திக்கு இதன் பங்களிப்பு 15.7 % ஆக இருந்தது.

2025 செப்தெம்பர் 30 வரையான காலப் பகுதியில் அனைத்து மீன் குஞ்சுகளின் உற்பத்தி 51.44 மில்லியனாக இருந்ததுடன் இதில் 19.01 மில்லியன் தேசிய நீர்வாழ் உயிரின இனப்பெருக்க நிலையத்தின் ஊடாக உற்பத்தி செய்யப்படுவதுடன், மீதி சமூக அடிப்படையிலான மீன் குஞ்சு உற்பத்தி அலகு, தனியார் குளங்கள், நீர்நிலைக்குள், வலைக் கூடுகள் மற்றும் கொட்டு ஆகியவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

2025 செப்தெம்பர் 30 வரையான காலப் பகுதியில் நன்னீர் இறால் குடம்பிகள் உற்பத்தி 29.08 மில்லியனாகும். இதில் 16.57 மில்லியன் நீர்வாழ் உயிரினச் செய்கை நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் மீதி தனியார் தரப்பினரின் பங்களிப்பாகவும் கிடைத்துள்ளது.

அவ்வாறே அனைத்து தனியார் தரப்பினரால் 611 மில்லியன் உவர்நீர் இறால் குடம்பிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் தேசிய மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான வாய்ப்புக்களை விரிவுபடுத்தி மக்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தல், தொழில் வாய்ப்பு, ஏற்றுமதி அதிகரிப்பு மற்றும் கிராமிய பொருளாதார நிலையை வலுப்படுத்த உச்ச பங்களிப்பைப் பெறும் நோக்குடன் தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் பாரம்பரிய அடிப்படை மீன் செய்கை திட்டங்கள் பல பல்வேறு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

| *அட்டவணை 1.1* - **2025 மீன் உற்பத்தி சம்பந்தமான தரவு**<br>மீன் உற்பத்தி (மெ.தொ.) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடற்றொழில் உபபிரிவு | | 2020 | 2021 | 2023 | 2024 | **2024** (ஜன-செப்) | 2025 (ஜன-செப்) | ஊமாற்றம 2025-2024 (%) | சதவீதம (%) |
| 1 | ஆழ்கடல | 144,370 | 153,415 | 128,950 | 143,390 | 105,330 | 109,085 | 3.56 | 38.7 |
| 2 | கரையோர | 182,560 | 178,260 | 164,995 | 165,040 | 124,090 | 128,310 | 3.40 | 45.5 |
| | **மொத்தம** | **326,930** | **331,675** | **293,945** | **308,430** | **229,420** | **237,395** | 3.48 | 84.3 |
| 3 | நன்னீர | 84,310 | 80,720 | 93,440 | 87,210 | 70,375 | 34,290 | (51.28) | 12.2 |
| 4 | உயிரினச் செய்கை | 10,140 | 9,105 | 8,085 | 7,800 | 6,560 | 4,530 | (30.95) | 1.6 |
| 5 | இறால | 7,360 | 14,410 | 11,600 | 7,320 | 5,735 | 5,540 | (3.40) | 2.0 |
| | மொத்தம | **101,810** | **104,235** | **113,125** | **102,330** | **82,670** | **44,360** | (46.34) | 15.7 |
| | **அனைத்து உற்பத்தி** | **428,740** | **435,910** | **407,070** | **410,760** | **312,090** | **281,755** | (9.72) | 100.0 |

*அகாாம் - பள்ளிவிபாவியல் பிரிவ – கடல்றொமில் அமைச்சு*

| **அட்டவணை 1.2.இல் மீன் உற்பத்தி சம்பந்தமான தரவு**<br>பிரிவு ரீதியான மீன் உற்பத்தி (மெ.தொ.) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **உவர்நீர் மீன் உற்பத்தி** | | | **நன்னீர் மீன் உற்பத்தி** | | | | **அனைத்து உற்பத்தி** |
| | **கரைக் கப்பால்** | **கரையோர மற்றும் கடனீரேரி** | **மொத்த உவர்நீர** | **நன்னீர** | **நீர்வாழ உயிரின** | **இறால** | **மொத்த நன்னீர்** | |
| 2025 | 109,085 | 128,310 | 237,395 | 34,290 | 4,530 | 5,540 | 44,360 | 281,755 |
| ஜனவரி | 13,920 | 15,390 | 29,310 | 3,775 | 245 | 470 | 4,490 | 33,800 |
| பெப்ர | 14,520 | 17,230 | 31,750 | 3,325 | 235 | 265 | 3,825 | 35,575 |
| மார்ச் | 13,885 | 16,380 | 30,265 | 3,520 | 285 | 280 | 4,085 | 34,350 |
| ஏப்ரல் | 11,790 | 13,640 | 25,430 | 4,890 | 240 | 480 | 5,610 | 31,040 |
| மேயி | 9,090 | 11,820 | 20,910 | 3,890 | 290 | 790 | 4,970 | 25,880 |
| ஜுன் | 9,150 | 11,990 | 21,140 | 4,265 | 360 | 785 | 5,410 | 26,550 |
| ஜுலை | 11,230 | 13,670 | 24,900 | 3,970 | 530 | 700 | 5,200 | 30,100 |
| ஓகஸ்து | 12,860 | 14,260 | 27,120 | 3,405 | 895 | 1,160 | 5,460 | 32,580 |
| செப். | 12,640 | 13,930 | 26,570 | 3,250 | 1,450 | 610 | 5,310 | 31,880 |

*ஆதாரம் - புள்ளிவிபரவியல் பிரிவு – கடற்றொழில் அமைச்சு*

## 1.4 தனி நபர் மீன் நுகர்வை அதிகரிக்கச் செய்தல்.

மீன் நுகர்வை மேம்படுத்துவதன் ஊடாக இலங்கை மக்களின் போசாக்குக் குறைபாடுகள் ஊட்டச்சத்து இல்லாத ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்க வழி வகுக்கும்

2025 ஜனவரி முதல் செப்தெம்பர் மாதம் வரை தனிநபர் மீன் நுகர்வு நாளொன்றுக்கு 34.03 கிராம் வரை அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த தனிநபர் மீன் நுகர்வை அதிகரிக்கச் செய்வதற்கு தேசிய உவர்நீர் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் மீன் உற்பத்தியின் பங்களிப்பாகும்.

## 1.5 மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்தல்.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் முக்கிய மீன் மற்றும் மீன் பொருட்கள் ஸ்ப்ராட்கள்இ உலர் மீன்இ கானாங்கெளுத்தி மற்றும் உண்ணக்கூடிய மீன்கள் ஆகும். மொத்த இறக்குமதியில் உலர் மீன் மற்றும் ஸ்ப்ராட்கள் அதிக பங்களிப்பை வழங்குகின்றன. இறக்குமதி செய்யப்படும் மீன்களில் 80.3மூ கானாங்கெளுத்தி ஆகும்இ இது உள்ளூர் மீன் உற்பத்தி பற்றாக்குறை காலத்தில் உள்ளூர் பதிவு செய்யப்பட்ட மீன் தொழிலுக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. உள்நாட்டு மீன் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்ப இந்த இறக்குமதிகள் மிகவும் முக்கியம். 2025 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில்இ 42,796.3 மெட்ரிக் டன் மீன் மற்றும் மீன் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டனஇ இதன் மதிப்பு ரூ. 25,993.1 மில்லியன் ஆகும்.

**அட்டவணை 1.3- இறக்குமதி செய்யப்பட்ட மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் பெறுமதி (ரூபா மில்)**

| வகை | 2022 | 2023 | 2024 | 2024 (ஜன-செப்) | 2025 (ஜன-செப்) | வேறுபா % 2025/ 2024 | முழு முன்னே ற்றம |
|---|---|---|---|---|---|---|---|
| கருவாடு | 3,470 | 3,511 | 5,331 | 3,793.1 | 4,234.1 | 11.6 | 16.3 |
| காய்ந்த நெத்தலி | 9,955 | 9,011 | 14,610 | 9,430.9 | 8,159.5 | -13.5 | 31.4 |
| மாசி | 926 | 926 | 1,422 | 929.5 | 1,147.3 | 23.4 | 4.4 |
| ரின் மீன | 2,672 | 6,173 | 3,318 | 2,815.6 | 75.2 | -97.3 | 0.3 |
| மீன் உணவு | 2,108 | 2,744 | 5,186 | 3,884.6 | 6,156.3 | 58.5 | 23.7 |
| உயிர் மீன | 430 | 369 | 486 | 354.9 | 369.2 | 4.0 | 1.4 |
| ஏனைய | 2,103 | 4,001 | 6,320 | 5,270.1 | 5,851.4 | 11.0 | 22.5 |
| **மொத்தம்** | 21,664 | 26,734 | 36,672 | 26,478.6 | 25,993.1 | -1.8 | 100.0 |

*ஆதாரம் - புள்ளிவிபரவியல் பிரிவு – கடற்றொழில் அமைச்சு*

## 1.6. மீன் ஏற்றுமதி.

ஏற்றுமதி துறையில் மீன் உணவு, அலங்கார மீன் மற்றும் கடல் தாவரம் போன்றவை ஏற்றுமதி செய்வதன் ஊடாக தேசிய பொருளதாரத்தை வலுப்படுத்த கடற்றொழில் பிரிவானது முன்னணி பங்களிப்பு வழங்குகின்றது. இந்த விடயங்களை முன்னெடுத்து செல்வதில் இறக்குமதி செய்யப்படும் நாடுகளின் தரநியமங்களுக்கு அமைய, தரம் வாய்ந்த உயர்தர மீன்கள் உற்பத்தி செய்வதற்கு இந்த விடயத்தில் ஈடுபடும் தரப்பினர்களுக்கு முறையான வழிகாட்டுதலையும் உதவிகளையும் வழங்குவதன் மூலம் கடற்றொழில் துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| அட்டவணை 1.4- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி தொகை மற்றும் பெறுமதி (ரூபா மில்) | | | | |
|---|---|---|---|---|
| மீன் இனம | மீன் ஏற்றுமதி தொகை (மெ.தொ.) | | ஏற்றுமதி பெறுமானம் (ரூ.மில்) | |
| | 2024 | 2025 ஜன - செப். | 2024 | 2025 ஜன - செப். |
| உயிர் மீன் | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று | 7,392 | 5,385.2 |
| இறால் | 3,432 | 2,183.0 | 8,921 | 6,064.3 |
| சிங்கி இறால் | 82 | 76.9 | 790 | 689.7 |
| நண்டு | 2,187 | 1,273.7 | 9,056 | 6,623.6 |
| கடலட்டை | 252 | 224.1 | 3,202 | 2,296.8 |
| ஏனைய பாலூட்டிகள | 2,211 | 1,935.0 | 4,367 | 3,695.6 |
| சுறா | 100 | 48.2 | 1,175 | 403.2 |
| மீன் குடல் | 10 | 7.0 | 290 | 145.7 |
| சிப்பி மற்றும் தோடுடைய மீன் | 465 | 180.8 | 234 | 144.6 |
| தயாரித்த மீன | 13,451 | 12,354.9 | 49,731 | 42,595.5 |
| ஏனையவைகள் | 367 | 352.0 | 1,082 | 844.7 |
| **மொத்தம்** | 22,556 | 18,635.5 | 86,241 | 68,889.0 |

## 1.7. அலங்கார மீன் ஏற்றுமதி

தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிவிருத்தி அதிகாரசபை புதிய அலங்கார மீன் இனத்தை அறிமுகப்படுத்தல், இனப்பெருக்க நடவடிக்கை, நோய்த் தொற்றைத் தடுத்தல், மற்றும் நோய் பரவுதலைக் கட்டுப்படுதல், தரமான நிலையிலுள்ள தாய் மீன்களை வழங்கல், சிறந்த தரமான மீன் உணவை வழங்கல் மற்றும் சம்பந்தப்பட்ட பண்ணையாளர்களுக்கு பயிற்சி வழங்கல், நாரா நிறுவனத்தின் உதவியுடன் புதிய மீன்களின் தலைமுறை ஏற்படுத்தல், தொழில்நுட்ப அபிவிருத்தி, மீன் நோய் சிகிச்சை, செய்கையாளர்களுக்கு கடன் பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்தல் போன்ற அலங்கார மீன் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2025 ஆம் ஆண்டு ஜனவரி – செப்தெம்பர் மாதம் வரை அலங்கார மீன் ஏற்றுமதியில் ரூபா 5,382.9 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது.

## கடற்றொழில், நீரியல் மற்றும்  சமுத்திர வளங்கள் அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம்

கடற்றொழில் துறையின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் திட்டமிடுதல், செயற்படுத்தல், மற்றும் அனைத்து கடற்றொழில் அபிவிருத்திக்குத் தொடர்பான பணிகளில் செல்வாக்குச் செலுத்தும் கொள்கை தயாரித்தல் என்பன அமைச்சின் முன்னுரிமைக்கான பொறுப்பாகும். இதற்கமைய கடற்றொழில் பிரிவு தொடர்பாக இந்நாட்டின் தேசிய கொள்கையின் கடல்சார் மீன்பிடி உற்பத்தியை மேம்படுத்தல், நன்னீர் நீர்வாழின வளர்ப்பு மற்றும் நன்னீர் உற்பத்திகளை அதிகரித்தல், அறுவடையின் பின்னரான இழப்புகளை குறைத்தல் மற்றும் பெறுமதி சேர்வை மேம்படுத்தல், தனிநபர் மீன் நுகர்வை அதிகரித்தல், ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், தொழில் மற்றும் செயற்றிட்ட அபிவிருத்திக்கு தற்போதுள்ள வாய்ப்புகளை அதிகரித்தல், மீனவ மக்களின் சமூகப் - பொருளாதார நிலையை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களை அணுகுவதற்குத் தேவையான சகல வேலைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்தல் என்பன இந்த அமைச்சின் பிரதான பொறுப்புகளாகும்.

1. கடனீரேரிகளை சுத்தம் செய்தல் மற்றும் பாதுகாத்தல

    1.1 நீர்கொழும்பு கடனீரேரி அபிவிருத்தி

**செயற்றிட்டம் தொடர்பான விபரம்**:

இந்த செயற்றிட்ட 3 கட்டங்களாக செயற்படுத்தப்படுகிறது. இதன் கட்டம் I இன் கீழ் செயற்படுத்தப்படும் பெக்கேஜின் எண்ணிக்கை 7 ஆகும். இதற்கான மொத்த தொகை ரூபா 1,000 மில்லியனாகும்.




1. பெக்கேஜ் III இன் கீழ் றெஜின வீதியின் கடனீரேரி அபிவிருத்தி

பெக்கேஜ் III இன் கீழ் றெஜின வீதியின் கடனீரேரிக்கு அருகில் கடனீரேரியைத் தோண்டும் நடவடிக்கை 20.07.2018இல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது கடனீரேரி பௌதீக முன்னேற்றம் 90% மாகும்.





I. **தாமதத்துக்கான காரணம்**

செயற்றிட்டத்தின் 3வது கட்டத்தை செயற்படுத்தும்போது, கடனீரேரியிலிருந்து அகற்றிய சேற்று மண் காயும்வரை செயற்றிட்ட எல்லையில் வைத்திருந்தமையால் கண்டத் தாவர சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக கூறப்பட்டு வன பாதுகாப்பு திணைக்களத்தினால் ஒ.வி. 20(1)வது பிரிவின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.
(செயற்றிட்டத்தின் 3வது கட்டம்) கடனீரேரியில் சேற்று மண்ணை அகற்றி அது காயும் வரை செயற்றிட்ட எல்லையில் வைத்திருந்த மண் நீர்கொழும்பு பொலிஸில் முறையான பாதுகாப்பு கிடைத்த பின் அந்த சேற்று மண்ணை அகற்றும் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

II. **பக்கேஜ் VI – நீதிமன்ற கட்டிட வளாகத்திற்கு அருகேயுள்ள பிரதேசத்தில் ஜெட்டி அமைத்தல்**

பக்கேஜ் VI இன் கீழ் 15 மீற்றர் அகலமும் 100 மீற்றர் நீளமுமமான ஜெட்டி நிர்மாணிகக்கடவுள்ளது. தற்போது திட்டம் மற்றும் கேள்வி கோரலுக்கான கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தகாரர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




## 2 கந்தர மீன்பிடித் துறைமுகம் நிர்மாணம்

i. செயற்றிட்டத்தின் தொடர்பான விபரம் ව්‍යාපෘතිය පිළිබඳ විස්තරය :

- நீர்த்தடுப்பணை நிர்மாணித்தல்
- மேடைக்கட்டு நிர்மாணம்
- கரையோர வசதிகள் )Shore facilities) முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீன் ஏலவிற்பனை நிலையம், வலை திருத்தும் நிலையம், துப்புரவேற்பாட்டு வசதிகள், கடைத் தொகுதி, பணிக்குழுவினர் இளைப்பாறும் இடம், பாதுகாப்பு படையணி, ஆகியோர்களுக்கு அலுவலக, தங்குமிட வசதி, எரிபொருள் நிரப்பு நிலையம், கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் இடம், எடை பார்க்கும் இடம், எரிபொருள் வழங்கும் நடவடிக்கை மற்றும் நீர்த் தொட்டி போன்ற நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ii. செயற்றிட்டம் ஆரம்பம்: 2020.12.07

iii. செயற்றட்டம் நிறைவடைதல் : 2026 திசம்பர் (அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது)

iv. திருத்தப்பட்ட செயற்றிட்டத்திட்டத்தின் பெறுமதி : ரூபா 11,354 (எதிர்பாரா செலவு 10% வெட் வரி இன்றி)

v. செயற்றிட்டத்தின் நிதி முன்னேற்றம் :

| வருடம் | நிதி ஒதுக்கீடு ரூபா மில். | செலவினம் ரூபா மில். | குறிப்பு |
|---|---|---|---|
| 2020 | 408 | 202.48 | |
| 2021 | 1,710 | 1,595.30 | |
| 2022 | 1,599.44 | 1,145.43 | |
| 2023 | 2534.59 | 2,353.00 | |
| 2024 | 3,199.90 | 2,795.2 | |
| 2025 | 1,328 | 697.0 | 2025.08.31 திகதியில் |

vi. **பௌதீக முன்னேற்றம்**:

பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு.

அதற்கமைய கந்தர மீன்பிடித் துறைமுகத்தின் நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் 2015.08.31 இல் எதிர்பரக்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் 87.51% ஆக இருந்ததுடன் அதன் பௌதீக முன்னேறம் 78% ஆகும்.



நீர்ததடுப்பணை



மேடைக்கட்டு நிர்மாணித்தல்



Travel lift bay நிர்மாணம்



மீக்பிடி அலுவலகம் நிர்மாணிததல்



நிலத்தடி நீர்த்தாங்கி நிர்மாணம்



எரிபொருள்அலுவலகம் நிர்மாணித்தல



நிர்வாக அலுவலகம்





## 3 மைலிட்டி கடற்றொழில் துறைமுகம்

இந்த கடற்றொழில் துறைமுகத்தின் அலை தடுப்பணை. படகுத்துறை, படகு வெளிச்சம், பிரவேச கால்வாய் உட்பட துறைமுக தடாக சேற்று மண் அகழ்தல், கரையோர வசதிகளை வழங்குவதற்கு ஏலவிற்பனை நிலையம், வலை பழுதுபார்க்கும் கூடம், களஞ்சியப்படுத்தும் தொட்டியுடன் எரிபொருள் நிரப்பு நிலையம் திருத்துதல், சனசமூக நிலையம், நிர்வாக அலுவலகம், நிர்வாக அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வீடு, பொது வசதிகள் மற்றும் கரையோரம் சார்ந்த அடிப்படை வசதிகள் போன்ற துறைகளில் பல செயற்றிட்டங்களின் கீழ் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதற்கமைய Iஆம் கட்டம் மற்றும் IIஆம் கட்ட வேலைகளை நிறைவு செய்து செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சீனோர் கம்பனியினால் III ஆம் கட்ட நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

### IIIஆம் கட்டம்

IIIஆம் கட்டத்தின் கீழ் கரையோர வசதிகளை வழங்குவதற்கு ஏலவிற்பனை நிலையம், நிர்வாக அலுவலகம், நிர்வாக உத்தியோகத்தர்ளுக்கான உத்தியோகபூர்வ வதிவிடம் பொது வசதிகள், கரையோரம் சார்ந்த அடிப்படை வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டம் 2026ஆம் ஆண்டில் நிறைவடையவுள்ளது.






4 **சாத்தியக் கூற்று ஆய்வு, திட்டம் தயாரித்தல் மற்றும் சுற்றாடல் தாக்க ஆய்வு மேற்கொள்ளல்**

**அம்பலாங்கொட மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல்**

அம்பலாங்கொட மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல் - திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுற்றாடல் தாக்க அறிக்கை (EIA) தயாரித்து நிறைவடைந்துள்ளதுடன், அவ் அறிக்கை கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் தொழிநுட்பக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



**ஹிக்கடுவை மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல்,**

ஹிக்கடுவை மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல் - திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுற்றாடல் தாக்க அறிக்கை (EIA) தயாரித்து நிறைவடைந்துள்ளதுடன், அவ் அறிக்கை கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் தொழிநுட்பக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



**வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்தல்,**

- வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி செய்தல் - திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (IEE) தொடர்பாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 2026 ஆண்டில் செயற்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

**தொடந்துவ மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல்**

- தொடந்துவை மீன்பிடித் துறைமுகம் மேம்படுத்தல் - திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுற்றாடல் தாக்க அறிக்கை (EIA) தயாரித்து நிறைவடைந்துள்ளதுடன், அவ் அறிக்கை கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் தொழிநுட்பக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5 **<u>மாவெல்ல நங்கூரமிடும்தளம் நிர்மாணித்தல்.</u>**

சுற்றாடல் அனுமதி தொடர்பாக கரையோரம் பேணல் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நிர்மாணம் தொடர்பாக தரப்பினர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. கடலரிப்புக்கு கட்டமமைப்பு திட்டத்துக்கு தரப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே திட்டம், கேள்விகோரல் தொர்பாக கேள்வி அட்டவணை தயாரிப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளதுடன், தற்போது ஒப்பந்தகாரர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக பெறுகை நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படவுள்ளது.

**6 <u>ரெக்காவ நங்கூரமிடும்தளம் நிர்மாணித்தல்.</u>**

- திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. NPD க்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**7 வடமாகாணத்தில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல்**

2024 வரவு செலவு திட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள படகுத்துறை மற்றும் நங்கூரமிடும்தளம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2025 வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் வட மாகாணத்தில் காணப்படுகின்ற மீன்பிடி படகுத்துறை மற்றும் நங்கூரமிடுதளம் அபிவிருத்தி தொடர்பாக ரூபா 280 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்ளில் தற்போதுள்ள 62 படகுத்துறைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

செயற்றிட்ட நிதி முன்னேற்றம் ரூபா 183.41 மில்லியன் ஆகும். (2025.08.31 திகதியளவில்) தற்போது பளிகள் நிறைவடைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 4 படகுத்துறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

- வாய்க்கால் தோண்டுதல் பள்ளிமுனை கரையோர வீதி – 100%
- சவேரியார்புரம் கரையோர வீதி 700 மீற்றர் நிர்மாணித்தல் – 100%
- தோமஸ்புரம் சிலாவத்துறை கரையோர வீதி 500 மீற்றர் நிர்மாணித்தல் -100%
- கொண்டச்சிக்குடா/ கொக்குபடையான் கரையோர வீதிநிர்மாணித்தல் – 100%

<u>முல்லைத்தீவு மாவட்டம்</u>

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 மீன்பிடி படகுத்துறை அபிவிருத்தி செய்தல்.**

- இரணைபாளை அந்தோனியார் கோவில் வீதி 500 மீற்றர் அபிவிருத்தி – 100%
- தீர்த்தக்கரை மீன்பிடி படகுத்துறை வலை திருத்தும் கட்டிட நிர்மாணம் – 100%
- செம்மலை கிராம சபை வீதி 900 மீற்றர் அபிவிருத்தி – 100%
- நீதாளி முள்ளிவாய்க்கால் சின்னப்பர் கோவில் வீதி 900மீ.அபிவிருத்தி – 100%
- உப்புவெளி வீதி 900 மீற்றர் அபிவிருத்தி – 100%

**<u>கிளிநொச்சி மாவட்டம்</u>**

கிளிநொச்சி மாவட்டத்தில் 09 மீன்பிடி படகுத்துறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதினுள்,

- படகுப் பாதைகள் 03 சுத்தம் செய்தல்

  - ✓ நாச்சிக்குடா இரணைமாதா நகர் படகுத்துறை பிரவேச வீதி சுத்தம் செய்தல். - 100%
  - ✓ நாச்சிகுடா யஹ்பர் படகுத்துறை பிரவேச வீதி சுத்தம் செய்தல் - 100%
  - ✓ பூனகரி வளைமதி படகுத்துறை பிரவேச வீதி சுத்தம் செய்தல்- 100%

- **வலை திருத்தும் கட்டிடம் 01 நிர்மாணம்**

  - ✓ நாச்சிக்குடா,நல்லாயன் படகுத்துறை வலை திருத்தும் கட்டிட நிர்மாணம்.- 100%

- மீன் ஏலவிற்பனை நிலையம் 01 இன் மறுசீரமைப்பு

  - ✓ நாச்சிக்குடா குமுலமுனை மீன் ஏலவிற்பனை நிலையம் மறுசீரமைப்பு - 100%

- மீன் ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் 02 நிலையங்களின் மறுசீரமைப்பு
  - ✓ நாச்சிக்குடா கிரஞ்சி ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் நிலையத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை - 100%
  - ✓ பூநகரி கவுதாரிமுனை கிரஞ்சி ஏலவிற்பனை நிலையம் மற்றும் வலை திருத்தும் நிலையத்தின் மறுசீரமைப்பு - 100%

- வீதி அபிவிருத்தி 01,

நாச்சிக்குடா வளைபாடு புனித ஆனால் கோவில் வீதி 700 மீற்றர் அபிவிருத்தி- 100%

- கலங்கரை விளக்கு பொருத்துதல்

  - ✓ பளை கிளாளி கலங்கரை விளக்கு பொருத்துதல் - 100%

**<u>யாழ்பாண மாவட்டம்</u>**

யாழ்பாண மாவட்டத்தில் மீன்பிடி படகுத்துறை அபிவிருத்தி I கட்டம் மற்றும் II கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் பெறுகை நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

- ✓ கட்டம் I - பெறுகை நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இதில்
  - ✓ படகுகள் பயணம் செய்கின்ற 25 படகுத்துறைகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.
  - ✓ 17 படகுத்துறைகளில், படகுத்துறைகள் மற்றும் வீதிகளுக்கு சூரிய சக்தி வெளிச்சம் பொருத்துதல்
- ➢ **கட்டம் II - பெறுகை நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது இதன்மூலம் -**
  - ✓ கட்கோவலம் தீர்த்தக்கரை கரையோரப் பாதை மதகு நிர்மாணித்தல். - 100%
  - ✓ உதயபுரம் கரையோரப் பாதை 1700 மீற்றர் மறுசீரமைப்பு - 100%
  - ✓ குருநகர் ஏல விற்பனை நிலைய வாகன தரிப்பிடம் மறுசீரமைப்பு - 100%

## அமைச்சின் பரப்பெல்லையினுள் ஏற்புடைய பிற பணிகள்

**தேசிய தேசஎல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசங்களின் சமுத்திர உயிர் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நீடு நிலைத்த பயன்பாடு சம்பந்தமான சமுத்திர சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அரச பங்குதாரராக இலங்கை விளங்குகின்றது.**

இலங்கை, தேசிய தேசஎல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசங்களின் சமுத்திர உயிர் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நீடு நிலைத்த பயன்பாடு சம்பந்தமான சமுத்திர சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயம் (தேசிய தேசஎல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசங்களின் சமுத்திர உயிர் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நீடு நிலைத்த பயன்பாடு சம்பந்தமான உடன்படிக்கை) தொடர்பான பின்னர் அங்கீகரிக்கப்படட ஆவணம், சமவாயத்தின் அரச பங்குதாரராக திகழ்வதுடன், 2025 செப்தெம்பர் 16 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேசஎல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசங்களின் சமுத்திர உயிர் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நீடு நிலைத்த பயன்பாடு சம்பந்தமான உடன்படிக்கை பின் அங்கீகரிக்கப்பட்டமையானது, சமுத்திர கட்டுப்பாடு சம்பந்தமாக இலங்கை தொடர்நதும் வகித்துவரும் தலைமைத்துவத்தின் இன்னுமொரு மைல்கல்லாகும். தேசிய தேசஎல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசங்களின் சமுத்திர உயிர் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நீடு நிலைத்த பயன்பாடு சம்பந்தமான உடன்படிக்கை பின் அங்கீகரிக்கப்பட்டமையானது, தேசிய தேசஎல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசங்களின் சமுத்திர உயிரணு வளங்கள் (MGRs) மற்றும் டிஜிட்டல் தொடர் தகவலகள் (DSI) போன்ற வளங்கள் நியாயமாகவும் நீதியாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டமையினூடாக நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு எமது நாட்டுக்கு வாய்ப்புக் கிட்டுகின்றது. இவ் உடன்படிக்கையின் மூலம் சாத்தியவள விருத்தி மற்றும் சமுத்திர தொழிநுட்ப பரிமாற்றம் தொடர்பாக முன்னுரிமையளிக்கப்படுவதுடன், அதனூடாக இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு சமுத்திர உயிர்பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நீடு நிலைத்த பயன்பாட்டுக்கான தமது திறன்களை விருத்தி செய்துகொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அது மாத்திரமன்றி உயிர்பல்வகைமைகளை பாதுகாப்பதனூடாக காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய திறனை வளர்த்தல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கும், ஏனைய இனங்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கும் எமது நாட்டுக்கு இதனூடாக வாய்ப்புக் கிட்டும் என்பது திண்ணம்.

**இயலளவு விருத்தி தொடர்பான வங்காள விரிகுடா நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இடைநிலை அரச அமைப்புக்கள் ஊடாக, உலக வர்தத்க அமைப்புக்களினால் வழங்கப்படும் கடற்றொழில்சார்ந்த நிவாரண உதவி**

இலங்கையினால், உலக வர்த்தக அமைப்புக்களினால் வழங்கப்படும் கடற்றொழில் சார்ந்த நிவாரண உதவிக்கான உடன்படிக்கையை வரவேற்கும் ஆவணம் கையளிக்கப்பட்டதுடன், உலக வர்த்தக அமைப்புக்களுடன் இணைந்து உடன்படிக்கைக்கான வரவேற்பு ஆவணத்திற்கு 2025 ஆகஸ்ட் 06 ஆந் திகதி உததியோகபூர்வமாக கைச்சாத்திடப்பட்டது. இந் நடவடிக்கையின் ஊடாக இலங்கை ''வளமான நாடு – அழகான வாழ்வு'' எனும் தேசிய கொள்கையின் பாற்பட்ட ஒரு கொள்கையாக விளங்கும் சமுத்திர வளங்களை பொறுப்புடன் முகாமைப்படுத்தும் அர்ப்பணிப்பினை மீண்டும் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

உடன்படிக்கை பின்னங்கீகரிப்பின் ஊடாக சட்ட விரோத, அறிக்கையிடப்படாத மற்றும் கண்காணிக்கப்படாத கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு எதிராக போராடுதல் மற்றும் அதிகளவு மீன்பிடிப்பதிலிருந்து மீன் கையிருப்பினை பேணும் பொருட்டு இலங்கை தமது தேசிய சட்டங்களை பூகோள தரநிர்ணங்களுடன் ஒப்பீடு செய்வதனூடாக, சமுத்திர உயிர்பல்வகைமைகளைப் பாதுகாக்கும் பூகோள ஊக்குவிப்புக்கள் தொடர்பான தமது கருதுகோளுக்கு வலுசேர்ப்பதற்கு ஏதுவாகின்றது எனலாம்.

உடன்ன்படிக்கையின் கீழ் தாபிக்கப்பட்ட விசேட நிதியத்தின் மூலம் தொழிநுட்ப மற்றும் இயலளவு விருத்திக்கான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான செயற்பாட்டில் தற்போது இலங்கை ஈடுபட்டு வருகின்றது,

# 02
# கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்
## (DFAR)

### நோக்கு

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை நீடித்த நிலையில் பேணிக்காத்தவாறு, மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலைமையை வலுப்படுத்துவதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு உன்னதமான பங்களிப்பை வழங்குதல்.

### பணி

கடற்றொழிலின் நீடித்த அபிவிருத்தி மூலம் இலங்கைப் பொருளாதாரத்திற்கு பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்காக, தேசிய மற்றும் சர்வதேச சமுத்திரச் சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு இணங்க புதிய தொழில்நுட்ப வழிமுறைகளைப் பின்பற்றி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை முகாமைத்துவம் செய்தல்.

### குறிக்கோள்கள்

- உள்நாட்டு, சர்வதேச சமுத்திரச் சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு அமைய, மீன்பிடி நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல், முறைப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி செய்தல்.
- மீன்பிடித் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச கடலில் மீன்வளத்தைப் பிடிப்பதற்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.
- மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.
- சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளின் தரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல்.
- அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- சர்வதேச சாசனங்கள் மற்றும் பிராந்திய உடன்படிக்கைகளுக்கு இணங்க மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்தல்.
- துறைமுக அரசு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதித் தொடருக்கு அமைய துறைமுக சேவைகளை நடைமுறைப்படுத்துதல்.
- ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் கலன்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இணையவழி மூலமாக மீனவ மக்களுக்கும் ஏனைய சேவை பெறுவோருக்கும் உன்னதமான சேவையை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இணையவழி மூலமாக மீன்பிடித் துறை தொடர்பான தரவுத் தகவல்களை விரைவாகவும் துல்லியமாகவும் பெற்றுக்கொள்ள முடிதல்.

## பிரதான பணிகள்

- கடற்றொழில் நடவடிக்கைக்கான ஒழுங்குவிதிகளை தயாரித்தல், விதித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும்
 நடைமுறைப்படுத்துதல்..
- கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை தயாரித்தல், விதித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை தயாரித்தல், விதித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- மீன்பிடிக் கலன்களைப் பதிவு செய்தல், அடமானம் வைத்தல் மற்றும் மீன்பிடிச் செயற்பாட்டுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
- உயிருள்ள மீன்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்..
- வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் மீன்களைத் தரையிறக்குவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
- . கடற்றொழில் முகாமைத்துவம் தொடர்பாக மீனவ மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதல்.
- மீன்பிடிப் படகு உற்பத்தி நிறுவனங்களைப் பதிவு செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்..
- மீன்பிடி உள்ளீடுகளை வழங்குவோரைப் பதிவு செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- மீனவ கூட்டுறவுச் சங்கங்களை வினைத்திறன் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
- தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய மீனவ அமைப்புகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடிக் கைத்தொழிலுக்கு அத்தியாவசியமான தரவுகளைச் சேகரித்தல்.
- வெளிநாடுகளால் கைது செய்யப்படும் மீனவர்களையும் படகுகளையும் மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவருதல்.
- கடலில் காணாமல் போகும் மீனவர்களையும் படகுகளையும் மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவருதல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன்களைத் தரப் பரிசோதனைக்கு உட்படுத்துதல்.
- மீன் பதப்படுத்தல் நிலையங்களைப் பதிவு செய்தல் மற்றும் மீன் ஏற்றுமதிக்கான சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குதல்.
- உள்நாட்டுப் பாவனைக்காக மீன்களை விற்பனை செய்யும் இடங்களின் தரத்தை உயர்த்துதல்.
- ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்படும் பல நாள் கலன்களுக்கு, கலன் கண்காணிப்பு சாதனங்களை பொருத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடிக் கலன்களுக்கும் கரைக்கும் இடையே வானொலிச் செய்தித் தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்.
- எல்லைகளை மீறிப் பயணிக்கும் மீன்பிடிப் படகுகள் தொடர்பான அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- நாளாந்த வானிலை அறிக்கைகள் மற்றும் மோசமான வானிலை பற்றிய முன்னறிவிப்புத் தகவல்களைத் தினமும் வழங்குதல்.
- கலன் கண்காணிப்பு முறைமையினால் வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் கலன்களுக்கு அறிவூட்டல்
- அனுமதியற்ற வெளிநாட்டு மீன்பிடிக் கலன்கள் மற்றும் தொழிலாளர்கள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்துதல்.
- மீன்பிடிக் கலன்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அழைப்புச் சமிக்ஞைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மீனவர்கள் மற்றும் படகுகள் தொடர்பான விபத்துக்களின் போது காப்பீட்டுக்காக தகவல்களை உறுதிப்படுத்துதல்.
- சர்வதேச கடல் எல்லைகளில் மிதந்து கொண்டிருக்கும் கப்பல்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்.
- மீனவக் குடும்ப உறுப்பினர்களின் தொழில் கல்விக்காகப் பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.
- மீனவர் தொழில் காப்பீடு மற்றும் ஓய்வூதிய முறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீனவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- கடனீரேரி அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மீனவக் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- மீனவப் பெண்களுக்கான மாற்று வருமானம் ஈட்டும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

**இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பை வழங்குவதற்காக, வினைத்திறனானதும் சூழல் நேயமுள்ள புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை மேம்படுத்துதல், முறைப்படுத்துதல் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் மீனவ சமூகத்தின் சமூக, பொருளாதார மற்றும் சமூக நலன்புரி நிலையை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன மீன்பிடி அபிவிருத்திப் பிரிவின் முதன்மையான பொறுப்புக்களாகும்.**

## 1.1 கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் அடிப்படைப் பணி

- மீன்பிடிப் படகு உற்பத்தி நிறுவனங்களைப் பதிவு செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடிப் படகு வடிவமைப்புகளுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்
- மீன்பிடி உள்ளீடுகளை வழங்குவோரைப் பதிவு செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடித் துறைக்காக புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
- கரையோர நிர்மாணத் திட்டங்கள் தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகளுக்காக, மீன்பிடித் தொழிலுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பரிந்துரைகளை வழங்குதல்.
- மீன்பிடித் துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
- மாற்று வருமானம் ஈட்டும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மீனவர்களுக்கான மானியத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மீனவர்களுக்கான கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மீனவர் காப்புறுதியை நடைமுறைப்படுத்துதல்.
- மீனவர் ஓய்வூதிய முறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீனவ சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
- மீனவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- தியவர கெகுளு சிறுவர் சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- கடனீரேரி சூழற்றொகுதியின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை முறைப்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கடனீரேரி அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- சகல மாவட்ட அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து முன்னேற்ற மீளாய்வு செய்தல்.
- விசேட மீன்பிடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்

## 1.2 மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்

**அட்டவணை 01: மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றம்**

| செயற்பாடு | 2025.08.31 வரையான முன்னேற்றம் |
|---|---|
| காப்புறுதி செய்யப்பட்ட மொத்த மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை | 27,986 |
| காப்புறுதி செய்யப்பட்ட மொத்த மீன்பிடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 10,194 |
| மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பு செய்தவர்களின் எண்ணிக்கை | 69,095 |
| கடற் பயணத் தகைமைச் சான்றிதழ்களை வழங்குதல | 28,421 |
| மீன்பிடிக் கலன் கட்டும் தளங்களைப் பதிவு செய்தல் | 35 |
| மீன்பிடி உபகரணங்களை வழங்குவோரைப் பதிவு செய்தல | 19 |
| மீன்பிடிக் கருவிகள் வழங்குவோரைப் பதிவு செய்தல் | 07 |
| இயற்கை அனர்த்தங்களுக்கான இழப்பீடுகளை வழங்குதல | 02 |
| தியவர கெகுளு சிறுவர் சேமிப்புக் கணக்குகளைத் திறத்தல | 316 |
| வழங்கப்பட்டுள்ள மொத்த மீனவர் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | 1528 |
| வழங்கப்பட்டுள்ள மொத்தப் கலன் ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 871 |

### 1.3 தியவர திறிய கடன் திட்டம்

தியவர திறிய முதலாம் (I) கட்டத்தின் கீழ் 755 பயனாளிகளுக்கு ஒரு பில்லியன் ரூபா கடன் தொகையும், தியவர திறிய இரண்டாம் (II) கட்டத்தின் கீழ் 1017 பயனாளிகளுக்கு 1.8 பில்லியன் ரூபா கடன் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் இதன் 4% வட்டி தவணைப் பணம் இலங்கை வங்கிக்கு அனுப்பப்படுவதுடன், அது 2031 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட வேண்டியுள்ளது.

### 1.4 2025 ஆம் ஆண்டில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம்

#### 1.4.1 பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடிக் கைத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் குறைத்து, மீன்பிடிக் கைத்தொழிலை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் வேலைத்திட்டம்.

பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடிக் கைத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் குறைத்து, மீன்பிடிக் கைத்தொழிலை வழமைக்குக் கொண்டுவரும் வேலைத்திட்டத்தின் கீழ், தற்போது 15 மீன்பிடி மாவட்டங்களுக்கு உரிய OFRP, IMUL, IDAY, MTRB படகு உரிமையாளர்கள் 154,035 பேருக்கு, 2024 ஒக்டோபர், நவம்பர், டிசம்பர், 2025 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்காக ரூபாய் 2,086,706,652.52 தொகை விநியோகிக்கப்பட்டுள்ளது.

#### 1.4.2 மே மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற MV X-Press Pearl சரக்குக் கப்பல் தீ விபத்துச் சம்பவத்தினால் மீன்பிடித் துறைக்கு ஏற்பட்ட தாக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்

சரக்குகளை ஏற்றிச் சென்ற MV X-Press Pearl கப்பலில் 2021.05.20 அன்று கொழும்பிற்கு அருகிலுள்ள கடலில் தீ விபத்து ஏற்பட்டது. ஆரம்பத்தில் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும், அது மீண்டும் பரவி பல நாட்களுக்கு நீடித்தது. 2021.06.02 அன்று பமுணுகம கடற்கரைக்கு அப்பால் இக் கப்பல் முற்றிலுமாக மூழ்கியதுடன், இது நாட்டின் கடல் சூழலுக்கு இதுவரை ஏற்பட்ட மிக மோசமான அனர்த்தம் என அழைக்கப்படுகிறது.
விஷத்தன்மை வாய்ந்த/அபாயகரமான இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட கடல் மாசுபடலுக்கு காரணமான, 20 கொள்கலன்களில் இருந்த 46,960 குறைந்த அடர்த்தி மற்றும் உயர் அடர்த்தி பொலிஎதிலீன் பைகள் மூலம் மேற்கு கடற்கரையில் குறைந்தது 70-75 பில்லியன் பிளாஸ்டிக் துகள்கள் சிதறடிக்கப்பட்டன. கடல் மாசு காரணமாக ஆமைகள், டொல்பின்கள், திமிங்கலங்கள் மற்றும் சம்பவத்திற்குப் பின் கரையில் ஒதுங்கிய மீன் இனங்கள் அதிக எண்ணிக்கையில் இறந்தன, மேலும் இந்த அனர்த்தத்திற்குக் காரணம் கடல் மாசுதான் என்பது உறுதி செய்யப்பட்டது.
அதிகப்படியான கடல் மாசுபாடு காரணமாக, மேற்கு கடலோரப் பகுதியில் ஒரு வருடத்திற்கும் மேலாக அரசாங்கத்தால் மீன்பிடித் தடை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதியில் நீண்ட காலமாக காணப்பட்ட மீன்பிடித் தடை காரணமாக, நேரடி மீனவர்கள் மற்றும் மீன்பிடித் துறையின் மறைமுகப் பயனாளிகள் கணிசமான அளவு இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட தரப்பினராக 23 வகையிலான மீனவர்களும், மீன்பிடித் தொழிலுடன் தொடர்புடைய 24 வகையான ஏனைய தொழில்களும் அடையாளம் காணப்பட்டன.

அட்டவணை 02 : பாதிக்கப்பட்ட நேரடி மீனவர்கள் பற்றிய தகவல்கள்

| மாவட்டம் | நேரடியாகப் பாதிக்கப்பட்ட கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட நேரடி மீனவர்களின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட மறைமுக மீனவர்களின் எண்ணிக்கை |
|---|---:|---:|---:|
| கம்பஹா | 13 | 11,081 | 3,866 |
| கொழும்பு | 10 | 3,250 | 851 |
| களுத்துறை | 02 | 701 | 171 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரடி மீனவர்களுக்கு 4 கட்டங்களாகவும், மறைமுக மீனவர்களுக்கு ஒரு கட்டமாகவும் பின்வருமாறு இதுவரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 03 : வழங்கப்பட்ட இழப்பீட்டின் அளவு

| மாவட்டம் | **வழங்கப்பட்ட இழப்பீட்டின் அளவு** (ரூபாய் ) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1ஆம் கட்டம் (ரூ) | 2ஆம் கட்டம் (ரூ) | 3ஆம் கட்டம் (ரூ) | 4ஆம் கட்டம் (ரூ) | மொத்தத் தொகை (ரூ) |
| கம்பஹா | 206,197,500.00 | 242,825,000.00 | 551,220,000.00 | 1,006,356,485. 90 | 2,006,598,985.90 |
| கொழும்பு | 58,942,500.00 | 74,720,500.00 | 205,233,125.00 | 300,846,344.00 | 639,742,469.00 |
| களுத்துறை | 14,170,000.00 | 16,312,500.00 | 37,285,000.00 | 72,880,360.00 | 140,647,860.00 |
| வலைக் கருவிகளுக்கு | 2,067,515.00 | | | 4,474,410.00 | 6,541,925.00 |
| நீர்வாழ் உயிரின வளர்ப்புகளில் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு | | 1,154,930.00 | | | 1,154,930.00 |
| மொத்தத் தொகை (ரூ) | 281,377,515.00 | 335,012,930.00 | 793,738,125.00 | 1,384,557,599.90 | 2,794,686,169.90 |

**நிர்வாகச் செலவின கொடுப்பனவு வழங்குதல்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் தீப்பிடித்து மூழ்கியதால் ஏற்பட்ட சேதங்களை அடையாளம் காண்பதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பல அரச நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டன. அதற்காக, இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபை, தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையம், மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகிய அரச நிறுவனங்கள் மிகப்பாரிய பங்களிப்பை வழங்கியதோடு, இப்போதும் தேவையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

அதன்படி, மீன்பிடித் துறைக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுதல், வாழ்வாதாரத்தை இழந்தவர்களை அடையாளம் காணுதல் மற்றும் நட்டஈடு வழங்குதல் உள்ளிட்ட நிர்வாகப் பணிகளைச் செய்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 292 அலுவலர்களுக்கு, 2021.05.21 ஆம் திகதி முதல் அவர்கள் ஆற்றிய கடமைகளுக்காக கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மீனவர்களால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட போதிலும் நட்டஈடு கோர முடியாமல் போன மீனவர்கள் மற்றும் மீன்பிடிச் சார் தொழில்களைச் செய்தவர்கள் என்று கூறி, தனிநபர்களால் அவ்வப்போது மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த மேன்முறையீடுகள், மேன்முறையீட்டுக் குழுக்கள் மற்றும் கிராமிய, பிரதேச, மாவட்டக் குழுக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு, உண்மையாகவே பாதிக்கப்பட்ட நபர்கள் பரிந்துரைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திடம் சமர்ப்பிப்பதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சிடம் அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக அமைச்சு வழங்கும் ஆலோசனைகளுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அட்டவணை 04 : மொத்த மேன்முறையீடுகளின் சுருக்கம்

| | **மொத்த மேன்முறையீடுகளின் சுருக்கம** | | | |
|---|---|---|---|---|
| | மாவட்டம | கிடைக்கப் பெற்ற மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | மேன்முறையீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை | கிராமிய,பிரதேச மற்றும் மாவட்ட குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிகை |
| 1 | கம்பஹா (நீர்கொழும்பு) | 6,097 | 3,136 | 2,033 |
| 2 | கொழும்பு | 307 | 245 | 173 |
| 3 | களுத்துறை | 226 | 142 | 108 |
| | மொத்த எண்ணிக்கை | 6,630 | 3,523 | 2,314 |

### 1.4.3 மீன்பிடித் துறைமுகங்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல்

மீன்பிடித் துறைமுகங்களை அண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், பீக்கன் விளக்குகள் மற்றும் மின்விளக்குகளைப் பொருத்தும் திட்டத்திற்காக 45 பீக்கன் விளக்குகளைக் கொள்வனவு செய்து, தெரிவு செய்யப்பட்ட மீன்பிடித் துறைமுகங்களுக்கு வழங்குவதுடன் தொடர்பான கொள்முதல் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன, மேலும் அதற்கான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
அத்துடன், எதிர்காலத்தில் மேலதிகமாக 22 பீக்கன் விளக்குகளும் மின்விளக்குகளும் கொள்வனவு செய்யப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட மீன்பிடித் துறைமுகங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

### 1.4.4 இயற்கை அனர்த்தங்கள் அல்லது கரையோர மீன்பிடித் தொழிலுக்கு ஏற்படுத்தப்படும் தடைகள் காரணமாக மீன்பிடித் தொழிலுக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைத்தல் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி / 2090-1-1-13-2506)

புத்தளம், மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய கடற்றொழில் மாவட்டங்களில் இயங்கும் சிறுதொழில் மீன்பிடிப் கலன்களின் பயணப் பாதையை இலகுபடுத்துவதற்காக, கால்வாய்கள்/முகத்துவாரங்களைச் சுத்தப்படுத்தி அபிவிருத்தி செய்யவும், யாழ்ப்பாணம் மயிலிட்டி துறைமுகத்தில் மீன்பிடிப் கலன்கள் நங்கூரமிடுவதற்கு வசதியளிக்கவும் 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.4.5 புதிய மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டம்

விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் இலங்கை நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து புதிய மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளன. இந்த புதிய மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டம் தொடர்பில், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளை அறிவூட்டும் வேலைத்திட்டங்கள் தற்போது நிறைவடைந்துள்ளன. எதிர்காலத்தில், மீனவ சமூகத்திற்கு இந்த மீனவர் ஓய்வூதியத் திட்டம் குறித்து அறிவூட்டி, புதியவர்களை இணைத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.4.6 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மீனவக் குடும்பங்களுக்கு சீன மக்கள் குடியரசின் உதவியின் கீழ் 500 முன் தயாரிக்கப்பட்ட (பொருத்து) வீடுகளை வழங்கும் வேலைத்திட்டம்

சீனக் குடியரசின் உதவியின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு 750 மில்லியன் ரூபா பெறுமதியான 500 முன் தயாரிக்கப்பட்ட வீடுகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இந்த முன் தயாரிக்கப்பட்ட வீடுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் குறைந்த வருமானம் பெறும் மீனவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்களுக்கு அமைய, அனைத்து மாவட்டங்களிலும் பயனாளிகள் அடையாளம் காணும் பணி நிறைவடைந்துள்ளது. முன் தயாரிக்கப்பட்ட வீட்டின் அத்திவாரத்தை அமைப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் பணிகள் மற்றும் அத்திவாரம் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.



மட்டக்களப்பு மாவட்டம்



கிளிநொச்சி மாவட்டம்

### 1.4.7 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மீனவக் குடும்பங்களுக்கு சீனக் குடியரசின் உதவியின் கீழ் 75000 மீன்பிடி வலைகளை வழங்கும் வேலைத்திட்டம்

**அட்டவணை** 05: வலை மானிய விநியோகத்தின் சுருக்கம்

| மாவட்டம் | தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் கொண்டு செல்லப்பட்ட வலைகளின் எண்ணிக்கை | வலைகள் விநியோகிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட வலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 3,614 | 21,684 | 3,449 | 20,694 |
| திருகோணமலை | 2,625 | 15,750 | 2,482 | 14,892 |
| மன்னார் | 2,309 | 13,854 | 2,006 | 12,036 |
| மட்டக்களப்பு | 1,589 | 9,534 | 1,370 | 8,220 |
| முல்லைத்தீவு | 583 | 3,498 | 466 | 2,796 |
| கல்முனை | 887 | 5,322 | 887 | 5,322 |
| கிளிநொச்சி | 870 | 5,220 | 665 | 3,990 |
| **மொத்தம்** | **12,477** | **74,862** | **11,325** | **67,950** |

## 2.0 முகாமைத்துவப் பிரிவு

### 2.1 கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை நிலையான முறையில் முகாமைத்துவம் செய்தல்

மீன்பிடி முகாமைத்துவம் என்பது, மீன்பிடி மற்றும் கடல் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட பல்துறை அணுகுமுறையாகும். இது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட வலுவான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு மற்றும் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகிறது. அதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கல், ஒழுங்குபடுத்தல் மற்றும் அமுலாக்கம், கண்காணிப்பு ஆகியன கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. முடிவெடுக்கும் செயற்பாடுகளில் உள்ளூர் பங்களிப்பை உறுதிப்படுத்தும் வகையில், சமூக அடிப்படையிலான முகாமைத்துவ முன்முயற்சிகளின் ஊடாக சமூகப் பங்களிப்பு ஊக்குவிக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக, இலங்கையின் மீன்பிடி முகாமைத்துவம் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் சமூக-பொருளாதாரத் தேவைகளை சமநிலைப்படுத்த முயற்சிக்கிறது. இந்தத் திணைக்களத்தின் முகாமைத்துவப் பிரிவு மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருப்பதுடன், அந்தப் பிரிவின் முக்கிய பணிகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**குறிக்கோள்**

மீன்பிடி உள்ளீடுகள் மற்றும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மீன்பிடி மற்றும் கடல் வளங்களை முகாமைத்துவம் செய்தல், அத்துடன் சமூகப் பங்களிப்புடன் கடல், கடனீரேரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் மீன்பிடி வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மூலம் இலங்கையின் மீன்பிடித் துறையில் நிலையான அபிவிருத்தியை அடைவதே இந்த பிரிவின் பிரதான நோக்கமாகும்.

**பிரிவின் செயற்பாடுகள்**

- கடற்றொழில் ஒழுங்குவிதிகளை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- மீன்பிடிக் கலன்களைப் பதிவு செய்தல்.
- மீன்பிடிக் கலன்களை மாற்றம் செய்தல் (பலநாள் மீன்பிடிக் கலன்கள்)
- மீன்பிடிக் கலன்களை அடமானம் வைத்தல் மற்றும் மீன்பிடிக் கலன்களின் அடமான மீட்பு
- மீன்பிடிக் கலன்களின் பதிவை இரத்துச் செய்தல்.
- சர்வதேச கடலில் மீன்பிடிச் செயற்பாடுகளுக்காக செயற்பாட்டு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

- ஊள்நாட்டு கடலில் மீன்பிடி செயற்பாடுகளுக்காக செயற்பாட்டு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- வெளிநாட்டுக் கலன்களுக்கு மீன்களை தரையிறக்குவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- அலங்கார மீன்களின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- கடலட்டைகள் மற்றும் சிங்கிறால்களை பிடித்தல், உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- சங்குகள், சிப்பிகள் மற்றும் சுறாச்செட்டைகள், நக்லா, கடல் நத்தை மாமிசம் (ChicoreusRamosu), கடற்புல் ஆகியவற்றை கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- சிங்கிறால்களை உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்தல், காட்சிப்படுத்துதல் மற்றும் கொண்டு செல்லலுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- செயற்கை ஊடகங்களில் வளர்ப்புச் செய்யப்பட்ட பவளப்பாறைகளின் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- மீன்பிடிக் கலன் ஓட்டுநர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்குதல்.
- கரைவலைத் துறைமுகங்கள் மற்றும் உரிமையாளர்களை பதிவு செய்தல் மற்றும் கடற்கரையோரங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- மீன்கள் மற்றும் மீன் உற்பத்திகளின் இறக்குமதிக்காக பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ உரிமம் வழங்குதல்.
- மீன்கள் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ உரிமம் வழங்குதல்.
- மீன்கள் மற்றும் மீன் உற்பத்திகளின் மீள்ஏற்றுமதிக்காக பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ உரிமம் வழங்குதல்.
- புதிய கலன்களுக்கான பதிவு எண்களை ஒதுக்கீடு செய்தல், அங்கீகரித்தல் மற்றும் வழங்குதல்.
- வெளிநாட்டு உதவிகளின் கீழ் அமுல்படுத்தப்படும் கடற்றொழில் முகாமைத்துவம் தொடர்பான அனைத்து செயற்றிட்ட நடவடிக்கைகள்.
- சர்வதேசக் கடலில் இயங்கும் கலன்களின் பட்டியலைத் தயாரித்தல், பராமரித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் புகாரளித்தல்.
- வெளிநாடுகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட உள்நாட்டு மீனவர்களுக்கு அனுமதி வழங்குதல்.
- வெளிநாடுகளுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கலன்களை விற்பனை செய்தல், மாற்றுதல் ஆகியவற்றுக்கு அனுமதி வழங்குதல்
- விசேட கடற்றொழில் முகாமைத்துவ இடப்பரப்புகளை பகுதிகளைக் கண்டறிந்து பிரகடனம் செய்தல், அது தொடர்பான உரிய ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவ திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- குறிப்பிட்ட மீன் இனங்கள் தொடர்பான மீன் கையிருப்பு மதிப்பீட்டு ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில், முகாமைத்துவ முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- சட்டவிரோத மீன்பிடித் தொழிலைத் தடுப்பதற்கான தேசிய செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- சுறா மீன் மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் மற்றும் தேசிய செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
- பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக மீன்பிடிக்க அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் (Recreational fishing activity).
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் சுங்க அனுமதிக்கு ASYCUDA அமைப்பு மூலம் ஒப்புதல் வழங்குதல்

மீன்பிடி மற்றும் நீரியல் வளங்களை நிலையான முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் என்பன கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். அதற்காக, மீன்பிடிக் கலன்கள், மீன்பிடிச் செயற்பாடுகளுக்கான முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், சட்டவிரோத, ஒழுங்குபடுத்தப்படாத, அறிவிக்கப்படாத மீன்பிடிச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2025 ஆம் ஆண்டில் 2025.08.31 ஆம் திகதி வரை பின்வருமாறு பல்வேறு மீன்பிடிச் செயற்பாடுகளுக்கும் கலன்களுக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை** 06: 2025 ஆம் ஆண்டின் 2025.08.31 ஆம் திகதிக்கு அமைய ஒவ்வொரு செயற்பாட்டினதும் முன்னேற்றம்.

| தொடர் இலக்கம் | செயற்பாடு | எதிர்பார்க்கப் பட்ட இலக்கு | 2025.08.31 திகதியில் முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | மீன்பிடிக் கலன்களின் பதிவு (புதிய) | 2,000 | 1332 |
| 2 | ஆழ்கடல் கலன்களுக்கான நடவடிக்கை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | 1,020 | 1316 |
| 3 | கலன் ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | 500 | 81 |
| 4 | அலங்கார மீன் இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 25 | 35 |
| 5 | அலங்கார மீன் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 30 | 28 |
| 6 | அலங்கார மீன் மீள் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 15 | |
| 7 | முள்ளுடைய சிங்கிறால்களின் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 80 | 26 |
| 8 | முள்ளுடைய சிங்கிறால்களை உடைமையில் வைத்திலுத்தல், கொண்டு செல்லல் | 10 | 16 |
| 9 | சங்குகளை உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லல் ஆகியவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 80 | 40 |
| 10 | சங்குகளின் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 40 | 17 |
| 11 | கடலட்டைகளை பிடித்தல்,சேகரித்தல்,உடைமையில் வைத்திருத்தல் மற்றும் கொண்டு செல்லலுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 200 | 127 |
| 12 | கடலட்டைகளின் இறக்குமதி,ஏற்றுமதி, மீள் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 150 | 84 |
| 13 | சிப்பி ஓடுகளை சேகரித்தல், கொண்டு செல்லல் மற்றும் அலங்காரப் பொருட்கள் உற்பத்திக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் | 20 | 25 |
| 15 | மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் இறக்குமதிக்காக பதிவு செய்தல் | 200 | 106 |
| 16 | மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக பதிவு செய்தல் | 150 | 140 |
| 17 | மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் மீள் ஏற்றமதிக்காக பதிவு செய்தல் | 13 | 7 |
| 18 | புதிய கலன்களுக்கு பதிவிலக்கங்களை ஒதுக்கீடு செய்தல், ஒப்புதலளித்தல் மற்றும் வழங்குதல் | IMUL-100 | 48 |
| | | OFRP-1000 | 1392 |
| | | MTRB-250 | 106 |
| | | NTRB-500 | 355 |
| | | NBSB--0 | 2 |
| 19 | நக்லா (Operculum of *Chicoreusramosus*) ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் | 15 | 08 |
| 20 | நக்லா (Operculum of *Chicoreusramosus*) உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்தல்,காட்சிப்படுத்தல் மற்றும் கொண்டு செல்லலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 15 | 12 |
| 21 | *Chicoreusramosus* மாமிசத்தை உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்தல்,காட்சிப்படுத்தல் மற்றும் கொண்டு செல்லலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 30 | 11 |
| 22 | *Chicoreusramosus* மாமிசம் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் | 15 | 8 |
| 23 | இறந்த கடல் நத்தைகளின் ஓடுகளை கொண்டு செல்லல், உடைமையில் வைத்திருத்தல், மற்றும் காட்சிப்படுத்தலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 20 | 25 |
| 24 | கடற்புல் கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 8 | 9 |
| 25 | லொக் புத்தகங்களை வழங்குதல் | 1,000 | 1093 |

## 2.2 தேசிய மீன்பிடிக் கலன் கணக்கெடுப்பு

புதுப்பிக்கப்பட்ட மீன்பிடிப் படகுத் தகவல்கள் இல்லாதிருப்பது, நிர்வாக முடிவுகளுக்கு ஒரு சவாலாகும். இதனால், பல கட்டங்களின் கீழ் இலங்கையில் உள்ள அனைத்து மீன்பிடிக் கலன்கள் பற்றிய கணக்கெடுப்பை நடத்தத் திட்டமிடப்பட்டது. இதன் முதல் கட்டமாக, வெளி இயந்திரம் பொருத்தப்பட்ட OFRP மற்றும் MTRB கலன்களின் கணக்கெடுப்பு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களாக, அனைத்து பல நாள் மீன்பிடிக் கலன்கள் மற்றும் இயந்திரம் அல்லாத கலன்கள் கணக்கெடுக்கப்படும். இதன்படி, தற்போது நாடு முழுவதும் உள்ள 900

இற்கும் அதிகமான மீன்பிடிப் படகுத் துறைமுகங்களில் உள்ள வெளி இயந்திரம் பொருத்தப்பட்ட OFRP மற்றும் MTRB படகுகளின் கணக்கெடுப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.





## 2.3 மீன்பிடி உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய பயிற்சி







மீன்பிடிக் கலன்கள் கணக்கெடுப்புடன் தொடர்பாக, அனைத்து மீன்பிடித் துறை அலுவர்களுக்கும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி உள்ளீடுகள் பற்றிய பயிற்சி கலாவெவ பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டது.

## 3.0 தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு

சர்வதேச தரநிலைகளுக்கு இணங்கவும், நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இலங்கை தனது மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியில் கடுமையான தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி விதிமுறைகளின் கீழ் உள்ள ஏற்பாடுகளால் கட்டுப்படுத்தப்படும் இந்தக் செயல்முறையானது சான்றளித்தல், ஆய்வு செய்தல், சுகாதாரம் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. பின்தொடர்திறன் அமைப்புகள் (Traceability) மற்றும் ஆய்வகச் சோதனைகள் தர உத்தரவாதத்தை மேலும் மேம்படுத்துகின்றன, மேலும் திறன் விருத்தி மூலம் தொழில்துறை ஊழியர்களின் திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன. சந்தை அணுகல் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமும், உற்பத்தியின் ஒருமைப்பாட்டைப் பேணுவதன் மூலமும், உலகளாவிய சந்தையில் உயர்தர கடல் உணவுகளின் நம்பகமான மூலமாக இலங்கை தனது நற்பெயரைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத் திணைக்களத்தின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவானது மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருப்பதுடன், அது இலங்கை மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமாகவும் செயல்படுகிறது.

இந்த பிரிவானது, முக்கியமாக மீனபிடி உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி தொடர்பில், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் பின்வரும் விதிமுறைகளைச் செயல்படுத்தி வருகின்றது.

- 1998 ஆம் ஆண்டின் மீன் உற்பத்திப் பொருட்கள் (ஏற்றுமதி) ஒழுங்குவிதி
- 2003 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க மீன் பதனிடல் ஒழுங்குவிதிகள்
- 2014 ஆம் ஆண்டின் மீன் பிடிப்பு தொடர்பான தரவு சேகரிப்பு ஒழுங்குவிதிகள்
- 2002 ஆம் ஆண்டின் நீர்வாழ் உயிரின வளர்ப்பு (எச்சங்கள் கண்காணிப்பு) ஒழுங்குவிதிகள்

2014 ஆம் ஆண்டு முதல், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரக் கட்டுப்பாட்டு துணை அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் வாரத்தின் ஏழு நாட்களும், பகல் மற்றும் இரவு நேரங்களிலும் (24X7) உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்குச் சேவை வழங்கும் அலுவலகமாகச் செயல்படுகிறது.
அதற்கு மேலதிகமாக, தற்போது உள்நாட்டுப் வாடிக்கையாளர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்புடன் கூடிய மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை வழங்குவது குறித்து எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
மேலும், தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் உத்தியோகபூர்வ கடமைகளை முறையாகச் செயற்படுத்துவதற்காக, வெற்றிடமாக இருந்த அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலான அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இதன்படி, இந்தப் பிரிவில் தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்ளும் தரக் கட்டுப்பாட்டு அலுவலர் பதவிக்கு எட்டு புதிய அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இதன் மூலம், தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் திறனை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
அப் பிரிவின் பிரதான இலக்குகள், குறிக்கோள்கள், பணிகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

**இலக்கு**

ஐரோப்பிய சந்தை மற்றும் ஏனைய வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமாக ஐரோப்பிய ஆணையத்தால் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்தப் பிரிவானது 1999.01.04 ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கியது. தற்போது, இலங்கை மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அனைத்து நாடுகளுக்கும் அந்தந்த நாடுகளின் சட்டரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான பணிகளை இது செய்து வருகின்றது.

**குறிக்கோள்**

1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் மீன் உற்பத்திப் பொருட்கள் (ஏற்றுமதி) விதிமுறைகளைச் செயற்படுத்துவதன் மூலம், மனித நுகர்வுக்காக இலங்கை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரத்தையும் சுகாதாரப் பாதுகாப்பையும் மேம்படுத்துவதே இந்தப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

**பணிகள்**
மேற்கூறிய நோக்கங்களை அடைவதற்காக, தரக் கட்டுப்பாட்டுப் பிரிவானது பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்கிறது

- மீன் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் அதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்..
- மீன் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு ஏற்றுமதிக்கான மீன்களைப் பதப்படுத்த அதிகாரம் வழங்குதல்.
- HACCP முறைகளை ஆய்வு செய்தல் மற்றும் அந்த முறைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்.
- மீன் பதப்படுத்தும் நிறுவனங்களைத் தொடர்ந்து பரிசோதித்தல், குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வழிகாட்டுதல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல
- மீன்களைக் கரையிறக்கும் இடங்களை பரிசோதித்தல் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஏற்றுமதிக்காக மீன்களை வழங்கும் மீன்பிடிப் படகுகளைப் பரிசோதித்தல் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- மீன்களைக் கரையிறக்கும் இடங்களிலிருந்து பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு மீன்களின் கொண்டு செல்லலைப் பரிசோதித்தல் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஏற்றுமதிக்கான ஒவ்வொரு மீன் தொகுதிக்கும்/மீன்பிடி உற்பத்தித் தொகுதிக்கும் சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குதல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திப் பொருட்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பரிசோதனை அறிக்கைகளை (Test Reports) வழங்கும் ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்.
- சம்பந்தப்பட்ட இடங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்களில் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக அதிகாரபூர்வ மாதிரிப் பரிசோதனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- மீன் பதப்படுத்தும் இடங்கள், படகுகள் மற்றும் மீன்களைக் கரையிறக்கும் இடங்கள் விதிமுறைகளில் அடங்கியுள்ள தொடர்புடைய நிபந்தனைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களில், அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திப் பொருட்களின் பாதுகாப்பற்ற சுகாதார நிலைமைகள் குறித்து இறக்குமதி செய்யும் நாடுகளில் இருந்து கிடைக்கும் புகார்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரத்தையும் சுகாதாரப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதுடன், ஏற்றுமதிக்காக மீன்களை வழங்கும் மீன்பிடிக் கலன்களின் ஊழியர்களுக்காக மீன்களைக் கையாளுதல் பற்றிய விழிப்புணர்வுத் திட்டங்களை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துதல்.
- நீரியல் வளர்ப்பு உற்பத்திப் பொருட்களில் (மீன்கள், இறால்கள்) பயன்படுத்தப்படும் நுண்ணுயிர்கொல்லிகள் மற்றும் இரசாயனப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்காக நீரியல் வளர்ப்பு எச்சங்கள் கண்காணிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அத்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வுத் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- மீன் உற்பத்திப் பொருட்களின் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மீன்பிடிப்புச் சான்றிதழ்களை வழங்குதல்.
- வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுநாயக்க விமான நிலையத் தரக் கட்டுப்பாட்டு துணை அலுவலகம் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்காக இணையவழி முறைமை கீழ் சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குதல்.
- விதிமுறைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளால் செய்யப்பட்ட அறிவிப்புகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துதல்.

**3.1 கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிறுவனங்கள்**
மீன்வளம் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட, ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கு உட்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற மீன் பதப்படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கையை (2025.08.31 ஆம் திகதி நிலவரப்படி) 50 இலிருந்து 55 ஆக அதிகரிக்க முடிந்துள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கு உட்படாத நாடுகளுக்கு மட்டுமே ஏற்றுமதி செய்ய அங்கீகரிக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை 23 ஆகும். மீன் பொதியிடல் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 21 ஆகும். இவற்றுள், 38 நிறுவனங்கள் சீனக் குடியரசுக்கும், 17 நிறுவனங்கள் சவுதி அரேபியாவுக்கும், 18 நிறுவனங்கள் ரஷ்யாவுக்கும் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**3.2 செயற்பாடுகளைப் பரிசோதித்தல், மேற்பார்வையிடுதல் மற்றும் உத்தியோகபூர்வ மாதிரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்**

இதன் கீழ், மீன் உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்தும் நிறுவனங்கள், இறால் வளர்ப்புப் பண்ணைகள், ஆய்வகங்கள், மீன்பிடித் துறைமுகங்கள், ஏற்றுமதிக்கு மூலப்பொருட்களை வழங்கும் மீன்பிடிக் கலன்கள் ஆகியவற்றைப் பரிசோதித்தல் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரபூர்வ மாதிரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது ஆகியவை அடங்கும்.

நுண்ணுயிரியல் பரிசோதனைகள்: நீர், ஐஸ் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் என்பவற்றுக்காகவும்,

இரசாயனப் பரிசோதனைகள்: மீன்களின் ஹிஸ்டமின் அளவு / பார உலோகங்கள் / எச்சங்கள் கண்காணிப்பு என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.3 நீரியல் வளர்ப்பு இரசாயன எச்சங்கள் கண்காணிப்பு தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.**

இதன் கீழ், 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நீரியல் வளர்ப்பு எச்சங்கள் கண்காணிப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கண்காணிப்பு, பரிசோதனைகள், மாதிரிகளைப் பெறுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் ஆகியவை இடம்பெறுகின்றன. .இறால் இனப்பெருக்க நிலையங்களில் இருந்து நீர் மாதிரிகள் பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மாதிரிகள் பரிசோதிக்கப்படும் அளவீடுகள்:

- நுண்ணுயிர்கொல்லிகள
- மாசுபடுத்திகள் (பார உலோகங்கள், கார்பமேட், பைரத்ராய்டு)
- பூச்சிக்கொல்லி எச்சங்கள்
- நிறமிகள் (மாலகைட் பச்சை, லியூகோமாலகைட், பிரில்லியண்ட் பச்சை, கிரிஸ்டல் வயலட்)

விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்:

இதன் கீழ், மீன்கள் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரத்தையும் சுகாதாரப் பாதுகாப்பையும் பாதுகாப்பது குறித்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துவதே முக்கியமாக இடம்பெறுகிறது.

**அட்டவணை** 07: 2025 ஆம் ஆண்டின் 2025.08.31 ஆம் திகதிக்கு அமைய தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின் செயற்பாடுகளின் முன்னேற்றம்.

| **தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்** | **வருடாந்த இலக்கு** | **முன்னேற்றம் 08.31 ஆம் திகதியில்** | **சதவிகிதம் %** |
|---|---|---|---|
| **உள்நாட்டு சந்தையிலுள்ள மீன் உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பையும் தரத்தையும் உறுதி செய்தல்** | | | |
| 01.துறைமுக சோதனைகளை மேற்கொள்ளல் | 10 | 4 | 40% |
| 02. மீன் ஏலவிற்பனை நிலையங்கள் மற்றும் பொது மீன் விற்பனைச் நிலையங்களில் சோதனைகளை மேற்கொள்ளுதல். | 4 | 1 | 25% |
| 03.விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (மீனவர்கள்/வியாபாரிகள்) | 10 | 2 | 50% |
| **ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பையும் தரத்தையும் உறுதி செய்தல்** | | | |
| 01.உத்தியோகபூர்வ மாதிரிகளைப் பெறுதல் - நிறுவனங்கள் | 300 | 125 | 42% |
| 02. விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள்/தொடர்புடைய கள அலுவலர்கள்) | 10 | 2 | 20% |
| 03. விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு செய்பவர்கள்/பதனிடல் நிறுவன அலுவலர்கள்/மீனவர்கள்) | 10 | 1 | 10% |
| 04. மீன்பிடித் துறைமுகங்களின் சுகாதாரப் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் பரிசோதித்தல் | 20 | 1 | 5% |
| 05. மீன்பிடிக் கலன்களின் சுகாதாரப் பாதுகாப்பு, சுகாதார நிலைமைகள் மற்றும் சிறந்த கையாளல் முறைகள் | 85 | 10 | 12.75% |

| | | | | |
|---|---|---|---|---|
| குறித்துப் பரிசோதித்தல் | | | | |
| 06.ஏற்றுமதிக்காக மீன் பதனிடும் நிறுவனங்களை சோதனையிடல் | மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நிறுவனப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 120 | 63 | 52.5% |
| | மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பொதியிடல்/சிங்கிறால் சேகரிப்பு நிலையப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 15 | 2 | 13 % |
| 07. ஆய்வகங்களைப் பரிசோதிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல் | | 5 | 2 | 40% |
| 08.இனப்பெருக்க நிலையங்கள், நன்னீர் மீன் வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் சவர்நீர், கடல் உயிரின வளர்ப்பிடங்களைப் பரிசோதித்தல். | | 40 | 5 | 12.5 % |
| 09. நீரியல் வளர்ப்பு இரசாயன எச்சங்கள் குறித்து மேற்கொள்ளப்படும் ஆய்வகப் பரிசோதனைகள். | | ஐரோப்பிய ஆணையம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தால் பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய வருடாந்தம் தீர்மானிக்கப்படும். (66) | 20 | 30% |
| 10. கரையிறக்கும்போது /பதப்படுத்தும் போது புலன் சார்ந்த பகுப்பாய்வுப் பரிசோதனைகள் | | 70 | 15 | 21.5% |
| 11. பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புக்களால் நிறுவப்பட்ட புள்ளிவிவரத் தரவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | | சந்தர்ப்பத்திற்கு ஏற்ப | 1 | - |
| 12. ஏற்றுமதி மீன் உற்பத்திப் பொருட்களுக்கான உத்தியோகபூர்வ மாதிரித் திட்டத்தின்படி பெறப்பட்ட பரிசோதனை முடிவுகள் தர நிர்ணயங்களுக்கு இணங்காதபோது, சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | | பரிசோதனை முடிவுகளில் உள்ள அளவீடுகளின் நிர்ணயிக்கப்பட்ட பெறுமானங்களை மீறினால், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப | - | - |
| 13. இறக்குமதி செய்யும் நாடுகள் (Importing countries) மூலம் மீன் உற்பத்திப் பொருட்களின் குறைபாடுகள் குறித்து செய்யப்படும் அறிவித்தல்கள் | | சம்பந்தப்பட்ட நாடுகளில் இருந்து குறைபாடுகள் அறிவிக்கப்படும் எண்ணிக்கைக்கு ஏற்ப, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு | 10 | - |
| 14. ஏற்றுமதிக்கான மீன் உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் | புதிய மீன் உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல். | 63 | 1 | - |
| | மீன் உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்தும் நிறுவனங்களின் பதிவை புதுப்பித்தல். | | 45 | - |
| 15. மீன்பிடிப்புச் சான்றிதழ்களை வழங்குதல். இதுவரை ஈட்டப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,819,000 | | 17,000 (சான்றிதழ்களின் எண்ணிக்கை) | 14,095 | 83% |
| 16. ஏற்றுமதிக்கான சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குதல். (ஐரோப்பிய நாடுகளுக்கு) * இதுவரை ஈட்டப்பட்ட மொத்தத் தொகை ரூ. 4,662,500 | | 18,000 (சான்றிதழ்களின் எண்ணிக்கை) | 9,325 | 52% |
| 17. ஏற்றுமதிக்கான சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குதல். (ஐரோப்பா அல்லாத நாடுகளுக்கு) * இதுவரை ஈட்டப்பட்ட மொத்தத் தொகை ரூ. 3,712,500 | | 10,000 (சான்றிதழ்களின் எண்ணிக்கை) | 7,425 | 74% |
| 18. மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் மீன் | | மீள் | - | - |

| | | | |
|---|---|---|---|
| இருப்புகள் குறித்துப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் (BIA) | ஏற்றுமதிக்காக மீன்களை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பங்கள் மற்றும் அங்கீகாரங்களை வழங்குவதன் அடிப்படையில் தேவைக்கேற்ப | | |
| 19.ஐரோப்பிய ஆணையம் மற்றும் ஏனைய நாடுகளின் சம்பந்தப்பட்ட திறன்வாய்ந்த அதிகார நிறுவனங்களுடன் (Competent Authorities) தேவையான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்காக, இறக்குமதி செய்யும் நாடுகளால் செய்யப்படும் அறிவித்தல்கள் மூலமாகவோ அல்லது வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகங்களால் செய்யப்படும் விசாரணைகள் மூலமாகவோ தகவல்கள் பெறப்படுகின்றன | செய்யப்படும் கோரிக்கைகளுக்கு ஏற்ப சந்தர்ப்பத்திற்கேற்றவாறு | 30 | - |

### 3.4 டின் மீன் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துதல்

தற்போது இலங்கையில் பிரபலமடைந்து வரும் டின் மீன் தொழிற்றுறை ஒரு பெறுமதி சேர் உற்பத்தி எனக் கருதப்படலாம். இது, தொடர்ச்சியாக அதிகரித்து வரும் கேள்வியைக் கொண்டுள்ள, அதிக புரதச்சத்து நிறைந்த டூனா, சாடின் (Sardin), மற்றும் மெக்கரல் (Mackerel) போன்ற மீன் வகைகளைப் பயன்படுத்தி, நீண்ட காலம் கெடாமல் பாதுகாக்கும், இலகுவாகத் தயாரிக்கக்கூடிய ஒரு உற்பத்திப் பொருளாகும்.இலங்கையின் டின் மீன் சந்தை முழுமையாக இறக்குமதி சந்தையிலேயே தங்கியிருந்தது. தற்போது, இதை ஒரு உள்நாட்டுத் தொழிலாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டீன் மீன் உற்பத்தியில் தற்போது ஈடுபட்டுள்ள சுமார் 22 உள்நாட்டு வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டு, தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலையீட்டுடன், அவர்களின் உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்படி, டின் மீன் இறக்குமதிக்கு செலவிடப்படும் அந்நியச் செலாவணிக் கையிருப்பை நம் நாட்டிலேயே தக்க வைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தொழிலை மேலும் ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, சம்பந்தப்பட்ட டின் மீன் பதப்படுத்தும் நிறுவனங்களை 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மீன் பதனிடல் நிறுவனங்கள் ஒழுங்குவிதிகளின் கீழ் எமது திணைக்களத்தில் பதிவு செய்யும் பணியை, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு தற்போது ஆரம்பித்துள்ளதுடன், மேலதிக நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. தற்போது, 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மீன் பதனிடல் நிறுவனங்கள் ஒழுங்குவிதிகளின் கீழ் 12 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

### 3.5 கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் உத்தியோகபூர்வ வர்த்தக முத்திரைச் சின்னங்களை அறிமுகம் செய்தல்

இலங்கையின் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியானது, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் கீழ் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் வழங்கப்படுகிறது. தற்போது, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட, நூறை அண்மித்த (99) மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்தும் நிறுவனங்கள் மிக உயர்ந்த தரத்திலான மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை பல்வேறு வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பி வருகின்றன. மேலும், தற்போது இந்தப் பொருட்கள் வெளிநாடுகளில் “இலங்கை உற்பத்திகள்“ என்ற உயர் வர்த்தக நாமத்தைப் பெற்று, வெளிநாட்டுப் பாவனையாளர்களிடையே பிரபலமடைந்து வருகின்றன.

இதற்கமைய, இலங்கை மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் பதப்படுத்துனர்கள் தமது உற்பத்திப் பொருட்களுக்காக, நாட்டின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் ஒரு வர்த்தக நாமச் சின்னத்தின் தேவையைக் காலங்காலமாக இனங்கண்டு, கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொருத்தமான வர்த்தக நாமச் சின்னங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதன்படி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், தகுதிகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்களுக்கு இந்த வர்த்தக நாமச் சின்னத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.”

### 3.6 ஒரு நாள் சிறிய கலன்கள் மூலம் கொண்டு வரப்படும் மீன் அறுவடையை ஏற்றுமதிச் சந்தைக்கு அனுப்பும் வகையில், உயர்தரமான, சுகாதாரப் பாதுகாப்பான மீன் அறுவடையைக் கரைக்குக் கொண்டு வருவதை ஊக்குவித்தல்

இலங்கையின் கரையோரக் கடற்றொழில் துறையானது நாட்டின் பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளதுடன், சனத்தொகையின் கணிசமான பகுதியினருக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதுடன், தேசிய மீன் உற்பத்திக்கும் பங்களிப்புச் செய்கிறது.

இந்தச் சிறிய கலன்கள் மூலம் பெறப்படும் மீன் அறுவடையானது, நாட்டின் மொத்த மீன் உற்பத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதுடன், அந்த அறுவடையில் கணிசமான பகுதியானது, ஏற்றுமதி செய்யக்கூடிய மீன் இனங்களாக உள்ளன.

கரையோரக் கடற்றொழில் துறையின் மூலம் பலதரப்பட்ட ஏற்றுமதிக்கான கேள்வியுள்ள மீன் இனங்களின் அறுவடையைப் பெற்ற போதிலும், மீன்களைப் பிடிக்கும்போதும் கரைக்குக் கொண்டு வரும்போதும் ஏற்படும் தரமற்ற கையாளுகை நிலைமைகள் காரணமாக, அந்த மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் குறைந்து, அவை ஏற்றுமதி மூலப்பொருட்களாகப் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இதன் காரணமாக, பிடிக்கப்படும் மீன்களுக்கு ஏற்றுமதிச் சந்தையில் அதிக கேள்விஇருந்தபோதிலும், கேள்விக்கு ஏற்ற விநியோகத்தை வழங்குவதில் ஏற்றுமதியாளர்கள் ஒரு சவாலை எதிர்கொண்டுள்ளனர்

இதற்கமைய, அறுவடைக்குப் பின்னரான சேதங்களைக் குறைத்து, உயர்தரமான மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிச் சந்தைக்கு வழங்குவதற்காக சரியான கையாளுகை வழிமுறைகளைப் பின்பற்றுவது முக்கியமாகும். அதற்காக, மீனவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காகவும், ஒரு நாள் சிறிய கலன்கள் மூலம் பிடிக்கப்படும் மீன் அறுவடையைப் பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டு வருவதை ஊக்குவிப்பதற்காகவும், சிலாபம், களுத்துறை மற்றும் நீர்கொழும்பு ஆகிய கடற்றொழில் மாவட்டங்களில் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதில் மீன் ஏற்றுமதியாளர்கள் மற்றும் மீனவர்கள் கலந்துகொண்டதுடன், தரமான மீன் அறுவடைகளின் தேவை குறித்த தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.





படம் 01: 2025.06.25 அன்று சிலாபம் கடற்றொழில் மாவட்டத்திற்கான கூட்டம் நடைபெறும் விதத்தைக் காட்டும் புகைப்படம்





படம் 02: 2025.07.03 அன்று களுத்துறை கடற்றொழில் மாவட்டத்திற்கான கூட்டம் நடைபெறும் விதத்தைக் காட்டும் புகைப்படம்




படம் 03: 2025.07.09 அன்று நீர்கொழும்பு கடற்றொழில் மாவட்டத்திற்கான கூட்டம் நடைபெறும் விதத்தைக் காட்டும் புகைப்படம்

### 3.7 கடற்றொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி முகாமைத்துவ ஒழுங்குபடுத்தல் (மீள் ஏற்றுமதிக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு நடைமுறை (SOP)

தற்போது, இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிறுவனங்களின் உற்பத்தித் திறன் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் கேள்வியை பூர்த்தி செய்ய முடியாத ஒரு நிலைக்கு இலங்கை மீன் ஏற்றுமதியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதன்படி, இலங்கையின் மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதித் தொழிலைத் தொடர்ச்சியாக நிலையாகப் பேணுவதற்கு, உயர்தரமான, ஏற்றுமதிக்குத் தகுந்த மூலப்பொருட்களின் பற்றாக்குறை அடையாளம் காணப்பட்டது. இதன் காரணமாக சில பதப்படுத்தும் நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என்பதும் கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில், நீண்ட காலமாக ஏற்றுமதியாளர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு இணங்க, மீன் ஏற்றுமதியைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்காக, அத்தியாவசியமான சூரை, தலபத்து மற்றும் இறால் ஆகியவற்றை இறக்குமதி செய்து, உள்நாட்டில் பதப்படுத்தி, மீண்டும் மீள் ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் தீர்மானித்துள்ளனர். இதற்கமைய, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் உடன்பாடுகளுடன், செயற்பாட்டு நடைமுறையை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, இலங்கைக்கு இறால், சூரை மற்றும் தலபத்து ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்காக, முறையான நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்ட இரண்டு செயற்பாட்டு நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டு, அனுமதிப்பத்திரம் பெற்ற மீன் பதப்படுத்தும் நிறுவனங்கள் மூலம் பெறுமதி சேர்ப்பு செய்து, பின்னர் மீண்டும் மீள் ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் அனைத்து மேற்பார்வை நடவடிக்கைகளையும் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையை ஒரு முன்னணி கடல் உணவுப் பதப்படுத்தும் மையமாக நிலைநிறுத்துவதன் மூலம், கடல் உணவு ஏற்றுமதியின் வீழ்ச்சிக்குத் தீர்வு காண்பது, குறிப்பாக ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதிகளுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். இதன் மூலோபாய இருப்பிடம், மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், வலுவான பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நெறிமுறைகள் மற்றும் திறமையான தொழிலாளர் படை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, உலகளாவிய கடல் உணவு வர்த்தகத்தில் இலங்கை உற்பத்திகளுக்கான அதிக சந்தை வாய்ப்பை பெறுவதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

### 3.8 இறக்குமதி செய்யும் நாடுகளால் மேற்கொள்ளப்படும் விசேட சோதனைகளுக்கு சமுகமளித்தல்

மீன் ஏற்றுமதிக்கான புதிய சந்தைகளை ஆய்வு செய்து, சர்வதேச மட்டத்தில் புதிய ஏற்றுமதி வாய்ப்புகளை நாட்டிற்குப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவே மேற்கொள்கிறது.

அவ்வாறு, ஒரு புதிய மீன் ஏற்றுமதி வாய்ப்பாக, சீனக் குடியரசானது தனது சந்தையை இலங்கையின் அனைத்து மீன் உற்பத்திப் பொருட்களுக்காகவும் திறந்துவிடுவதற்காக நடைபெற்ற இணையவழி கணக்காய்வு செயன்முறைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்ததன் மூலம், அந்தப் புதிய ஏற்றுமதி வாய்ப்பை எமது நாட்டிற்குப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இது தவிர, ஏற்றுமதியாளர்களின் கோரிக்கையின் பேரில், அடுத்த வருடத்தில் கொரிய அரசாங்கத்துடன் இறால் ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 3.9 தரக் கட்டுப்பாட்டு உப அலுவலகம் - கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், 2014 ஜனவரி 13 ஆம் திகதி தரக் கட்டுப்பாட்டு உப அலுவலகம் நிறுவப்பட்டது. இந்த அலுவலகம், வாரத்தின் ஏழு நாட்களும் இரவும் பகலும் (24X7) சேவை வழங்கும் அலுவலகமாக, மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கு சேவைகளை வழங்கும் நிறுவனமாகச் செயற்படுகிறது.

உள்நாட்டு மீன் உற்பத்தி ஏற்றுமதியாளர்களின் பலமான கோரிக்கைக்கு இணங்க, கட்டுநாயக்க தரக் கட்டுப்பாட்டு உப அலுவலகத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் உப அலுவலகக் கடமைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்ததன் மூலம், மீன் உற்பத்திப் பொருட்களுக்கு வழங்கப்படும் சுகாதாரச் சான்றிதழ்களை தடையின்றி, வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் இரவும் பகலும் தொடர்ச்சியான சேவையாக வழங்குவதன் மூலம் ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்து, அந்நியச் செலாவணி வருவாயை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில், ஐரோப்பிய ஆணைக்குழுவின் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திப் பொருட்களின் சட்டப்பூர்வமான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மீன் பிடிப்புச் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்ப்பு மாத்திரமே இந்தக் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது, ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து மீன் தொகைகளுக்கும் தேவையான சுகாதாரச் சான்றிதழ்கள் மற்றும் மீன் பிடிப்புச் சான்றிதழ்களை வாரத்தின் ஏழு நாட்களிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான வசதிகளை இந்தக் அலுவலகம் வழங்கியுள்ளது.

## 4.0 ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு

### 4.1 மீனவ சமூகம் , கடற்றொழில் அலுவலர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களிடையே சிறந்த உறவை கட்டியெழுப்புதல்

இலங்கையின் கடற்றொழில் துறையானது, சட்டவிரோத, ஒழுங்குபடுத்தப்படாத மற்றும் அறிவிக்கப்படாத கடற்றொழில் நடவடிக்கைகளிலிருந்து விடுபட்டு, கடற்றொழில் வளங்களின் நிலையான இருப்பை உறுதிப்படுத்துவதற்காக, 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தையும், அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்துவதே ஆய்வுப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சர்வதேச சமுத்திரச் சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு இணங்க வள முகாமைத்துவத்தின் மூலம் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்காக, கடற்றொழில் துறையை நிலையான முறையில் அபிவிருத்தி செய்வதும் இதன் நோக்கமாகும்.

எதிர்காலச் சந்ததியினருக்காக கடற்றொழில் வளங்களைப் பாதுகாப்பதன் பொருட்டு, மீனவ சமூகம், கடற்றொழில் துறையை ஒழுங்குபடுத்தும் கடற்றொழில் அலுவலர்கள் மற்றும் கடற்றொழில் துறையுடன் தொடர்புடைய ஏனைய பங்குதாரர்கள் ஆகியோரை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பயிற்சியளித்தல் என்பனவும் இதன் நோக்கமாகும்.

### 4.2 ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவின் பணி

**ஆய்வு / புலனாய்வு அலகு**

- வருடாந்த சுற்றிவளைப்புகள்/ சோதனைகள் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல்
- கலன்களை கண்காணிக்கும் முறைமை (VMS) மூலம் அடையாளம் காணப்பட்ட சட்ட மீறல்களுக்கான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளுக்கான சுற்றிவளைப்புகளுக்கு மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், மாவட்ட மட்டத்திலான சோதனைகள், சுற்றிவளைப்புகள் மற்றும் விசாரணை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்
- சமரச நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிர்வாக அபராதங்கள் விதிக்கும் சபை கூட்டுதல் மற்றும் நிர்வாக அபராதம் விதிக்கும் செயல்முறையை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடிக் கலன் கட்டும் தளங்கள், மீன்பிடி உபகரணங்கள் உற்பத்தி விநியோகம் மற்றும் தூண்டில் இரைகள் விநியோக நிறுவனங்களில் சோதனைகள்/ சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளல்
- மீன்பிடி உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்தல் மற்றும் விநியோக நிறுவனங்களில் சோதனைகள் மற்றும் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளல்

- வானொலி நிலையங்கள் மற்றும் சர்வதேச கடற்றொழில் விவகார அலகுகளை சோதனையிடல்/விசாரித்தல்
- விசேட விசாரணைகளை அறிவிப்பதற்காக அவசர அழைப்பாணைகளை அதிகாரிகளுக்கு வழங்குதல்
- அனைத்து விசாரணைகள் தொடர்பாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.
- அரசுப் புலனாய்வுப் பிரிவினாலும் ஏனைய நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்காகக் கோரப்படும் தகவல்களையும் அறிக்கைகளையும் வழங்குதல்

**பயிற்சி அலகு**

- திணைக்களத்தின் வருடாந்தப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டத் திட்டத்தைத் தயாரித்தல்.
- தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் கடற்றொழிலாளர்கள் மற்றும் பங்குதாரர்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- மீன்பிடிக் கலன்களின் தலைவர்களுக்கான பயிற்சிப் பாடத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைபெறும் தலைவர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடிக் கலன்களின் தலைவர்கள்/கடற்றொழிலாளர்களுக்கான முதலுதவிப் பயிற்சி வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- மீனவக் குடும்ப உறுப்பினர்களின் தொழிற் கல்வியை மேம்படுத்தல், மீனவப் பெண்களுக்கான மாற்று வருமானம் ஈட்டும் வேலைத்திட்டங்கள் மற்றும் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிநுட்பக் கல்லூரிகளிலிருந்து கடற்றொழில் துறையில் தொழிநுட்ப/ உள்ளகப் பயிலுனர் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்படும் மாணவர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- அனைத்து அலுவலர்களுக்காகவும் உள்நாட்டுப் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் தொடர்பான பின்னூட்டல் மற்றும் பகுப்பாய்வு.
- விழிப்புணர்வூட்டல் தொடர்பான பத்திரங்கள், கையேடுகள் மற்றும் காணொளிப் பட்டைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் விபரக்குறிப்புகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் (Scripts) தயாரித்தல்

### 4.3 விசாரணை மற்றும் பயிற்சிப் பிரிவு - 2025 ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான முன்னேற்றம்

**அட்டவணை** 08: விசாரணை அலகு- 2025 ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான முன்னேற்றம்

| தொடர் இலக்கம் | பிரிவின் பணி | செயற்திறன் குறிகாட்டிகள | எதிர்பார்க்கப்படும் இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட மட்டத்திலான சுற்றிவளைப்புகள் மற்றும் சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு எதிரான விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் | மாவட்ட மட்டத்திலான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பேணப்படும் இற்றைப்படுத்தப்பட்ட தரவு அறிக்கை | குறிப்பிட்ட இலக்குகளை வழங்க முடியாது | 425 |
| 2 | நிர்வாக அபராதம் விதிப்பதற்காக அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் அனுப்பப்படும் கோரிக்கைகளை, உரிய செயல்முறையின்படி நிர்வாக அபராதம் விதிப்பதற்காகச் சமர்ப்பித்தல் | நிர்வாக அபராதம் விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | 22 |
| 3 | கலன் கண்காணிப்பு முறைமை மூலம் அடையாளம் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான சம்பவங்களுக்கான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | கலன் கண்காணிப்பு முறைமை மூலம் அடையாளம் காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான சம்பவங்களுக்கான விசாரணைகளின் எண்ணிக்கை | | 676 |
| 4 | விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளல் | திட்டமிடப்பட்ட சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கையை நடைமுறைப்படுத்திய வீதம் | 5 | 1 |
| 5 | கடற்றொழில் கலன்கள், துறைமுகங்கள், | 1. பரிசோதனைகளின் எண்ணிக்கை | 7 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடற்றொழில் உபகரணங்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் கடற்றொழில் தூண்டில் இரைகள் விநியோக நிறுவனங்கள் தொடர்பான பரிசோதனைகள் மற்றும் விசாரணை நடவடிக்கைகள். | 2.வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட எண்ணிக்கைகள் | குறிப்பிட்ட இலக்குகளை வழங்க முடியாது | 0 |

**அட்டவணை** 09: பயிற்சி அலகு - 2025 ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான முன்னேற்றம்

| தொடர் இலக்கம் | பிரிவின் பணி | செயற்திறன் குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் இலக்கு | முன்னேற்றம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு (Stakeholders) கடற்றொழில் சட்டம் மற்றும் சட்டரீதியான கடற்றொழில் உள்ளீடுகள் குறித்து விழிப்புணர்வூட்டல் | சம்பந்தப்பட்ட பங்குதாரர்களை(Stakeholders) விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | 3 | 8 | 347 |
| 2 | திணைக்களத்தின் அலுவலர்களுக்காகப் பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் | அலுவலர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பொருத்தமான வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | 38 | 33 | 1280 |
| 3 | மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கடற்றொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் | மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 46 | 68 | 2961 |
| 4 | திணைக்களத்தின் அலுவலர்களை வெளி நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சி வேலைத்திட்டங்கள்/ பட்டப்பின் படிப்பு/ டிப்ளோமா பாடநெறிகளுக்கு அனுப்புதல். | வெளி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | 15 | 13 | 58 |
| 5 | பல்கலைக்கழகங்கள் /தொழிநுட்பக் கல்லூரி மாணவர்களுக்குத் தொழில் துறைப் பயிற்சி வழங்குவது தொடர்பான வெளி மேற்பார்வையாளராகச் செயற்படல் | பல்கலைக்கழகங்கள் / தொழிநுட்பக் கல்லூரி மாணவர்களுக்குத் தொழில் துறைப் பயிற்சி வழங்குவது தொடர்பாக மேற்பார்வை செய்த (அல்லது கணக்கெடுக்கப்பட்ட) எண்ணிக்கை | குறிப்பிட்ட இலக்குகளை வழங்க முடியாது | 0 | * |





(Stakeholders) கடற்றொழில் சட்டம் மற்றும் சட்டபூர்வமான கடற்றொழில் உள்ளீடுகள் குறித்து விழிப்புணர்வூட்டல்



படம் 5: சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு (Stakeholders) கடற்றொழில் சட்டம் மற்றும் சட்டபூர்வமான கடற்றொழில் உள்ளீடுகள் குறித்து விழிப்புணர்வூட்டல்



படம் 6: மதவாச்சி, பூனாவ, சிக்ஷா கடற்படைத் தளத்தில் பயிற்சி பெறும் கடற்படை அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்

## 5.0 தகவல் தொழில்நுட்பப் பிரிவு

### 5.1 நோக்கம்

கடற்றொழில் வளங்களை முகாமைத்துவம் செய்வதற்காக இணையவழிப் பயன்பாடுகளை உருவாக்குதல் மற்றும் பேணிவருதல் என்பன பிரிவின் பிரதான குறிக்கோளாகும். திணைக்களத்தின் வலையமைப்பைப் பராமரித்தல், இணையவழிப் பயன்பாட்டு முறைமையைச் செயற்படுத்துதல், தொடர்புடைய வன்பொருட்களைக் கையாளுதல், விரிவான தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி என்பன முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகளாகும்.

### 5.2 பிரதான செயற்பாடுகள்

- திணைக்களத்தின் பரிமாறிகளில் (Servers) திணைக்கள வலையமைப்பு மென்பொருட்களை செயற்படுத்துதல்.
- திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பராமரித்தல் மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம்.
- திணைக்கள வலையமைப்பு மற்றும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்பம் குறித்து அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்குதல
- இ-பதிவு முறைமையின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக, இ-குழுக்களை மேற்பார்வை செய்தல் மற்றும் ஆதரவளித்தல்.
- இயங்குநிலை அறிக்கையிடல் முறைமையை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- தரவுப் பகுப்பாய்வுக்காக மென்பொருள் பயன்பாட்டை மேம்படுத்துதல்.
- பணியாளர்கள் அடிப்படையிலான கண்காணிப்பு முறைமையை நடைமுறைப்படுத்துதல்.
- திணைக்களத்தின் கணினி வன்பொருளமற்றும் மென்பொருட்களைப் பராமரித்தல்.
- கலன் கண்காணிப்பு முறைமையை அறிமுகப்படுத்துதல், அதன் பராமரிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்

### 5.3 දෙපාර්තමේන්තුවේ සේවාවන් ජාලගත මෘදුකාංගය මගින් ක්‍රියාත්මක කිරීම



திணைக்கள வலையமைப்பு மென்பொருளானது திணைக்களத்தின் 30 இற்கும் மேற்பட்ட செயன்முறைகளை டிஜிட்டல் செயன்முறைகளாக மாற்றி, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.
மீனவர்களைப் பதிவு செய்தல், படகுகளைப் பதிவு செய்தல், விஞ்ஞானத் தரவுகளைச் சேகரித்தல் போன்ற இன்னும் பல செயன்முறைகள் இதில் உள்ளடங்குகின்றன. திணைக்கள வலையமைப்பு மென்பொருளானது Cloud சேவர் முறைமையினுள் இணையப் பயன்பாடாக செயற்படுகிறது. இதனை http://msdfar.com ஐப் பயன்படுத்தி அணுக முடியும்.திணைக்கள வலையமைப்பு மென்பொருளைப் பயன்படுத்தி, 62,000 மீனவர்கள், 99 மீன்பிடிக் கலன் கட்டும் தளங்கள் (பழைய தரவுகள் உட்பட), 45,000 இற்கும் மேற்பட்ட படகுகள், 7,300 கலத்தலைவர்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 15,000 இற்கும் மேற்பட்ட செயற்பாட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டிற்காக, இணையவழிப் புறப்படும் முறைமை ஊடாக 50,000 இற்கும் மேற்பட்ட இணையவழிப் புறப்படுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் செயன்முறையானது 2021 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.2022 ஆம் ஆண்டில், இணையவழி மென்பொருளைப் பயன்படுத்தும் அரச நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் போட்டியில் சிறந்த வலையமைப்பு மென்பொருளாக MSDFAR முறைமைக்கு வெண்கலப் பதக்கமும், 2024 ஆம் ஆண்டின் அரச சேவையின் சிறந்த புதுமையான உற்பத்தி/திட்டத்தை தேர்ந்தெடுக்கும் போட்டியில் இரண்டாம் இடமும் கிடைத்தது.

### 5.4 திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பராமரித்தல் மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம் www.fisheriesdept.gov.lk.




திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பராமரித்தல் மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம் என்பவற்றுக்குத் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பொறுப்பாகும். திணைக்களத்தின் இணையத்தளம் தினமும் இற்றைப்படுத்தப்படுவதுடன் திணைக்களச் செயன்முறைகள் பற்றிய விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது. திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் அதற்கெனத் தனியான பக்கம் உள்ளதுடன், அதில் அந்தப் பிரிவின் பொறுப்புக் கூற வேண்டிய செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அலுவலர்களின் தொடர்புத் தகவல்களை இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், அவை தொடர்ந்து இற்றைப்படுத்தப்படுகின்றன. இணையத்தளத்தில் உள்ள அணுகல் ஊடாக, அலுவலர்கள் திணைக்களத்தின் அனைத்து முறைமைகளையும் அணுக முடியும். திணைக்களத்தின் இணையத்தளம், சிறந்த சிங்கள இணையத்தளத்திற்கான தங்கப் பதக்கத்தையும், 2020 ஆம் ஆண்டின் சிறந்த (.LK) இணையப் போட்டியில் சிறந்த அரசாங்க இணையத்தளத்திற்கான தகுதிப் பரிசையும் வென்றது.

### 5.5 திணைக்கள அலுவலர்களின் வலையமைப்பு மென்பொருள் பயன்பாடு பற்றிய மதிப்பீடு

திணைக்களத்தின் வலையமைப்பு மென்பொருள் (MSDFAR) முறைமையைப் பயன்படுத்தி தமது கடமைகளைச் செய்த அலுவலர்களை மதிப்பீடு செய்வதற்காக, புள்ளிகள் வழங்கும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் அதிக புள்ளிகளைப் பெற்ற அலுவலர்களை ஊக்குவிக்கும்

விதமாக, சமீபத்திய வகை புதிய டெப்லெட் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் அனைத்து அலுவலர்களும் இந்தப் பயன்பாட்டின் மூலம் தமது கடமைகளைச் செய்ய தூண்டப்பட்டனர்.

**5.6 திணைக்கள அலுவலர்களின் வலையமைப்பு மென்பொருள் பயன்பாடு குறித்த அலுவலர் பயிற்சி**

15 கடற்றொழில் மாவட்டங்களிலும் மென்பொருள் முறைமை செயற்படுத்தப்படும் விதம் தனித்தனியாகக் கண்காணிக்கப்படுகின்றது. அதற்காக எங்கள் பிரிவின் அலுவலர்கள் தங்களை அர்ப்பணித்துள்ளனர். அவர்களுக்கு எழும் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படுவதுடன், பயிற்சி தேவை என அறிவிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

**5.7 முறைமையின் மேம்படுத்தல்**

திணைக்களத்தில் செயற்பாட்டில் உள்ள மென்பொருள் உருவாக்கமானது, தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மென்பொருளைத் தயாரிக்கும் அலுவலர்களாலே மேற்கொள்ளப்படுவது ஒரு விசேட அம்சமாகும். இதுவரை உருவாக்கப்பட்ட மென்பொருட்களுக்கு மேலதிகமாக, இவ்வருடம் கீழே குறிப்பிடப்பட்ட பகுதிகள் உருவாக்கப்பட்டு MSDFAR முறைமையுடன் இணைக்கப்பட்டது.

- இணையவழிப் பண அறவீடுகள்
- இணையவழி மேலதிக நேர கொடுப்பனவுகளை வழங்கும் முறைமை
- தலைமைக் காரியாலயத்திலிருந்து வழங்கப்படும் விசேட முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்களை இணையவழியில் வழங்குதல்
- இணையவழி கடற் பொறியியலாளர் அறிக்கைகளை வழங்குதல்
- திணைக்களத்தின் இணையவழி ஆவணக் களஞ்சியம்

சேவர் முறைமை மற்றும் பயன்பாடுகளில் உள்ள ஆபத்துக்களைக் கண்டறிந்து குறைப்பதற்காக, தகவல் தொழில்நுட்பப் பிரிவு திணைக்களத்தின் பரிமாறிள், வலையமைப்பு மென்பொருட்கள் மற்றும் அனைத்துத் திணைக்களப் பயன்பாடுகள் தொடர்பாகவும் பாதுகாப்பு மதிப்பீடு ஒன்றை ஒழுங்கமைத்தது. இந்த மதிப்பீட்டில் கண்டறியப்பட்ட குறைபாடுகளைக் குறைப்பதற்காக முறைமை மேம்படுத்தல்களும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மென்பொருள் தயாரிக்கும் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன. இந்த மதிப்பீட்டின் பரிந்துரையின்படி, இதுவரை பௌதீக சேவர் முறைமையில் செயற்பட்டு வந்த MSDFAR முறைமையானது, cloud server முறைமைக்கு மாற்றப்பட்டது. எனவே, சைபர் பாதுகாப்பு தொடர்பான அடிப்படை பணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**5.8 கலன் கண்காணிப்பு முறைமை**

சர்வதேச கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து பலநாள் மீன்பிடி கலன்களையும் செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் கண்காணிப்பது சர்வதேச சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் கட்டாய அங்கமாகும். 2015 ஆம் ஆண்டு நம் நாட்டிற்கு விதிக்கப்பட்ட ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஏற்றுமதித் தடைக்கான முக்கிய காரணங்களில் இந்நாட்டிற்குப் பொருத்தமான கலன் கண்காணிப்பு முறைமை (VMS) இல்லாதிருந்தமையும் ஒன்றாகும். எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டு முதல் சர்வதேச கடலில் செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் பெற்ற கலன்கள் மாத்திரம் VMS மூலம் கண்காணிக்கப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட சர்வதேச சட்ட விதிகளுக்கும் மீன் ஏற்றுமதித் தேவைகளுக்கும் அமைய, அனைத்துப் பலநாள் மீன்பிடி கலன்களையும் VMS இல் உள்ளடக்கும் தேவை எழுந்தது. பலநாள் மீன்பிடி கலன்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மீன்பிடி அல்லாத ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளை (உதாரணம்: சட்டவிரோத புலம்பெயர்வு, போதைப்பொருள் கடத்தல்) அடையாளம் காண்பதற்கான செலவு குறைந்த முறையாகவும் இதன் தேவை எழுந்திருந்தது.

அதன்படி, மேற்கூறிய தேவைக்குப் பொருத்தமான 4,200 VMS அலகுகளை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியை வழங்குவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் இணங்கியது. அதன்படி, கலன் கண்காணிப்பு முறைமை 2021 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகிறது. இதில், Blue Tracker VMS ட்ரான்ஸ்பொண்டர், இரிடியத்தை ஒரு செயற்கைக்கோள் சேவையாகப் பயன்படுத்துகிறது. “Second Screen” என்று அழைக்கப்படும் VMS முறைமை மென்பொருளானது நவீன வசதிகளுடன் இருப்பதுடன், மிகவும் சுறுசுறுப்பாகக் கலன்களைக் கண்காணிக்கும் வசதியையும் கொண்டது. இதன் மூலம், VMS முறைமை வழியாக மீனவர்களுக்குப் பயனுள்ள சேவைகளை வழங்கக் கூடிய வகையில், வலையமைப்பு சார்ந்த (Web based) முறைமை ஊடாக தீவைச் சுற்றியுள்ள துறைமுக அலுவலகங்களுக்கும் கண்காணிப்பு வசதி வழங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கலன்களைத் தயாரித்த கலன் உரிமையாளர்கள் புதிய VMS இயந்திரங்களை கொள்வனவு செய்ய வேண்டும்.

VMS முறைமையை சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைமுக அலுவலகங்கள் ஊடாகவும் அணுக முடியும் என்பதுடன், இது தலைமைக் காரியாலய வளாகத்தில் அமைந்துள்ள கடற்றொழில் கண்காணிப்பு மத்திய நிலையத்தால் (FMC) ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் முகாமைத்துவம் செய்யப்படுகிறது. கடற்றொழில் கண்காணிப்பு மத்திய நிலையம் அனைத்து நவீன தொழில்நுட்பங்களுடனும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இது தவிர, கலன் உரிமையாளர்கள் (ஏநளளநட முறநெசள) தமது கலன்களின் விபரங்களைப் பார்ப்பதற்காக, ஒரு மொபைல் அப் (Mobile App) ஊடாக முறைமையை அணுக முடியும். தற்போது FMC 24x7 இயங்கி வருகிறது. சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கைகள், ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் எல்லைத் தாண்டுதல்

போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறக்கூடிய ஆபத்தான கலன்களை அடையாளம் காண்பதற்காக, இந்த முறைமைக்கான அணுகல் கடற்படைக்கும் வழங்கப்பட்டுள்ளது.
தற்போது, இந்தியப் பெருங்கடலில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் நம் நாட்டின் 34 அடிக்கு மேற்பட்ட அனைத்துப் பலநாள் மீன்பிடி கலன்களும், அதாவது ஏறத்தாழ 4,800 கலன்கள் இந்தப் முறைமையின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. சமீபத்தில் நம் நாட்டில் ஆய்விற்கு வந்த ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிநிதிகளாலும் பாராட்டப்பட்ட, நம் நாட்டின் VMS முறைமை, தற்போது ஆசியாவில் உள்ள மிகவும் நவீன கண்காணிப்பு முறைமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 6. 0 நடவடிக்கைப் பிரிவு

### 6.1 மீன்பிடி கலன்கள் மற்றும் கரையோரத்திற்கு இடையில் வானொலிச் செய்திப் பரிமாற்றத்திற்காக தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்

மீன்பிடி கலன்கள் மற்றும் கரையோரத்திற்கு இடையில் வானொலிச் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கான தொடர்பாடல் வசதிகளை வழங்கும் நடவடிக்கைகள், பிரதேச வானொலி நிலையங்கள் ஊடாக கொழும்பு பிரதான நடவடிக்கைப் பணியகத்தினால் ஒருங்கிணைக்கப்படுகின்றது. தொடர்பாடல் வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், 24 மணி நேரமும் கரையோரத்திற்கும் மீன்பிடி கலன்களுக்கும் இடையில் தொடர்பைப் பேண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், மீன்பிடி கலன்களுக்கு வானிலை அறிக்கைகள் மற்றும் திடீர் மோசமான வானிலை நிலைமைகள் பற்றிய முன் எச்சரிக்கைகள் தினசரி வழங்கப்படுவதுடன், கலன் உரிமையாளர்கள் கடலில் உள்ள தமது கலன்களுடன் மேற்கொள்ளும் அத்தியாவசியச் செய்திப் பரிமாற்ற நடவடிக்கைகளுக்காகவும் வசதிகள் வழங்கப்படுகின்றன. மீன்பிடி கலன்களில் இருந்து அவசரச் செய்திகள் கிடைக்கும் நேரம் முதல் நிவாரண/மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நேரம் வரை, இலங்கை கடற்படை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பிராந்திய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையம் ஆகியவற்றுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளுக்காக, 19 பிரதேச வானொலி நிலையங்கள் கொழும்பு பிரதான அலுவலகத்துடன் இணைந்து செயற்படுகின்றன.

சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட மயிலிட்டி, திக்கோவிட்ட, வெள்ளமன்கரை, கலமட்டிய மற்றும் கப்புறதொட்ட ஆகிய மீன்பிடித் துறைமுகங்களில் பிரதேச வானொலி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் திணைக்களத்திடம் உள்ள பழைய வானொலி இயந்திரங்களைப் பயன்படுத்தி, தற்போது தேடுதல் நடவடிக்கைகள் வழமை போன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், மேற்குறிப்பிட்ட மீன்பிடித் துறைமுகங்களுக்காக புதிய வானொலி இயந்திரங்களின் தேவை கடுமையாக எழுந்துள்ளது.

### 6.2 மீன்பிடி கலன்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் அழைப்புக் குறியீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சர்வதேச சட்ட விதிகளுக்கு இணங்குவதற்காக, கடற்றொழில் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீன்பிடி கலன்களுக்கு சர்வதேச அழைப்புக் குறியீடுகள் வழங்கப்படுகிறது. மீன்பிடி கலன் உரிமையாளர்களின் விண்ணப்பங்களைப் பெற்று, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட்டு, மீன்பிடி கலன்களின் வானொலிச் செய்திப் பரிமாற்ற இயந்திரங்களைப் பயன்படுத்துவதைத் துரிதப்படுத்துவதற்காக தேடுதல் நடவடிக்கைகள் பிரிவினர் தலையிட்டு செயற்படுகின்றனர்.

**அட்டவணை** 10: விண்ணப்பங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| வழங்கப்பட்ட வானொலிச் செய்திப் பரிமாற்ற இயந்திர அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை (ஜனவரி 2025 முதல் ஒகஸ்ட் 31, 2025 வரை) | 356 |

### 6.3 மீன்பிடி கலன்கள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்துக்களின்போது காப்பீட்டுத் தொகை பெறுவதற்குத் தேவையான தகவல்களை உறுதிப்படுத்திக் கொடுத்தல்.

மீன்பிடி கலன்கள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்துக்களின்போது, அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்போதும் அவர்கள் காப்புறுதி இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளும்போதும், காப்புறுதி நிறுவனங்களுக்கு, மீன்பிடி கலன்கள் அனுப்பிய அனைத்து செய்திப் பரிமாற்றத் தகவல்களும், சம்பந்தப்பட்ட பிரதேச அலுவலகங்கள் மற்றும் தலைமைக் காரியாலயத்தில் இருந்து பெறப்பட்ட பதிவுகளையும் பயன்படுத்தி, உறுதிப்படுத்தப்பட்டுச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்தத் திணைக்களத்திடம், ஆபத்தில் சிக்கும் மீன்பிடி கலன்களையும் கடற்றொழிலாளர்களையும் காப்பாற்றுவதற்கும், அவசர சிகிச்சைகளை வழங்குவதற்கும், விரைவாகக் கரைக்குக்

கொண்டுவருவதற்கும் மீட்புக் கலன்கள் இல்லாதபடியால், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிகள் பெறப்படுகின்றன.

**அட்டவணை** 11: விபத்துக்களின் எண்ணிக்கை (2025 ஜனவரி முதல் 2025 ஆகஸ்ட் 31 வரை)

| | |
|---|---|
| ஆழ்கடலில் பதிவான திடீர் விபத்துக்களின் எண்ணிக்கை | 160 |
| ஆழ்கடலில் ஏற்பட்ட ஆட்கள் மரணங்கள் மற்றும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை | 18 |
| திடீர் விபத்துக்களினால் சேதமடைந்த மீன்பிடி கலன்களின் எண்ணிக்கை | 05 |

### 6.4. வெளிநாடுகளில் கைதான மீனவர்கள் மற்றும் கலன்களை விடுவித்தல் மற்றும் நாட்டிற்கு கொண்டுவருதல்

**அட்டவணை** 12: வெளிநாடுகளில் கைதான மீனவர்கள் மற்றும் கலன்களை விடுவித்தல் மற்றும் நாட்டிற்குத் திருப்பிக் கொண்டுவருதல் (2025 ஜனவரி முதல் 2025 ஆகஸ்ட் 31 வரை)

| நாடு | கைதான மீனவர்களின் எண்ணிக்கை | கைதான கலன்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| இந்தியா | 05 | 02 | 00 | 00 |
| மாலைத்தீவு | 31 | 06 | 25 | 03 |
| சீஷெல்ஸ் | 06 | 01 | 00 | 00 |
| மியன்மார் | 00 | 00 | 00 | 00 |
| மடகஸ்கார் | 07 | 01 | 00 | 00 |

இந்த விடுவிப்புக்களுக்காக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவு ஊடாக, இந்தியா, மாலைத்தீவு, பிரான்ஸ் மற்றும் இலண்டனில் அமைந்துள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயங்களின் உதவிகள் பெறப்படுகின்றன

### 6.5 உள்நாட்டு, சர்வதேச மற்றும் வெளிநாட்டு எல்லைகளுக்குட்பட்ட கடல் எல்லைகளில் மிதக்கும் கப்பல்களை மீட்பதற்கான நடவடிக்கைகள்

**அட்டவணை** 13: மீட்கப்பட்ட மீனவர்கள், கலன்களின் எண்ணிக்கை (2025 ஜனவரி முதல் 2025 ஆகஸ்ட் 31 வரை)

| மீட்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | கைவிடப்பட்ட கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 948 | 158 | 02 |

இயந்திரங்கள் செயலிழப்பு காரணமாக அயல் நாடுகளின் கடல் எல்லைகளுக்குள் மிதந்து சென்ற, கடலில திடீர் விபத்துக்குள்ளான மீன்பிடிக் கலன்கள் மற்றும் திடீர் சுகவீனமடைந்த மீனவர்களை இலங்கை கடற்படை/கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கலன்கள், வர்த்தகக் கப்பல்கள் மற்றும் மீன்பிடிக் கலன்கள் மூலமாகவே மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மருத்துவ சிகிச்சைக்காக உடனடியாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

### 6.6 சிறிய / ஒருநாள் கலன்களுக்கான தகவல் தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்

கடலோர மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் சிறிய கலன்கள் மற்றும் மீனவர்களுக்கு, திடீர் வானிலை மாற்றங்கள் மற்றும் முன்கூட்டிய வானிலை எச்சரிக்கைகளை மீனவ சமூகத்திற்கு விரைவாக வழங்குவதன் மூலம் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக, டயலொக் நிறுவனம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் இந்தத் திணைக்களம் என்பன ஒப்பந்தம் செய்துள்ளன. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் தற்போதுவரை சுமார் 120,000 மீனவர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இந்த டயலொக் தகவல் சேவையில் பதிவு செய்துள்ளனர், மேலும் அவர்கள் இதன் பலன்களை அனுபவித்து வருகின்றனர்.

### 6.7 மீனவ சமூகத்தை விழிப்புணர்வூட்டல்

மீனவ சமூகம்/மீனவர்கள் மற்றும் கலன் உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டுவது அத்தியாவசியமான விடயமாக இருந்தபோதிலும், மீனவர்களின் உயிர் பாதுகாப்புக்கான ஆலோசனைகள் மற்றும் திடீர் விபத்துக்களின் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள், அத்துடன் கரையுடன் தொடர்புகொண்டு அவசர உதவி சேவைகளைப் பெறும் முறை, மற்றும் திடீர் வானிலை மாற்றங்களால் ஏற்படும் சூறாவளிகளின்போது உயிர்களைப் பாதுகாக்கப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் வானொலி கருவிகளுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெறும் முறை என்பன குறித்து அறிவூட்டுவது அத்தியாவசியம் எனத் தெரிந்தும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக முறையாக நிறைவேற்ற முடியவில்லை.

படகுப் பயணங்களில் ஈடுபடுவோரிடையே போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்திருப்பதன் காரணமாக, கப்பல் பாதைகளில் விபத்துக்கள் அதிகரித்துள்ள ஒரு பாதகமான போக்கு ஏற்பட்டுள்ளதுடன், உயிர்ச் சேதங்கள்/கலன்களின் அழிவுகள் அதிகரித்துள்ளன. மேலும், ஒழுங்கமைக்கப்பட்ட சட்டவிரோத புலம்பெயர்வுகளுக்குப் கலன்களைப் பயன்படுத்துவதும் பெருகியுள்ளது. பெருமளவிலான கலன்கள் ஆழ்கடலில் இயந்திரக் கோளாறுகளை எதிர்கொள்வது அதிகரித்துள்ளதுடன், குறிப்பாக வேறு நாடுகளின் கடல் எல்லைகளுக்கு அருகில் ஏற்படும் அனர்த்த நிலைமைகள் அதிகரித்திருப்பதனால், தொடர்ச்சியான இராஜதந்திர தலையீடுகள் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளின் மீட்பு மையங்களுக்கு அறிவிக்க வேண்டியுள்ளது. எனவே, கலன் உரிமையாளர்கள் தங்கள் கலன்களைப் பயணத்துக்கு அனுப்புவதற்கு முன்னர், மீண்டும் ஒருமுறை அவற்றின் கடல் பயணத் தகுதியைச் சோதித்துப் பார்க்க ஊக்குவிக்க விழிப்புணர்வூட்டல்கள் வழங்கப்பட வேண்டும்

**அட்டவணை** 14: ஒவ்வொரு துறைமுகத்திலிருந்தும் புறப்பட்ட மீன்பிடிக் கலன்களுக்கு வழங்கப்பட்ட புறப்பாடுகளின் எண்ணிக்கை (2025 ஜனவரி முதல் 2025 ஆகஸ்ட் 31 வரை)

| | **துறைமுகம்** | **புறப்படுகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | கற்பிட்டி | 255 |
| 2 | நீர்கொழும்பு | 3,777 |
| 3 | திக்கோவிட்ட | 837 |
| 4 | பேருவளை | 4,041 |
| 5 | அம்பலாங்கொடை | 844 |
| 6 | ஹிக்கடுவை | 663 |
| 7 | காலி | 4,720 |
| 8 | மிரிஸ்ஸ | 2,454 |
| 9 | தெவிநுவர | 3,131 |
| 10 | கோட்டேகொட | 890 |
| 11 | நில்வெல்ல | 1,907 |
| 12 | குடாவெல்ல | 3,853 |
| 13 | சாய்ந்தமருது | 846 |

| | **துறைமுகம்** | **புறப்படுகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 14 | தங்காலை | 1,023 |
| 15 | அம்பாந்தோட்டை | 607 |
| 16 | கிரிந்த | 415 |
| 17 | வாழைச்சேனை | 12,152 |
| 18 | திருகோணமலை | 2,312 |
| 19 | பருத்தித்துறை | 161 |
| 20 | மயிலிட்டி | 111 |
| 21 | வெல்லமன்கரய | 779 |
| 22 | கப்பரத்தொட்ட | 407 |
| 23 | கந்தர | 1,882 |
| 24 | கலமெட்டிய | 345 |
| 25 | சிலாபம் | 277 |

### 6.8 அறிக்கைகள் மற்றும் கலன்களின் புகைப்படங்களை தரவுத்தளத்தில் உள்ளிடுதல் மற்றும் முகாமைத்துவம்

**அட்டவணை** 15: லொக் அறிக்கைகள் மற்றும் கலன்களின் புகைப்படங்களை தரவுத்தளத்தில் உள்ளிடுதல் மற்றும் முகாமைத்துவம் (2025 ஜனவரி முதல் 2025 ஆகஸ்ட் 31 வரை)

| | | |
|---|---|---|
| **1.** | மீன்பிடி நடவடிக்கைகளுடன் தொடர்பாக பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற லொக் பிரதிகளின் எண்ணிக்கை | 3,678 |
| **2.** | செயற்பாடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட சரிபார்ப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | 3,678 |
| **3.** | லொக் தரவுத்தளத்தில் உள்ளிடப்பட்ட லொக் பிரதிகளின் எண்ணிக்கை | 24,025 |
| **4** | IOTC தேவைகளுக்காகப் பேணப்படும் கலன்களின் புகைப்படங்கள் தரவு முறைமையில் உள்ளிடப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை | 122 |

2015 இன் துறைமுக அரசு நடவடிக்கைகளின் செயல்முறை ஒழுங்குவிதித்தொடரின் அடிப்படையில், இலங்கையின் துறைமுக வசதிகளைப் பெற்றுக் கொள்ள அல்லது மீன்களைத் தரையிறக்க அல்லது மீள் கப்பலேற்ற வரும் வெளிநாட்டு மீன்பிடிக் கலன்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் மற்றும் கப்பல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவின் 16/11

தீர்மானத்திற்கு அமைய, இலங்கையின் துறைமுகங்களுக்கு வரும் வெளிநாட்டு மீன்பிடிக் கலன்களில் குறைந்தது 5% இற்குரிய பரிசோதனை அறிக்கைகள் இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அட்டவணை** 16: சேவைகள் (2025 ஜனவரி முதல் 2025 ஆகஸ்ட் 31 வரை)

| **சேவைகள்** | **வழங்கப்பட்ட அனுமதிப்பத்தரங்களின் எண்ணிக்கை** | **சோதனைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| மீன்களை மீள் கப்பலேற்றுதல் | 08 | 08 |
| பராமரிப்புப் பணிகள் மற்றும் விநியோகச் சேவைகள் | 08 | 01 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டு மீனவர்களின் பரிமாற்ற சேவை | 08 | 01 |
| **மொத்தம்** | **24** | **10** |

இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவின் 11/04 தீர்மானத்திற்கு அமைய, ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீன்பிடிக் கலன்களில் குறைந்தபட்சம் 5% இற்கு விஞ்ஞானரீதியான மீன்பிடிக் கலன் மேற்பார்வையாளர்களை ஈடுபடுத்தி, தகவல்களை இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அவ்வாறே, 2025.01.01 முதல் 2025.08.31 வரையான காலப்பகுதியில் 24 மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள கலன்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையும், அந்தக் கலன்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கையும் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை** 17: மீன்பிடிக் கலன்கள்

| **மொத்த மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை** >24m | **தொழிற்படும் கலன்களின் எண்ணிக்கை** | **மொத்த மீன்பிடி நடவடிக்கைகளின் எண்ணிக்கை** | **விஞ்ஞானரீதியான மீன்பிடிக் கலன்களின் மேற்பார்வைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 05 | 04 | 05 | 00 |

**6.9 இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு (IOTC), உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கு உரிய காலத்தில் அறிக்கைகளை வழங்குதல் மற்றும் வருடாந்தக் கூட்டங்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.**

- இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் வழங்க வேண்டிய அறிக்கைகள் உரிய கால எல்லைகளுக்குள் வழங்கப்படுகின்றன.
- இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவின் 10/11 தீர்மானத்திற்கு அமைய, அபிவிருத்தியடைந்து வரும் அங்கத்துவ நாடுகளுக்குக் குழுக்கூட்டங்கள் மற்றும் அமர்வுகளில் பங்குபற்றுவதற்காக வழங்கப்படும் நிதியுதவியின் கீழ், சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.
- இதற்கமைய, இலங்கை 2010 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு அநுசரணை முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது

**அட்டவணை** 18: அநுசரணை முன்னேற்றம்

| 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5% | 18% | 47% | 51% | 60% | 74% | 77% | 82% | 87% | 90% | 86% | 76% | 83% | 73.8% | 71.2% |

**தற்போது, இறுதி கட்டத்திற்கான 82 VMS கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.**

மேலும், VMS கருவிகள் மூலம் படகு உரிமையாளர்களுக்கு இலாபகரமான மற்றும் வினைத்திறனான சேவைகளை வழங்க முடியும். இங்கு, படகில் பொருத்தப்பட்டுள்ள அன்டெனா மிகக் குறைந்த மின்சக்தித் தேவையுடன் (2W) செயற்படுவதுடன், பிரதான மின்சக்தி வழங்கல் இல்லாத போதும் 3 நாட்கள் வரை அதன் மாற்று மின்சக்தியைப் பயன்படுத்தும் திறன் கொண்டது. இது FMC பணியாளர்களுக்கு இலகுவாகவும், தடையின்றியும் செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிப்பதுடன், படகு வேறு நாடுகளின் EEZ வலயம் போன்ற கட்டுப்பாடுடைய பகுதிகளுக்கு அருகில் இருக்கும்போது தன்னியக்க எச்சரிக்கைகளையும் உருவாக்குகிறது.
VMS முறைமையை தொடர்புடைய அனைத்து துறைமுக அலுவலகங்கள் மூலமாகவும் அணுக முடியும் மற்றும் DFAR இன் பிரதான அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மீன்பிடி கண்காணிப்பு மையத்தினால் (FMC) மையப்படுத்தப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. தற்போது மீன்பிடி கண்காணிப்பு மையம் (FMC) மூலமாக கலன்கள் 24x7 மணிநேரமும் கண்காணிக்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்குள் நுழைதல், VMS ஐ சேதப்படுத்துதல் போன்ற சந்தேகத்திற்கிடமான நடத்தைகளைக் கண்டறிவது FMC இன் பிரதான கடமைகளில் ஒன்றாகும். FMC நாள்தோறும் சமிக்கை இல்லாத அல்லது குறைந்த சமிக்கைகள் கொண்ட கலன்களை (அமைதியான கப்பல்கள் என்று அழைக்கப்படுகின்றன) அடையாளம் கண்டு, அவர்களின் கலன் மீண்டும் உரிய முறைமையில் இணைக்கப்படும் வரை, கலனின் புறப்பாட்டை இரத்து செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

நீண்ட காலமாக VMS செயலிழந்த கலன்கள் உட்பட அனைத்து சந்தேகத்திற்கிடமான கலன்கள் பற்றிய தகவல்கள் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசாரணைப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன. ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் எல்லை தாண்டுதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய அபாயகரமான கலன்களை அடையாளம் காணும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

அவுஸ்திரேலியா-இலங்கை VMS திட்டத்தின் கீழ், FMC ஆனது அனைத்து நவீன தொழில்நுட்பங்களுடனும் நவீனமயமாக்கப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க இலங்கை FMC ஆசியாவின் அதிநவீன கண்காணிப்பு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# 03
# இலங்கை தேசிய நீர்வாழின செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)

## தொலைநோக்கு

வலுவாதார மற்றும் ஏற்றுமதியை நோக்காக கொண்ட நீர்வாழ் உயிரினச் செய்கையினூடாக தேசிய உணவுப் பாதுகாப்பிற்கும், பொருளாதார சுபீட்சத்திற்கும் பங்களிப்பு வழங்குகின்ற தெற்காசியாவின் முன்னணி நீர்வாழ் உயிரினச் செய்கை தொடர்பான சேவை வழங்குநராக திகழ்தல்

## எமது பணிநோக்கு

1. தேசத்தின் உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற நீண்டகால வலுவாதார நீர்வாழ் உயிரின செய்கை முறைகளை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்

2. ஏற்றுமதியை மையமாக கொண்ட நீர்வாழ் உயிரின செய்கை தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கி, அதனூடாக இலங்கையின் அந்நியச் செலாவணியை ஈட்டல்.

3. நீர்வாழ் உயிரின செய்கை பிரிவின் விருத்திக்கு புத்தாக்க, செயற்றிறன்மிக்க மற்றும் சூழலுக்கு நலன்பயக்கும் சேவைகளை வழங்குதல்.

4. தொழிநுட்ப ஒத்துழைப்பு, இயலளவு விருத்தி மற்றும் வள முகாமைத்துவத்தின் ஊடாக சமுதாய மற்றும் பங்குதாரர்களை வலுவூட்டல்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமிய சமுதாயத்தின் சமூக – பொருளாதார இருப்பு தொடர்பாக நீர்வாழ் உயிரினச் செய்கை, நன்னீர் கடற்றொழிலின் வலுவாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகள் இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2025 ஆண்டில், அதிகாரசபையினால் மூலோபாய நிகழ்சித்திட்டங்களை செயற்படுத்தல், உற்பத்தி முறைமைகளை விரிவாக்கல் மற்றும் நீர்த்தேக்க மீன்பிடி முகாமைத்துவம், நீர்வாழ் உயிரினச் செய்கை தொடர்பாக சமுதாய பங்களிப்பினை மேம்படுத்தல், நன்னீர் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை தொடர்பாக சமுதாய பங்களிப்பினை மேம்படுத்தல் ஆகியவற்றினூடாக நன்னீர் மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயரினச் செய்கைப் பிரிவானது முன்னணி நிறுவனமாக திகழ்வதுடன் அதன் கருதுகோள் தொடர்ந்து வலுவூட்டப்பட்டு வருகின்றது.

இச் செயலாற்றுகை அறிக்கையில் ஆண்டினுள் இற்றைவரையிலான முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளதுடன், தேசிய அபிவிருத்தி முன்னுரிமை தொடர்பாக அதிகாரசபையின் பங்களிப்பும் இதன் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### நன்னீர் மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை உற்பத்தி




2025 ஆண்டின் முதல் எட்டு மாதங்களிலும், இலங்கையின் நன்னீர் மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கைகளினது உற்பத்தி 39,590 மெ. தொன் ஆக இருந்ததுடன், அது வருடாந்த உற்பத்தி இலக்கான 102,000 மெ.தொன் தொகையின் 39% வீதமாகும்.

- நன்னீர் மீன்பிடி உற்பத்தி 32,810 மெ.தொ. ஆக இருந்ததுடன் அது அதன் இலக்கான 85,000 மெ.தொ. இன் 39% வீதமாகும். 2025 ஆகஸ்ட் மாதம் வரையிலான மொத்த நன்னீர் மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின செய்கை உற்பத்தியின் 83 % ஆன பங்களிப்பு இப்பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.
- செழும்புநீர் மற்றும் சமுத்திர நீர்வாழ் உயிரின செய்கை உற்பத்தி 6,780 மெ.தொ. ஆக இருந்ததுடன் அது வருடாந்த இலக்கான 17,000 மெ.தொ. தொகையின் 40 வீதமாகும்.
- இக் காலப்பகுதியினுள் இப்பிரிவு மொத்த மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை உற்பத்திக்கு 16% வீதமான பங்களிபபினை வழங்கியுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் காலத்திற்கேயுரிய நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதுடன் நன்னீர் மீன்பிடி ஓரளவு அதிகரிக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மூலம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் உற்பத்தி அதிகரிக்கப்படும்.

# நன்னீர் கடற்றொழில்சார் அபிவிருத்தி

## அபிவிருத்திப் பணிகள்

மீன் குஞ்சுகள் மற்றும் நன்னீர் இறால் குடம்பிகள் வைப்பிடல









**மீன் சினை இருப்புக்கான அரசின் விசேட உதவித் வேலைத்திட்டம்**

2025 ஆம் ஆண்டு தொடர்பாக அரசினால் நன்னீர் சினை வைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 16 மில்லியன் மீன் குடம்பிகள், 51 மில்லியன் மீன் குஞ்சுகள், 51 மில்லியன் சிறுமீனினம் மற்றும் ம16 மில்லின் மீன் குடம்பிகள் ஆகியனவற்றை வைப்பிட திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் முன்னேற்றம் பின்வருமாறு :நிலைத் தன்மையைப் பேணுவதற்கு சமூக பங்களிபபுடனான நிலையான நிதியமொன்னை நிறுவவும், மீனவ சமூகத்தை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்றை தயாரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

அட்டவணை 1: மீன் சினை வைப்பிடும் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

| விபரம் | இலக்கு (மில்லி) | மேம்பாடு (மில்) 31.08.2025 | | பெறுமதி (ரூ.மில.) |
|---|---|---|---|---|
| குடம்பிகளை வழங்கல் | 16 | 11.79 | 74% | 8.84 |
| மீன் சிறுகுஞ்சகளை வழங்கல் | 51 | 31.80 | 62% | 49.30 |
| மீன் குஞ்சுகளை வழங்கல் | 16 | 11.40 | 71% | 74.75 |
| **மொத்தம்** | | | | **132.89** |

## ஒவ்வொரு நிரந்தர நீர்த்தேக்கத்திற்கும் ஒரு வணிகத் திட்டத்தைத் தயாரித்தல்.



நீண்டகால, நிலையான நன்னீர் மீன்பிடி அமைப்பை நிறுவுவதற்காக, 2025 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மேம்பாட்டு உத்திகளுக்கு ஏற்ப ஒரு புதிய வழிமுறையை ஆணையம் அறிமுகப்படுத்தியது. பொருத்தமான அளவுகள் மற்றும் இனங்களின் மீன் குஞ்சுகளை தொடர்ந்து சேமித்து வைப்பதன் மூலம் நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். இந்த வழிமுறையின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நீர்த்தேக்கத்திற்கும் அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்ட மீன்வளத் திட்டம் மற்றும் வளர்ப்பு அடிப்படையிலான மீன்வளத் தொழிலின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான பணப்புழக்கத் திட்டம் உட்பட ஒரு விரிவான வணிகத் திட்டம் செயல்படுத்தப்படும்.2024 நவம்பர் மாதம் வரை வற்றாத வருடாந்த நீர்த் தேக்கங்களில் செய்கை அடிப்படையிலான மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நன்னீர் நீர்வாழ் செய்கையின் ஊடாக **88 , 060** மெற்றிக் தொன் உற்பத்தியாக பெறப்பட்டுள்ளது. இவ்வாறு உவர்நீர் இறால் உள்ளிட்ட கரையோர நீர்வாழின செய்கையின் மூலம் 9,110 மெற்றிக் தொன் உற்பத்தியாகப் பெறப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்கு, 115 நிரந்தர நீர்த்தேக்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன, ஆகஸ்ட் மாதத்திற்குள், 75 நீர்த்தேக்கங்களுக்கான வணிகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.
இந்த உத்திகளை அவற்றின் செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பதன் மூலம், மீன்வள அமைப்புகள் பின்வருவனவற்றை மிகவும் நிலையான அளவில் அடைவார்கள்:

- கூட்டு நடவடிக்கை மற்றும் கட்டமைக்கப்பட்ட திட்டமிடல் மூலம் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை வலுப்படுத்துதல்.
- நிதி ஸ்திரத்தன்மையை அடைதல், நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்தல்
- தன்னம்பிக்கை மற்றும் வளர்ச்சியை நாடும் பிற மீன்வள சங்கங்களுக்கு ஒரு முன்மாதிரியாகச் செயல்படுதல்

### நன்னீர் மீன் சினை உற்பத்தி

மீன் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்குடன் நீர்நிலைகளில் வைப்பீடு செய்வதற்குத் தேவையான மீன் குடம்பிகள் உற்பத்தி செய்வது அதிகார சபையின் பிரதான பொறுப்பாகும். நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுப் பருவம் வரை வளர்ப்பதற்கு தனியார் தரப்பினர், கொட்டு, கூடுகள், சமூக அடிப்படையிலான சிறிய மீன்கள் சினை உற்பத்தி அலகுக்கு வழங்கப்படும். இவ்வாறு பம்பல கஹந்தமோதர மற்றும் கல்லாறு நிலையங்களில் நன்னீர் இறால் குடம்பிகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. 2025 ஓகஸ்து மாதம் வரையான மீன் உற்பத்தி மற்றும் விநியோகம் வரைபடம் 3இல் காட்டப்பட்டுள்ளது.



படம் 3: நீர்வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி நிலையங்களில் சினை உற்பத்தியும் விநியோகமும்








வரைபடம் 4: தனியார் குளங்கள், சிறியளவிலான மீன் சினை உற்பத்தி அலகு, கூடு கொட்டுகளில் மீன் கு!சுகள் உற்பத்தி







## நன்னீர் மீன்பிடித்துறை தொடர்பாக வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

- இலங்கையில் கிராமிய மக்களின் உணவு மற்றும் போசாக்கை பாதுகாப்பதற்கு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு செய்கை அடிப்படையிலான நன்னீர் மீன்பிடித் தொழிலில் தன்னிறைவான நிறைபேறான அபிவிருத்திக்கான செயற்திட்டம்

கடற்றொழில், நீரியல்வள மற்றும் சமுத்திர வள அமைச்சுடன் இணைந்து நன்னீர் மீன்பிடித் தொழிலை வலுவூட்டுவதற்கு மற்றும் கிராமிய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஜப்பான் அரசினால் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து (FAO) நிதியளிக்கப்பட்டுள்ளது, இச் செயற்திட்டம் 2024 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2025 டிசம்பர் மாதத்தில் முடிவுறுத்தப்படவுள்ளது. 2025 இல் பின்வரும் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

- **அதிகாரசபைக்குச் சொந்தமான நான்கு நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி நிலையங்களை மேமம்படுத்தல்**






இங்கினியாகல நீர்வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி நிலையத்தின் இனப்பெருக்க நிலைய வசதிகளை மேம்படுத்தல்





தம்புளை நீர்வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி நிலையத்தின் 3 தாய் மீன் குளங்கள் மற்றும் சேற்று குளமொன்றும் மறுசீரமைத்தல்



இரணைமடு நீர்வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி நிலையத்தின் இனப்பெருக்க நிலையத்தின் நீரு் களஞ்சிய தாங்கி கொங்கிறீடிடல்





- **இனப்பெருக்க மற்றும் விருத்திக்கான இயலளவினை அதிகரிப்பது தொமர்பாக எக்கல்லோயா சிறியளவிலன இனப்பெருக்க அலகின் வசதிகளை மேமம்படுத்தல்.**



குடம்பிகளை விருத்தி செய்வது தொடர்பாக 3 சேற்றுக் குளங்கள் கொன்கிறீட் இடப்பட்டது.

- **ஆதிகாரசபைக்கு மீன் குஞ்சுகளை எடுத்துச் செல்வதற்காக 3 பவுஸர்கள் வழங்கல்.**





- **மீன் குஞ்சுகளை வைப்பிடுதல்**

| மாவட்டம் | மீன் குஞ்சுகளை வைப்பிடுதல் மில்லியன் (சனவரி – ஆகஸ்ட் |
|---|---|
| அநுராதபுரம் | 0.44 |
| மட்டக்களப்பு | 1.12 |
| மொனராகலை | 0.49 |
| முல்லைத்தீவு | 0.65 |
| **மொத்தம்** | **2.70** |

- **சமுதாய அடிப்படையிலானதும் சிறியளவிலானதுமான 3 இனப்பெருக்க அலகுகளைத் தாபித்தல்.**

இலங்கையின் மீன் வளர்ப்பினை அடிப்படையாக கொண்ட கடற்றொழிலின் வலுவாதார விருத்திக்கு பிரதான தடையாக அமைவது, மீன் குஞ்சிகளினதும், குறிப்பாக காப் குஞ்சிகளினதும் பற்றாக்குறையாகும். நிலவுகின்ற உற்பத்தி வசதிகள், இடவசதி, இயலளவு மட்டுப்படுத்தப்படுதல் ஆகியன காரணமாக மீன் வளர்ப்பினை அடிப்படையாக கொண்ட கடற்றொழில் தொடர்பாக தொடர்ந்தேச்சையாக மீன் சினை வழங்கலை உறுதிப்படுத்துமுகமாக சமுதாய அடிப்படையிலான இனப்பெருக்க அலகினை வலுவூட்டுவது அத்தியாவசியமாகும்.

ஆதற்கமைய மொனராகலை மாவட்டத்தின் முத்துக்கணடி, மட்டக்களப்பு மாவட்டத்தின் புளுகுனாவ மற்றும் அநுராதபுர மாவட்டத்தின் பதவி ஆகிய பிரதேசங்களில் 3 சிறிய இனப்பெருக்க அலகுகளைத் தாபிக்கப்பட்டு வருகின்றது.


மட்டக்களப்பு மாவட்டம் - புளுகுனாவ


மொனராகலை மாவட்டம் -முத்துக்கணடி,


அநுராதபுர மாவட்டம் - பதவிய

**ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதியளிப்பின் கீழ் செயற்படுத்தப்டும் அம்பாறை மாவட்டத்தின் சுய நீடுநிலைத்த மீன்வளர்ப்பினை அடிப்படையாக கொண்ட நன்னீர் மீன்பிடி மாதிரியொன்றை தாபத்தலுக்கான தொழிநுட்ப உதவி வழங்கல்**

இச் செயற்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் பன்னல்கம, எக்கல்ஓய, நாமல் ஓயா, ஹிமிதுராவ மற்றும் கொண்டுவட்டுவான நீர்த்தேக்கம் மாத்திரமன்றி எக்கல் ஓயா சிறியளவிலான மீன் இனப்பெருக்க அலகு மற்றும் ரஜ வாவி சிறியளவினா மீன் சினை உற்பத்தி அலகு ஆகியன அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனவாகும். இச் செயற்திட்டம் 2024 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2025 செப்தெம்பர் 15 ஆந் திகதி முடிவுறுத்தப்படும். 2025 ஆண்டினுள் பின்வரும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



**தாய் மீன்களை இறக்குமதி செய்தல்**

2025 ஜூலை 28 ஆந் திகதி ரோஹு கெட்லா, மிரிகல் மற்றும் தனகொல காபயா உட்பட உயிருடனான 11,546 மீன்கள் பங்காளதேசத்திலி இருந்து இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படடது. தடுப்புக் காலத்தின் பின்னர் ம்றும் சுகாதார நிலை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட பிரதான நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருததி நிலையத்திற்கு மீன்கள் விநியோகிக்கப்படும்.

- **நீர்த்தேக்கங்களிலிருந்து தாய் மீன்களைத் திரட்டல்**

இங்கு தாய் மீன்களை விருத்தி செய்யுமுகமாக முதிர்ச்சியடைந்த மீன்கள் நீர்த்தேக்கங்களிலிருந்து பிடிக்கப்படுகின்றன. எக்கல்ஓயா சிறியளவிலான இனபபெருக்க மையத்திற்குத் தேவையான குஞ்சுகளை அம்பாறை மாவட்ட நீர்த்தேக்கங்களிலிருந்து திரட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கமைய அம்பாறை மாவட்டத்தின் எக்கல் ஓயா, நாமல் ஓயா, ஜயந்தி வாவி, கண்டிக்குடி ஆறு ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து 144 மீன்கள் திரட்டப்பட்டன.





- **மீன்பிடி சமுதாயத்திற்கு காசேடு பேணல் அறிக்கையிடல் சம்பந்தமான பயிற்சியளிப்பு**



நிதிய முகாமைத்துவம், மீன் சினைகளை வைப்பிடல், நாளாந்த அறுவடை திட்டமிடல், முகாமைப்படுத்தல், அங்கத்தவர்களிடையே நம்பிக்கையை பேணல், கணக்காய்வுக்காக ஆயத்தமாதல், வெளித்தரப்பு நிதி ஈர்ப்பு செயற்பாடுகள் மற்றும் நீண்டகால அபிவிருத்திப் பணிகளை உறுதிப்படுத்துமுகமாக உரியவாறு

காசேடு பேணல் மற்றும் அறிக்கையிடல் என்பன அத்தியாவசிமாகும்.

தற்போதைய பெரும்பாலான மீன்பிடி சங்கங்களில் சரியான நிதி அறிக்கைகளை பேணக்கூடிய திறன் காணப்படுவதில்லை. ஆதலால் ஈர்ப்பு நடவடிக்கைகள் பலவீனமடைதல், பொறுப்புக்கூறலின்மை மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்கள் தவிர்க்கப்படுகின்றன. இவ்வாறாக விடயறிவை வழங்கும் பொருட்டு மீன்பிடிச் சங்கங்களின் அலுவலர்கள், பொருளாளர் மற்றும் உரிய அங்கத்தவர்களை இலக்காக கொண்டு காசேடு பேணல் குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **கடற்றொழில் முகாமைத்துவம் தொடர்பாக விழிப்பூட்டல்**





செயற்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நீர்த்தேக்கங்களை மீனவ சமுதாயத்திற்காக முகாமைப்படுத்தல் மற்றும் வர்த்தக திட்டமிடல் அபிவிருத்தி செயற்பாடுகள் இற்றைப்படுத்தல் தொடர்பான ஐந்து விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **மீனுணவு வழங்கலும் உணவு முகாமைத்துவ பயிற்சியும்**

அம்பாறை மாவட்டத்தில் மீனவ சமுகத்தினருக்காக உணவு மற்றும் உணவு முகாமைத்துவம் பற்றிய இரண்டு நாட்களைக் கொண்ட இரண்டு பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கலுனல்லோய, கஞ்சிக்குடி ஆறு, வலாத்ப்பிட்டி, கருங்காவ, தமன, வலகம, கரகஸ்வெவ,ஹேனானிகல மற்றும் வனவல ஆகிய நீர்த்தேங்களிலிருந்து 60 மீனவர்கள் அதில் கலந்து கொண்டனர்.





## கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி

## கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்தி (சனவரி – ஆகஸ்ட் 2025)



**உவர்நீர் இறால்**

**உற்பத்தி - 4,930 மெ.தொ.**



**கடலட்டை**

- **உற்பத்தி - 382 மெ.தொ. (ஈரலிப்பு)**



**மோதா**

**உற்பத்தி - 756 மெ.தொ.**



**கடற் தாவரம்**

- **உற்பத்தி - 546 மெ.தொ. (ஈரலிப்பு)**

### அபிவிருத்திப் பணிகள்

**யாழ்ப்பாண கடலட்டை இனப்பெருக்க மையமொன்றைத் தாபித்தல்**

கடலட்டை செய்கையானது இலங்கையில் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் துறையில் பிரபல்யமடைந்துவரும் ஒரு பிரிவாகும். முக்கியமாக சீன மற்றும் ஏனைய கிழக்கு ஆசிய நாடுகளில் பிரபல்யமான உணவாகக் கொள்ளல் மற்றும் மருத்துவ குணம் கொண்ட கடலட்டைக்கு சர்வதேச சந்தையில் அதிக விலை நிலவுகின்றது.

நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொடர்பாக போதிய கடலட்டைக் குஞ்சுகள் இல்லாமை, இலங்கையில் கடலட்டை வளர்ப்புத் துறை முகங்கொடுக்கின்ற பாரிய சவாலாக மாறியுள்ளது. இது இத்துறையின் அபிவிருத்திக்கும் நீடுநிலைப்புக்கும் தடையாக உள்ளது. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, யாழ்ப்பாண வணிக அளவிலான கடலட்டை இனப்பெருக்க மையம் ஒன்றைத் தாபிப்பது தொடர்பாக வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் கீழ் ரூபா 175 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

உத்தேச இனப்பெருக்க மையம் ஊடாக 300 ஏக்கர் உற்பத்திப் பரப்பு தொடர்பாக வருடாந்தம் 1.08 கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதனூடாக ஓராண்டுக்கு 324 மெ.தொ. (ஈரலிப்பு) கடலட்டைகள் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், வருடாந்த ஏற்றுமதி வருமானம் 9.72 அமெரிக்க டொலர் மில்லியன் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் குறிக்கோள் என்னவெனில், கிராமிய வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், மாற்றீட்டு வருமான வழிமுறையொன்றை வழங்கல் மற்றும் நாட்டுக்கு பெரிதும் தேவைப்படும் அந்நியச் செலாவணயை அதிகரிப்பதாகும். நீடுநிலைதத உற்பத்தி திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக சமுதாய அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் அதே

வேளை இலங்கை நீர்வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்திகளை ஏற்றுமதி செய்யுமுகமாக குறிப்பிடத்தக்க பங்களிப்பினை இப்பிரிவு வழங்கும் என்பது திண்ணம்.

## *இறால் நீர்வாழ் உயிரின் வளர்ப்பு தொடர்பாக வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள்*

<u>**பயனுறுதிமிக்க உயிர்பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தொழிநுட்ப செயற்திட்டங்கள் ஊடாக முறைசார்ந்த மற்றும் வலுவாதார நீர்வாழ் உயிரின வளர்ப்பு (GCP/GLO/086/ROK) Smart and Sustainable Aquaculture through Effective Biosecurity and Digital Technology (GCP/GLO/086/ROK) Project**</u>

கொரியா அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக "பயனுறுதிமிக்க உயிர்பல்வகைமை பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தொழிநுட்பம் ஊடாக முறைசார்ந்த மற்றும் வலுவாதார நீர்வாழ் உயிரின வளர்ப்பு" எனும் செயற்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக நிதியளிக்கப்பட்டுள்ளன. இச் செயற்திட்டம் இறால் நீர்வாழ் உயிரின வளர்ப்பு பாதுகாப்பினை வலுப்படுத்துவது தொடர்பாக சக்தி வாய்ந்த பிரவேசமொன்றைக் கட்டியெழுப்பும் எனலாம்.

இச்செயற்திட்டம் இறால் வளர்ப்பின் உயிர்பல்வகைமை பாதுகாப்பினை உறுதிப்படுத்துமுகமாக வலுவான பிரவேசமொன்றுக்கு உத்தரவாதமளிக்கும். ஸ்மாட் மற்றும் டிஜிட்டல் தொழிநுட்பம் வாயிலாக உயிர்பல்வகைமை பாதுகாப்பு குறித்ததான அவதானிப்புக்கான தொடர்பாடல், கண்காணிப்பு மற்றும் மட்டுப்படுத்தல், மேம்படுத்தல் என்பன அதன் நோக்கமாகும். இச் செயற்திட்டம் உயிர்பல்வகைமை பாதுகாப்புக் கட்டுப்பாட்டு முறைமையை பின்பற்றுவதற்கும் பயனுறுதி மிக்க வகையில் செயற்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு நல்கும்.

2025 ஆண்டினுள் செயற்படுத்தப்படட அபிவிருத்திச் செயற்பாடுகள்

- இறால் பண்ணை டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் உலகளாவிய தகவல் முறைமை (GIS) விபரப்படுத்தல் (profiling)
- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் (FAO) மேம்படுத்தப்பட்ட ஸ்மாட் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தரவு முகாமைப்படுத்தல் முறைமை (SADM)




வரைபடத்திற்காக அடையாளங்காணப்பட்ட பிரதேசம்



டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட குளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வடிவக் கோவை

## அலங்கார மீன் வளர்ப்பு



அலங்கார மீன் வளர்ப்பானது உலகில் மிகப் பிரபல்யமான பொழுதுபோக்காக தரநிலைப் படுத்தப்பட்டுள்ளதுடன், அது புகைப்படம் எடுத்தலுக்கு மாத்திரம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. மீன் தொட்டிகளில் கவர்ச்சிகரமாகவும் வண்ணமயமாகவும் காட்சிதருகின்றதன் விளைவாக அலங்கார மீன்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இலங்கையில் அலங்கார மீன் வளர்ப்பானது தேசிய பொருளாதாரத்தில் பின்வருமாறு முக்கிய பங்கு வகிக்கின்றது.

- **அந்நிய செலாவணி ஈட்டல்** - 2025 இல் (சனவரி – ஜுலை) இலங்கையினால் 13.93 அ. டொ. பெறுமதியான உயிருள்ள அலங்கார மீன்களை ஏற்றுமதி செய்துள்ளது. இதனூடாக இலங்கை உலகிலேயே உயரிய ஏற்றுமதியார்களிடையே இடம் பிடித்துள்ளது.
- **வாழ்வாதாரம்** : இவ்வாறு மீன் வளர்ப்பதனூடாக இனப்பெருக்கம், இணைத்தல், ஏற்றுமதி மற்றும் சில்லறை விற்பனை உட்பட பல்வேறு பிரிவுகள் ஊடாக தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுவதுடன் அதன் வாயிலாக பெரும்பாலானோரின் வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கின்றது.
- **கிராமிய அபிவிருத்திக்குப் பங்களித்தல்**: விசேடமாக கிராமிய பிரதேசங்களில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையாளர்கள், நன்னீர் விசேட மீனின இனப்பெருக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு தேசிய பொருளாதாரத்திற்கும் சமுதாய அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றனர்.

இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை இப் பிரிவின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதனூடாக முக்கிய பங்காற்றி வருகின்றது. அலங்கார மீனின புது வகைகளை உருவாக்குதல், நீர்வாழ் உயிரின வளர்ப்புக்கான தொழிநுட்ப அபிவிருத்தி, தாய் மீனினங்களை வழங்கல், மீனின நோய்களைக் கண்டறிதல், பயிற்சி மற்றும் தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்கல் ஆகிய பணிகள் இலங்கை நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்றது. அலங்கார மீன் மற்றும் நீரியற் தாவர செய்கையினை வலுவூட்டுவதுடன், ஏற்றுமதியை அதிகரிப்பது இவ் அபிவிருத்திப் பணிகளின் நோக்கமாகும்.

ஆதிகார சபையினால் ரம்படகல்ல, கினிஹத்ஹேன மற்றும் செவனபிட்டிய ஆகிய பிரதேசங்களில் அலங்கார மீன் இப்பெருக்க நிலையம் இயங்கி வருவதுடன், இந் நிலையத்தின் ஊடாக அலங்கார மீனினம் மற்றும் நீரியல் தாவரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2025 ஆகஸ்ட் மாதம் வரை இந் நிலையத்தினால் உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் 2.26 மில்லியன் அலங்கார மீனினங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக ரம்படகல்ல அலங்கார மீனின இனப்பெருக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தினால் இயலளவு விருத்தி மற்றும் கிராமிய

அபிவிருத்தி தொடர்பாக பங்களிப்பு நல்குவதுடன், அலங்கார மீன் வளர்ப்பு தொடர்பாக 1.660 பேருக்கு பயிற்சயளிக்கப்பட்டுள்ளது.

**அதிகார சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட புது வகை அலங்கார மீனினம்**



**Luminous Red Scissortail**



**Luminous Blue Scissortail**



**Silver Cobra**

# 04
# தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA)

**தொலைநோக்கு**

நீரியல்வள பாதுகாப்பு, முகாமைத்துவம், மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆய்வில் பிரதான நிறுவனமாக முன்னிலை வகித்தல்.

**பணிக்கூற்று**

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியான ஆய்வு மற்றும் வளங்களின் அடிப்படையில் நீரியல்வளங்களில் ஏற்படும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளுக்கு புத்தாக்கமான தீர்வுகளை வழங்குதல்.

**முக்கிய செயற்பாடுகள்**

நாராவின் பங்கு ஆராய்ச்சி மட்டுமல்லாமல், ஒருங்கிணைப்பு, மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றையும் உள்ளடக்கிய விரிவான பொறுப்புகளை கொண்டுள்ளது. அதன் விரிவான செயற்பாடுகளை நான்கு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தப்படலாம்:

**1. ஆய்வு மற்றும் அபிவிருத்தி**

நாரா (NARA) உயிருள்ள மற்றும் உயிரற்ற நீர்வளங்களின் மீது அறிவியல் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு பொறுப்பாக உள்ளது. இதில் கடல் மற்றும் உள்வள நீர்நிலைகளில் மீன்கள் பற்றிய ஆய்வுகள், பவளப்பாறைகள் மற்றும் கண்டல்தாவரங்கள் போன்ற கடலோர சூழலமைப்புகளின் ஆரோக்கிய மதிப்பீடுகள், கடலட்டை, மற்றும் கடற்பாசி போன்ற புதிய வளங்களை கண்டறியும் ஆய்வுகள் அடங்கும். இந்த நிறுவனம் மீன்பிடி மற்றும் நீர்வளப் பண்ணைகள் தொடர்பான புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதோடு, அறுவடை பிந்தைய கையாளுதல் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டிற்கான சிறந்த முறைகளை ஆராய்கிறது.

**2. பாதுகாப்பு மற்றும் மேலாண்மை**

நாராவின் முக்கிய பங்குகளில் ஒன்று, இலங்கையின் நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதை உறுதிசெய்வதாகும். அவர்கள் மீன் கையிருப்புகளை கண்காணிக்க ஆய்வுகளை நடத்துகின்றனர், மீன்பிடி விதிமுறைகளை வடிவமைக்கத் தேவையான தரவுகளை சேகரிக்கின்றனர், மேலும் நாட்டின் பரந்த பிரத்தியேக பொருளாதார வலயம் (EEZ) மேலாண்மைக்கு தேசிய கொள்கைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குகின்றனர். இது மிகுதியான மீன்பிடியைத் தடுப்பதற்கும், ஆபத்தில் உள்ள உயிரினங்களை பாதுகாப்பதற்கும் அத்தியாவசியமானதாகும். மேலும், நாரா எண்ணெய் கசிவு மற்றும் மாசுபாடு போன்ற சுற்றுச்சூழல் அவசர நிலைகளை ஆய்வு செய்து, அவற்றைக் குறைக்கும் மற்றும் மீட்டெடுக்கும் நடவடிக்கைகளுக்கான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குகிறது.

**3. ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு**

நாரா, மீன்பிடி, நீர்வாழ் உயிரின மற்றும் கடல் வள அமைச்சிற்கும், பிற அரசாங்க அமைப்புகளுக்கும், மீன்வளம் மற்றும் நீர்வளம் தொடர்பான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விஷயங்களில் முக்கிய ஆலோசனை வழங்கும் அமைப்பாக செயல்படுகிறது. இந்த நிறுவனம், உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சி பணிகளை ஒருங்கிணைப்பதில் மையப்பங்கையும் வகிக்கிறது. இது நீர்வள மேலாண்மைக்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையை உறுதி செய்வதோடு, அறிவு மற்றும் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்ளவும் உதவுகிறது.

**4. அறிவுப் பரவல் மற்றும் பயிற்சி**

இந்த நிறுவனம் பொதுமக்கள், கொள்கை அமைப்பாளர்கள் மற்றும் மீன்பிடி சமூகத்திற்காக அறிவியல் தகவல்களைச் சேகரித்து, வெளியிட்டு, பரப்பும் பொறுப்பை வகிக்கிறது. மேலும், நாரா, மீனவர்கள் முதல் நீர்வள தொழில்முனைவோர் வரை பங்குதாரர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்த பயிற்சி மற்றும் விரிவாக்க சேவைகளையும் வழங்குகிறது. இது அறிவியல் கண்டுபிடிப்புகளை நேரடியாக நாட்டின் நீர்வளத் துறைக்கும் பொருளாதாரத்திற்கும் பயனளிக்கும் நடைமுறை பயன்பாடுகளாக மாற்ற உதவுகிறது.

# 1. கண்காணிப்பு திட்டங்கள்

## 1. இலங்கை நீர்நிலைகளில் கடல் வாழ் வளங்கள், கடல் பறவைகள் மற்றும் IOTC இனங்களின் சமூக-பொருளாதார அம்சங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

இந்த திட்டம் இலங்கையின் கடல் வளங்களை நிலைத்தன்மையுடன் மேலாண்மை செய்வதை மையப்படுத்துகிறது, குறிப்பாக கடலோர மற்றும் பெரிய வெளிக்கடல் மீன்பிடி துறைகளில் கவனம் செலுத்துகிறது. இந்தியப் பெருங்கடல் சூரை மீன் ஆணையத்தின் (IOTC) பாதுகாப்பு நடவடிக்கைகள், திக்கோவிட்ட, நீர்கொழும்பு மற்றும் பேருவளை போன்ற முக்கிய துறைமுகங்களில் பலநாள் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிடம் ஏற்படுத்தும் சமூக-பொருளாதார தாக்கங்களை மதிப்பீடு செய்வதன் மூலம், ஆதாரப்பூர்வமான வழிகாட்டுதலை வழங்குவதே இதன் நோக்கம். மேலும், இந்த ஆய்வு, சூரைமீன் நீள்வரிசை மீன்பிடியில் கடற்பறவைகள் சிக்கிக்கொள்ளுதல் மற்றும் பலநாள் மீன்பிடியில் சுறா மீன்களின் இணைபிடிப்பு போன்றவற்றின் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக, இந்த செயற்திட்டம் பாரம்பரிய முறைகளையும் புதுமையான முறைகளையும் — முறைப்படுத்தப்பட்ட துறைமுக மாதிரி சேகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் DNA (eDNA) பகுப்பாய்வு போன்றவற்றையும் — இணைத்து பயன்படுத்தி மீன்பிடியை கண்காணிப்பதற்கும் கடல் உயிரினப் பல்வகைமையை மதிப்பிடுவதற்கும் செயற்படுகிறது. தரவுசேகரிப்பை மேம்படுத்த, மீன்களின் நீளத் தரவுகளை படகுகளின் இறங்குதுறையில் பதிவு செய்ய இணைய அடிப்படையிலான தளமும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் இலங்கையின் SDG 14.4.1 மற்றும் NDC 3 ஆகியவற்றுக்கான உறுதிப்பாட்டை ஆதரிப்பதோடு, பிராந்திய மீன்பிடி ஆளுமையில் அதன் பங்கையும் வலுப்படுத்தும்.

புத்தளம் களப்பு, பேருவளை மற்றும் கல்பிட்டியவிலிருந்து சேகரிக்கப்பட்ட வடிகட்டிய நீர் மாதிரிகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட DNA அதிக அதிக செறிவில் காணப்பட்டது, மற்றும் மேட்டாஜினோமிக் அம்ப்ளிகான் ஒழுங்குபடுத்தலுக்காக அனுப்பப்பட்டுள்ளது, இது இலங்கை கடல் நீர்பரப்பில் உயிரினப் பன்மை கண்காணிப்பில் eDNA பகுப்பாய்வைப் பயன்படுத்துவதற்கான வலுவான சாத்தியத்தை காட்டுகிறது.

உருவவியல் வேறுபாடுகளை காட்டிய இரண்டு கவக்காவா (Euthynnus affinis) மாதிரிகள் மற்றும் 21 கிரூப்பர் (Epinephelus faviatus) மாதிரிகள் மூலக்கூறு அடையாளத்திற்காக அனுப்பப்பட்டு, நான்கு கிரூப்பர் இனங்களை உறுதிப்படுத்தியது. இதன் மூலம் இலங்கை மற்றும் உலகளாவிய கிரூப்பர் DNA பார்கோடு தரவு சேமிப்பை விரிவுபடுத்த உதவியுள்ளது. மேலும், மேற்குக் கடற்கரை மற்றும் தெற்கு கடற்கரை பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது, சூரைமீன் நீள்வரிசை மீன்பிடியில் மொத்தம் 10 கடற்பறவைகள் சிக்கியதாகப் பதிவிடப்பட்டது. கள ஆய்வுகள் 13சுறா இனங்களை அடையாளம் கண்டன. அதில் குண்டன் சுறா (48.5%) அதிகளவில் காணப்பட்டது; அடுத்து நீலச்சுறா (26.4%) மற்றும் குறுகிய-துடுப்பு மேக்கோ சுறா (18.1%) பதிவாகின. நீள-அதிர்வெண் தரவுகள், குண்டன் சுறாக்கள் பெரும்பாலும் வளர்ச்சி அடையாதவை என்றும், நீலச் சுறா மற்றும் புலி சுறாக்களில் வளர்ந்த முதிர்வடைந்த அங்கிகள் இருப்பதையும் காட்டுகின்றன. நடந்து கொண்டிருக்கும் பலநாள் படகு குறிப்பேடுகள் மற்றும் வெளியிடப்பட்ட கடற்பறவை பரவல் தரவுகளின் பகுப்பாய்வுகள், கடற்பரப்பின் கடலியல் அளவுகோல்களுடன் தொடர்புடைய உயர் ஆபத்தான கடற்பறவை தொடர்பு வலயங்களை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## 2. R/V சமுத்ரிகா (இலங்கை-நோர்வே இருமுனைத் திட்டம் - WP3) ஐப் பயன்படுத்தி வாழும் கடல் வளங்கள் குறித்த மீன்பிடித் துறை சார்பற்ற ஆய்வுகள் (ஒலியியல் மற்றும் இழுவை)

இலங்கையின் மீன்பிடித் துறை தற்போது கடலோர பகுதிகளில் அதிகப்படியான பயன்படுத்தலால் கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது. மேலும், மீன் கையிருப்புகளை கண்காணிக்க நம்பகமான தரவுகள் இல்லாததும் முக்கிய பிரச்சினையாகும். இதனால், சுயாதீன மீன்பிடி ஆய்வுகள் சிறிய மேற்பரப்பு மீன்கள் போன்ற முக்கிய இனங்களின் நிலையை புரிந்துகொள்வதற்கும், நிலைத்திறன் கொண்ட மேலாண்மை நடவடிக்கைகளை எடுக்கவும் அவசியமாகின்றன.

நாராவின் சொந்தக் கப்பலான RV **சமுத்திரிகா** மூலம் வடகிழக்கு, தென்மேற்கு மற்றும் வடமேற்கு கடலோரப் பகுதிகளில் மூன்று ஒலியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகள் சிறிய மேற்பரப்பு மீன்களின் அளவினை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டன. இத்துடன் பிளாங்க்டன் மாதிரிகள் எடுத்து, மீன் குஞ்சுகள் மற்றும் கடல்சார் புவியியல் அளவுகோல்கள் ஆராயப்படுகின்றன. இது மீன் இனப்பெருக்கப் பகுதிகளை கண்டறிந்து பாதுகாப்பதில் உதவுகிறது. மேலும்,ஒலி ஆய்வுகளின் முடிவுகளை உறுதிப்படுத்த, இணைமாக மீன் இறங்குதுறை ஆய்வும் நடத்தப்பட்டது.

அதேபோன்று, **கற்பிட்டி இழுவை படகு பயன்படுத்தும் கடற்பகுதிகளில்** தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக இழுவை பொறிமுறை ஆய்வும் நடத்தப்பட்டுள்ளது. இதன் நோக்கம் இறால் உயிர்ப்பொருதி மற்றும் இணைப்பட்ட பிற மீன் இனங்களை கண்காணிப்பதாகும். சமீபத்திய முடிவுகள் தொடர்ந்து இறால்களின் அளவு குறைவாகவே இருப்பதை காட்டுகின்றன. இதேவேளை, காரல் மீன்கள் அதிகமாகப் பிடிபடுகின்றன என்பது முந்தைய ஆண்டுகளின் தரவுகளுடன் ஒத்துப்போகிறது.

இவ்வாறு சேகரிக்கப்படும் தொடர்-நேர தரவுகள், உயிர்ப்பொருதி மற்றும் அதிகப்படியான பயன்படுத்தல் நிலையைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. மேலும்,அதிகப்படியாக பயன்படுத்தப்பட்ட வளங்களை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை வழிநடத்தவும் இத்தரவு முக்கிய பங்காற்றுகிறது. நடைபெற்று வரும் ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகள் நிறைவடைந்த பின் விரிவான அறிக்கைகள் வெளியிடப்படும்.

## 3. இலங்கையை சூழ கடல் மட்ட அவதானிப்பு

இலங்கை ஒரு தீவு நாடாக கடலோர அபாயங்களுக்கு மிகுந்த பாதிப்புக்குள்ளாகக்கூடியதால், இந்த செயற்திட்டம் முன்னெச்சரிக்கை அமைப்புகள், அனர்த்த ஆபத்து குறைத்தல், நிலைத்திறன் கொண்ட கடலோர அடித்தள மேம்பாடு, மற்றும் கொள்கை திட்டமிடலுக்கான அறிவியல் அடித்தளத்தை வழங்குகிறது. இது, **ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றச் சட்டம்** மற்றும் **நிலைத்திறன் கொண்ட முன்னேற்றத்திற்கான ஐ.நா. கடல் அறிவியல் தசாப்தம்** (2021–2030) போன்ற சர்வதேச உறுதிப்பாடுகளுடன் இணைந்து செயல்படுகிறது.

தற்போது **நாரா**, திருகோணமலை, பருத்தித்துறை, கொழும்பு, மிரிஸ்ஸ, தெய்வேந்திரமுனை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் ஆறு தானியக்க கடல் மட்டக் கண்காணிப்பு நிலையங்களை செயலில் பராமரித்து வருகிறது. கடல் மட்டத்துடன் தொடர்புடைய சேதமளிக்கும் நிகழ்வுகள் குறித்து எட்டு மாதாந்திர அறிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, அறுபத்து நான்கு மாதாந்திர கடல் மட்டத் தரவு தயாரிப்புகள் தேசிய மற்றும் சர்வதேச பயன்பாட்டிற்காக **நாரா** இணையதளத்தில் பதிவேற்றப்பட்டன.

**வென்னப்புவ மீன்பிடி துறைமுகப் பகுதியில்** புதிய நிலையமொன்றை நிறுவுவதற்கு **இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்** அனுமதி வழங்கியுள்ளது. மேலும் வலையமைப்பை விரிவாக்குவதற்காக, **கிரிந்தா** கடல் மட்டக் கண்காணிப்பு நிலையத்திற்கான கருவிகள் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதில், பருத்தித்துறை மற்றும் திருகோணமலை ஆகிய இரு நிலையங்களின் தரவுகள் திட்ட இணையதளம் மூலம் நேரடியாக **நாரா** இணையதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், கடல் மட்ட போக்கு பகுப்பாய்வு, காலநிலை மாறுபாடு, மற்றும் ஆய்வுப் பங்களிப்புகள் போன்ற அனைத்து தரவுகளையும் மற்றும் தகவல்களையும் நேரடியாகப் பெற, சேமிக்க, பகுப்பாய்வு செய்ய, மற்றும் பகிர்ந்தளிக்கக்கூடிய **உடனடி தகவல் பரிமாற்ற முறைமை** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சியாளர்கள், கொள்கை நிர்ணயிப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு தரவுகளின் அணுகல் மற்றும் பயன்பாட்டை மேம்படுத்துகிறது.

2006 முதல் 2025 ஆகஸ்ட் மாதம் வரை உள்ள முழுமையான தரவுத்தொகுப்பைப் பயன்படுத்தி வருடாந்திர கடல் மட்டப் போக்குகள் மதிப்பீடு செய்யப்பட்டன (படம் 1). கொழும்பு அலைக்காட்டி நிலையத்தில் காணப்பட்ட நீண்டகால போக்கு, கொழும்புக்கு அருகிலுள்ள கிரிட் புள்ளியில் கோப்பர்னிக்கஸ் கடல் சேவை செயற்கைக்கோள் கண்காணிப்புகள் உட்பட பல சுயாதீன ஆதாரங்களுடன் ஒப்பிடப்பட்டது. முடிவுகள், கொழும்பில் காணப்பட்ட கடல் மட்டப் போக்கு செயற்கைக்கோள் கண்காணிப்புகளுடன் ஒத்திருக்கின்றது என்பதையும், ஆய்வு காலத்தில் ஆண்டுக்கு சுமார் 3.7 மில்லிமீட்டர் (0.37 cm $yr^{-1}$) அளவிற்கு நேர்மறை உயர்வைக் காட்டுகின்றது என்பதையும் வெளிப்படுத்துகின்றன.




**Figure 1: 2006 முதல் 2025 ஆகஸ்ட் மாதம் வரை கொழும்பில் கடல் மட்ட நேர்முறைத் தொடரின் ஒப்பீடு. நீல கோடு கொழும்பு அலைக்காட்டி நிலையத்தின் கண்காணிப்புகளை குறிக்கின்றது, மாஜென்டா (ஊதா-இளஞ்சிவப்பு) கோடு கொழும்பு கடல் மட்ட கண்காணிப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள கிரிட் புள்ளியில் கோப்பர்னிக்கஸ் கடல் சேவை செயற்கைக்கோள் தரவைக் காட்டுகின்றது. மஞ்சள் புள்ளி கோடு நேர்முறைத் தொடரின் போக்குக் கோட்டை காட்டுகின்றது.**

## 4. இலங்கையின் உணர்திறன் மிக்க கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம்

இலங்கையின் கடலோர சூழலியல் அமைப்புகள் குறித்த ஆய்வு, கடல் அமிலமயமாதலை கண்காணிக்கும் **பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்** (SDG) 14.3.1 குறியீட்டின் தேவைகளை பூர்த்தி செய்யும் விரிவான முயற்சியின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வில், கல்பிட்டி மற்றும் நீர்கொழும்பு–கொழும்பு பகுதிகளுக்கு இடையில் நீர்தரத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் கண்டறியப்பட்டன. இது போசணை கூறுகளின் அதிகரிப்பு உயிரியல் உற்பத்தித்திறனில் ஏற்படுத்தும் தாக்கத்தை வெளிப்படுத்தியது. தரவுச் சேகரிப்பு **தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள்** (NDC) 7 **திட்டங்கள்** மற்றும் IOC-UNESCO உடனான இணைப்பாகவும் இடம்பெற்றது.

**கல்பிட்டி பகுதியில்**, குறிப்பாக கால ஓயா ஆற்று ஆற்று வாய்ப்பகுதி மற்றும் கங்கேவாடியாவை அண்மித்த பகுதிகளில், அதிக போசணை கூறுகளின் அதிகரிப்பு பதிவாகின. சிலிகேட்-சிலிகான் (Silicate-Si) 435.55 µg/L ஆக உச்சத்தைக் காட்டியது; போஸ்பேட் -பாஸ்பரஸ் (Phosphate-P) 21.65 µg/L, நைட்ரைட்-நைட்ரஜன் (Nitrite-N) 16.83 µg/L ஆக இருந்தது. இது அதிக **கலங்கல் நிலை** உடன் தொடர்புடையதாக இருந்தது; அதாவது மொத்த நிறுத்தப்பட்ட திண்மங்கள் (TSS) 24.6 mg/L, மற்றும் செக்கி ஆழம் (Secchi depth) 0.50m மட்டுமே. இந்த போசணை கூறுகளின் பெருக்கம் உயிரியல் வளர்ச்சியை தூண்டி, தடாகத்தில் **குளோரோஃபில்**-a (Chlorophyll-a) அதிகபட்சமாக 14.50mg/L பதிவாகியது. இதற்கிணங்க, அதிக அளவு **தாவர பிளான்தன்கள்** (171,360 No/m$^3$) **மற்றும் விலங்கு பிளான்தன்கள்** (586,807 No/m$^3$) காணப்பட்டது.

இதற்கு மாறாக, நீர்கொழும்பு–**கொழும்பு கடற்கரைப் பகுதியில்** பொதுவாகக் குறைந்த போசணை கூறு**கள்** காணப்பட்டன. மேற்பரப்பு நீரில் **சிலிகேட்**-Si 2.28 முதல் 114.09 µg/L வரை மாறுபட்டது; **குளோரோஃபில்**-a 0.06 முதல் 7.91 mg/L வரை மாறுபட்டது. உயிரியல் செயல்பாடுகள் இருந்தபோதிலும், **தாவர பிளான்தன்கள்** 16,985 முதல் 1,669,818 No/m$^3$, **விலங்கு பிளான்தன்கள்** 13,211 முதல் 93,230 No/m$^3$ வரை மாறுபட்டன. இவை, அதிக போசணை கூறு**கள்** நிறைந்த பகுதிகளிலிருந்த அளவுகளிலிருந்து மாறுபட்டன.ஆய்வு முடிவில், ஆற்றுவாய் மற்றும் களப்புகள் கடலோர சூழலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமான போசணை கூறு**கள்** உள்வரவு மற்றும் உயிரியல் உற்பத்தித்திறன் மையங்களாகக் கருதப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 5. நோய்த்தாக்கங்களுடன் தொடர்புடைய இழப்புக்களை குறைக்கவும் மற்றும் பயனுள்ள சுகாதார முகாமைத்துவ பொறிமுறைகளை உருவாக்கவும், இறால் வளர்ப்பில் ஏற்படும் நோய்த்தாக்கங்களை கண்காணித்தல்

இயக்க ஆய்வு இலங்கையின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள ஐந்து வலயங்களில் (சிலாபம், ஆராச்சிகட்டுவ, முந்தல், கல்பிட்டி, மற்றும் புத்தளம் ) உள்ள இறால் வளர்ப்பு பண்ணைகளில் மற்றும் குஞ்சுவளர்ப்பிடங்களில் **மைக்ரோஸ்போரிடியன் பராசைட்** Enterocytozoon hepatopenaei (EHP) பரவலை மதிப்பீடு செய்ய நடாத்தப்பட்டது. குறிப்பாக பரிசோதிக்கப்பட்ட அனைத்து மாதிரிகளில் 57.03% EHP பரவல் இருப்பதை கண்டறியமுடிந்தது குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பாகும். மாறாக, WOAH (உலக விலங்கு ஆரோக்கிய அமைப்பு) பட்டியலிட்ட முக்கிய வைரஸ் மற்றும் பாக்டீரியா நோய்கள் (WSSV, IHHNV, AHPND மற்றும் பிறவை) அனைத்து மாதிரிகளிலும் எதிர்மறை இருந்தது. EHP **நோயின் மிக உயர்ந்த தாக்கம் வலயம்** 3 - **முந்தலில்**, 66.66% நேர்மறை விகிதத்துடன் கண்டறியப்பட்டது. மற்றைய வலயங்களில் பரவல் வரிசை பின்வருமாறு குறைந்தது: சிலாபம் (62.5%), அரச்சிகட்டுவா (57.5%), கல்பிட்டி (50%), புத்தளம் (33.33%). 2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வடமேற்கு மாகாணத்தின் EHP நோய் பரவல் வரைபடம் **படம்** 2 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆய்வில் இரண்டு முக்கியமான வளர்க்கப்படும் இறால் வகைகளின் Penaeus vannamei இல் Penaeus monodon ஐ விட அதிகளவில் EHP நோய்த்தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது இது, P. vannamei தொழிற்சாலைகளில் EHP தொற்றுக்கு அதிகமாய் பாதிப்புக்குள்ளாகும் என்பதைத் தெரிவிக்கிறது, வலயங்களில் இறால்வளர்ப்பை முகாமைத்துவம் செய்யும்போது தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.




Figure 2 வடமேற்கு மாகாணத்தில் EHP நோய்த்தாக்கத்தை காட்டும் வரைபடம் (ஜனவரி- ஆகஸ்ட் 2025)

## 6. இலங்கையில் மீன்பிடி தொடர்பான மோதல்களின் சமூகம் - பொருளாதார, கலாச்சார மற்றும் சந்தைப்படுத்தல் அம்சங்கள்

இந்தத் திட்டத்தின் நோக்கம், இலங்கையில் மீன்பிடி சிக்கல்களை தீர்க்கும் நோக்கில் **இந்திய-இலங்கை மீன்பிடி தகராறு**, **மற்றும் சிறிய அளவிலான உள்ளூர் மீனவர்களிடையே உள்ள உள்ளூர்மையான முரண்பாடுகளினால் ஏற்படும்** சமூக-பொருளாதார மற்றும் பண்பாட்டு விளைவுகளை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. கலவையான ஆய்வு முறையை பயன்படுத்தி, யாழ்ப்பாணம், சிலாபம், மற்றும் நீர்கொழும்பு மீன்பிடி வலயங்களில் **கணக்கெடுப்பு**, **குழு விவாதங்கள் மற்றும் பல்வேறு பங்காளர்களுடன் நேர்காணல்கள்** மூலம் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன (படம்3). இதுவரை 250 கேள்விப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, 12 குழு விவாதங்கள் நடைபெற்றுள்ளன, இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

தொடக்கக் கண்டுபிடிப்புகள், **இந்திய இழுவை படகுகளின் ஊடுருவல்** யாழ்ப்பாணம் மீன்பிடி மாவட்டத்தில் ஆய்வுபடுத்தப்பட்ட எல்லா மீனவர்களுக்கும் பெரும் பிரச்சினையாகும் என்று காட்டுகின்றன. அனைத்து பங்கேற்பாளர்களும் (100%) 2009 முதல் மீன்பிடியில் 64.62% குறைவு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளனர்; இது **சூறையாடுதல்** (poaching) **காரணமாக வளங்கள் குறைவடைந்தது** என்பதுடன் தொடர்புடையதாகும். மீனவர்கள் நல்ல மீன்பிடி வளங்களைத் தேடுவதற்காக அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதால், செயல்பாட்டு செலவுகள் 57.92% உயர்ந்துள்ளது. மேலும், மாதாந்த மீன்பிடி வருவாய் 64.48% குறைந்தது, மற்றும் வளங்கள் அழிந்த காரணமாக மீன்பிடி பகுதிகள் சேதமடைந்ததாக அடிக்கடி அறிக்கைகள் கிடைத்துள்ளன. பல பங்கேற்பாளர்கள் மீன்பிடி கருவிகள் அதிக சேதம் அடைந்ததாகவும், இதனால் வருடத்திற்கு LKR 311,176 வரை நஷ்டம் ஏற்படுகிறது என்றும் தெரிவித்தனர்.

இதோடு, 45% மீனவர்கள் மீன்பிடி நாட்களை **ஆறு நாட்களிலிருந்து மூன்று நாட்கள்** குறைத்துள்ளனர், இது பொருளாதார மற்றும் செயல்பாட்டு விளைவுகள் மிகவும் தீவிரமாக உள்ளதை காட்டுகிறது. இந்த ஆய்வு முடிவுகள், **இலங்கை மீனவர்களிடையே சமூக-பொருளாதார தாக்கங்களை குறைக்க** இணைந்த முகாமைத்துவ வழிமுறைகள் மற்றும் பயனுள்ள முரண்பாடு தீர்வு நடைமுறைகள் அவசரமாக தேவை என்பதை வலியுறுத்துகின்றன.




**Figure 3 யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மீன்பிடி வலயங்களில் மாதிரிகள் பெறப்பட்ட இடங்கள்**

இரண்டு வெளிப்புற கோரிக்கைகள் வெற்றிகரமாக விசாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அறிக்கைகள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அவையாவன;

### 6.1 களுத்துறை மாவட்டம், பாணந்துறை துறைமுகம் மற்றும் பாறைகளில் பொறிமுறை கம்பம் மற்றும் நீள்வரிசை மீன்பிடித்தலில் உள்ள முகாமைத்துவ பிரச்சினைகளை அடையாளம் காண்பது குறித்த ஆய்வு

பாணந்துறை பகுதியில் நடைபெறும் பொறிமுறை கம்பம் மற்றும் நீள்வரிசை மீன்பிடித் தொழில் தற்போது கடுமையான முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்கிறது என்று அமைச்சின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஆய்வொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கிய பிரச்சினைகள் எனில், தற்போதைய மீன்பிடி அளவுகள் பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்ததுடன் ஒப்பிடும் போது 70–80% வரை கடுமையாகக் குறைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், கடற்கரை வலை மீனவர்களுடன் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவது மற்றும் வண்டல் சேர்வு காரணமான சுற்றுச்சூழல் சேதங்களும் முக்கிய பிரச்சினைகளாக காணப்படுகின்றன. ஆனால், இந்த வண்டல் சேர்வு கடற்கரை அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புடையது என்ற ஆதாரங்கள் ஆய்வில் கண்டறியப்படவில்லை. மேலும், உள்ளூர் மீனவர்கள் பல சமூக-பொருளாதார பாதிப்புகளையும் எதிர்கொள்கின்றனர் — அதில் குறுகிய மீன்பிடி நேரங்கள் மற்றும் அவர்களின் மீனவர் சங்கங்கள் அதிகாரப்பூர்வ அங்கீகாரம் பெறாதது உள்ளிட்டவை அடங்கும். நிலைத்தன்மையான மீன்பிடி முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்காக, இந்தத் திட்டம் சில நடைமுறைக்கூடிய பரிந்துரைகளை முன்வைக்கிறது: மீன்பிடி நேரத்தை நீட்டித்தல், மீனவர் சங்கங்களை சட்டபூர்வமாக பதிவு செய்தல், மற்றும் கடற்கரை வலை மற்றும் வண்டல் சேர்வு தொடர்பான நடவடிக்கைகளில் கடுமையான ஒழுங்குமுறைகளை அமல்படுத்தல். இந்த பரிந்துரைகள், பாணந்துறை மீனவர் சமூகங்களின் வாழ்க்கைமுறைகளை மேம்படுத்துவதோடு, மீன்வள பாதுகாப்பையும் சமநிலைப்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 6.2 ஆப்பிரிக்க சந்தைகளுக்கான இலங்கையின் மீன் ஏற்றுமதி: சாத்தியக்கூறுகள், சவால்கள் மற்றும் மூலோபாய உத்திகள்

இந்த கணணியை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு, நாட்டின் ஏற்றுமதியை பல்வகைப்படுத்தல் மற்றும் சந்தை நெருக்கத்தை குறைத்தல் மூலம் ஆப்பிரிக்காவுக்கான ஏற்றுமதியை விரிவுபடுத்துவதில் இலங்கைக்கு காணப்படும் தகைமைகளை ஆய்வு செய்கிறது. ஆய்விலிருந்து தெரியவருவது, குறிப்பாக உலர்த்தப்பட்ட மற்றும் உறையவைத்த மீன் பொருட்களுக்கான ஆப்பிரிக்காவின் அதிகரித்து வரும் தேவைகள், இலங்கையின் உற்பத்தி திறன்களுடன் ஒத்துப்போகின்றன. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், இலங்கை சூரைமீன், இறால், மற்றும் நண்டு போன்ற பொருட்களின் ஏற்றுமதியை நிலைப்படுத்துவதற்காக சேஷெல்ஸ், கோத் தி'வோயர், மற்றும் எகிப்துபோன்ற நாடுகளுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. மேலும், ருவாண்டா மற்றும் நைஜீரியா போன்ற புதிய சந்தைகளில் நுழைய திலாபியா, கார்ப் போன்ற உள்நாட்டு நீர் மீன் வகைகள் மற்றும் மீன் உப தயாரிப்புகளில் வாய்ப்புகள் இருப்பதாகவும் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. இந்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்த இலங்கை தனது உற்பத்தி அளவை உயர்த்தி, தரக் கட்டுப்பாட்டை

நிலைநிறுத்தி, மீன்வள வளர்ப்பு துறையில் முதலீடு செய்ய வேண்டும். அதேசமயம், பிராந்திய வர்த்தக அமைப்புகளின் வாய்ப்புகளையும் திறம்பட பயன்படுத்துவது முக்கியம்.

## 7. வட மாகாணத்தில் மீன் வளர்ப்பு செயற்பாட்டின் சாத்தியக்கூறு மற்றும் பொருளாதார மதிப்பீடு

இந்தத் திட்டம் இலங்கையின் வட மாகாணத்தில் கடல் வளங்கள் அளவுக்கு மீறி பயன்படுத்தப்படுவதால் ஏற்பட்ட மீன்பிடி சுரண்டலுக்கு மாற்றாக, நிலைத்துறையான நீர்வாழ் உயிரினப் பண்ணைகள் பொருளாதார ரீதியாக எவ்வாறு செயல்படுகின்றன, அவற்றின் மதிப்புச் சங்கிலி மற்றும் சமூக-பொருளாதார பங்களிப்புகளை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வின் குறிக்கோள் முழுமையான பொருளாதார மதிப்பீடு செய்வது, மதிப்புச் சங்கிலியை வரைபடம் போன்று சித்தரிப்பது மற்றும் கடலட்டை மற்றும் இறால் வளர்ப்பு போன்ற முக்கிய நடைமுறைகளை மையமாகக் கொண்டு துறையின் SWOT பகுப்பாய்வு (வலிமை, பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல்) நடத்துவதாகும். இத்திட்டம் கலப்பு முறை ஆய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி, கேள்வித் தாள்கள், நேர்காணல்கள் மற்றும் குழு விவாதங்கள் (படம் 4) மூலம் முதன்மைத் தரவையும், அரசுத் துறையின் பதிவுகளிலிருந்து இரண்டாம் நிலைத் தரவையும் சேகரித்து வருகிறது. இதுவரை திட்டமிட்ட 180 கேள்வித்தாள்களில் 50 முடிக்கப்பட்டுள்ளன மற்றும் திட்டமிட்ட 10 குழு விவாதங்களில் நான்கு கடலட்டை வளர்ப்பாளர்களுடன் நடந்து முடிந்துள்ளன. தற்போதைய தரவு சேகரிப்பு முன்னேற்றம் இறுதி அறிக்கைக்கான அடிப்படையாக அமையும். அந்த அறிக்கையில் விரிவான செலவு-லாப பகுப்பாய்வு, சவால்கள் மற்றும் வாய்ப்புகளின் அடையாளம் காணல் ஆகியவற்றை உள்ளடக்கி, வட மாகாணத்தின் நீர்வாழ் உயிரினப் பண்ணைத் துறையில் நிலைத்துறையான முதலீடு மற்றும் மேலாண்மைக்கான வழிகாட்டுதலை வழங்கும்.



**Figure 4 யாழ்ப்பாண மாவட்டத்தில் கணக்கெடுப்பின் போது நடத்தப்பட்ட குழு**

## 8. நீர்வளங்களில் ஏற்படும் அவசரகால நிலைகள் பற்றிய ஆய்வு

தற்போதைய ஆண்டில் NARA நிறுவனம் மொத்தம் 20 அவசரகால நிலைகளை விசாரித்துள்ளது. இதில் ஐந்து அவசரச் சம்பவங்கள் (அட்டவணை 1) மற்றும் எட்டு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுகள் அடங்கும். அவற்றில் இந்தியாவின் கேரள கடற்கரையிலிருந்து 38 கடல் மைல் தூரத்தில் ஏற்பட்ட MSC ELSA 03 கப்பல் விபத்துடன் (படம் 5) தொடர்புடைய சுற்றுச்சூழல் சேத மதிப்பீடுகள் மற்றும் அதன் இலங்கையின் பல்வேறு கடற்கரைப் பகுதிகளுக்கு ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய ஆய்வுகளும் இடம்பெற்றுள்ளன. எனினும், இதுவரை, அந்தக் கப்பல் தீ விபத்து கடற்கரை சமூகங்களின் மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரினப் பண்ணைச் செயல்பாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் மற்றும் புதிய சவால்களை மதிப்பீடு செய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடரும்.



**Figure 5 MSC ELSA காரணமாக மாசுபட்ட கடற்கரைகள் 03- (உடப்பவ, நயினாதீவ மற்றும்**

எங்களின் பணியின் முக்கிய கவனம் வெலிகம, லுணுகம்வெகேர, குடாவெவ, மற்றும் மஹாதிவுலவெவ பகுதிகளில் நிகழ்ந்த நான்கு முக்கிய மீன் இறப்பு சம்பவங்களின் மீதான ஆய்வாகும். இந்த ஆய்வில், மீன்களின் பெருமளவு இறப்பு நோய்களால் அல்லாமல், நீர்தரத்தின் கடுமையான குறைப்பால் நேரடியாக ஏற்பட்டது என்பது வெளிப்படையாக தெரியவந்தது (படம் 6; அட்டவணை 1).



Figure 6 மகாதிவுல்வேவாவில் மீன் இறப்புக்கான காரணங்களுக்கான நேரடி மதிப்பீடுகள்

**Table 1 ஆய்வு செய்யப்பட்ட அவசரகால சம்பவங்கள்**

| **அவசர சம்பவம்** | **காரணங்கள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| **மீன் இறப்புகள்** | | |
| வெலிகம குடாவில் அல்காக்கள் பரவல் | போசனைக்கூறுகளின் அதிகரிப்பு, சேதனப்பொருள் மாசுபாடு மற்றும் மாறிவரும் கரையோர நீர் இயக்கவியல் காரணமாக டயட்டம் உருவாக்கம். | வீடுகள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு முறையான கழிவு முகாமைத்துவ முறைகளை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் |
| லுணுகம்வெஹெரே நீர்த்தேக்கத்தில் மீன்கள் இறப்பு | மேக்ரிஸிஸ்டிஸ் (*Microcystis* sp) இனங்களின் அதிகரித்த தொகை அடர்த்தி | மீன் தசை திசுக்களில் உள்ள மைக்ரோசிஸ்டின் எச்சங்களுக்கான கூடுதல் பகுப்பாய்வைத் தொடரவும், மாசுபாட்டின் சாத்தியமான மூலங்கள் அல்லது மூல காரணங்களைக் கண்டறிய வழக்கமான கண்காணிப்பைச் செயல்படுத்தவும். |
| குடாவெவ இல் ஏற்பட்ட மீன் இறப்பு | அருகிலுள்ள பண்ணைகளிலிருந்து குடாவெவவிற்கு அங்கீகரிக்கப்படாத கழிவு நீர் வெளியேற்றம் | பண்ணைகளை சட்டப்பூர்வமாக்குதல் மற்றும் வழக்கமான கண்காணிப்பு |
| மஹாதிவுலவெவ இல் ஏற்பட்ட மீன் இறப்பு | ஒட்சிசன் பற்றாக்குறை | மாசுபடுதலை முகாமைத்துவம் செய்தல் |
| **கப்பல் விபத்துகள்/எண்ணெய் கசிவுகள்** | | |
| MSC ELSA 03 (வடக்கு, வடமேற்கு, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் 08 மாதிரி சேகரிக்கும் நிகழ்வுகள் | இந்தியாவின் கேரள கடற்கரையில் கப்பல் தீ விபத்து ஏற்பட்டது. | சுற்றுச்சூழல் சேத மதிப்பீட்டு கண்காணிப்பு நடைபெற்று வருகிறது. |

## 2. மேம்பாட்டுத் திட்டங்கள்

### 1. இலங்கை நீர்பரப்பில் கடல்சார் ஆராய்ச்சி, நிலைத்துறையான அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்காக கடற்கரை அருகிலுள்ள பகுதிகளில் நீர்மட்ட ஆழத்தைக் (Bathymetry) குறிக்கும் தரவுத் தொகுப்பை விரிவுபடுத்தி, பொதுக் கடல்நில ஆழ வரைபட (GEBCO) மாதிரியை மேம்படுத்துவதன் மூலம் இலங்கை நீர்பரப்பின் நீர்மட்ட ஆழ மாதிரியை உருவாக்குதல்

வெலிகம முதல் அம்பாந்தோட்டை வரை நீர்மட்ட ஆழம் (பாதிமெட்ரிக்) ஆய்வு ஜனவரியில் தொடங்கி வடகிழக்கு மழைக்காலத்தின் போது மார்ச் மாத இறுதி வரை மேற்கொள்ளப்பட்டது. தென்மேற்கு மழைக்காலம் தொடங்கியதன் பின்னர், ஆய்வுப் பணிகள் மன்னார் பகுதிக்குத் மாற்றப்பட்டன (படம் 7). நடவடிக்கைத் திட்டத்தின்படி, மன்னார் முதல் மண்டைதீவு வரையிலான கடற்கரை அருகிலுள்ள நீர்மட்ட ஆழ ஆய்வு மே மாதம் முதல் நடைபெற்று வருகிறது.






Figure 7 கடற்கரை அருகிலுள்ள நீர்மட்ட ஆழத் தரவு வரையறை — (இடப்புறம்) வெலிகம முதல் அம்பாந்தோட்டை வரை, (வலப்புறம்) தலைமன்னார் முதல் மண்டைதீவு வரை

### 2. களு ஆற்றுத் துறைமுகத்தில் மணற்பாரை இடிந்ததனால் ஏற்பட்ட ஆறு மற்றும் கடற்கரை வடிவ மாற்றங்களை நீர்மட்ட ஆழத் தரவு (Bathymetry), கடற்கரை சுயவிவரங்கள் (Beach Profiles), புவியியல் தகவல் முறை (GIS), மற்றும் தொலைவிலிருந்து உணர்தல் (Remote Sensing) தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த மதிப்பீடு செய்தல்

செயற்கைக்கோள் படங்களின் செயலாக்கம் முடிவடைந்துள்ளது, மேலும் ட்ரோன் மற்றும் மனிதர் இன்றிய நீர்முக வாகனத்தை பயன்படுத்திய ஆய்வுகளும் நிறைவடைந்துள்ளன (படம் 8). தற்போது கடற்கரை விவர ஆய்வு நடைபெற்று வருகிறது, அடுத்த வெளிக்களப் பணி 2025 அக்டோபர் மாதத்தில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.





Figure 8 மனிதர் இன்றிய நீர்முக வாகனம் மற்றும் ட்ரோன் பயன்படுத்தி களு ஆற்றுத் துறைமுகத்தில் நீர்மட்ட ஆழ ஆய்வுகள் நடத்தல்

இந்த கீழ்க்காணும் கணக்கெடுப்பு மற்றும் வரைபட திட்டங்கள் இலங்கையின் பல முக்கிய அரசாங்க அமைப்புகளுக்காக நடத்தப்பட்டுள்ளன, இது அமைப்பின் கணக்கெடுப்பு மற்றும் வரைபடத் துறையில் வலுவான தொழில்நுட்ப திறனைக் காட்டுகின்றது. கணக்கெடுப்பு குழுக்கள் மீன்பிடித்துறை அமைச்சின் பல செயற்திட்டங்களை முடித்துள்ளன. இதில், டட்ச் கால்வாயின் மதிப்பீடு உள்ளடங்கும், மேலும் முந்தல் முதல் புத்தளம் களப்பு வரையான பகுதி மற்றும் ஒலுவில் துறைமுகத்தின் கணக்கெடுப்பு என்பன உள்ளடங்கும். மேலதிகமாக, அவர்கள் வெலிகமவில் கப்பராட்டொட்டாவில் மீன்வள துறைக்காக நீர்நிலை கணக்கெடுப்பும், மிரிஜ்ஜாவிள மீன்வள இறக்குமுறை தளத்தில் அளவியல் (volumetric) பகுப்பாய்வும் செய்துள்ளனர்.

மேலும், கணக்கெடுப்பு குழு, தென் மாகாணத்தின் நீர்பாசனத்திணைக்களத்துக்காக போல்வத்த ஆறு மற்றும் இலங்கை மின்சார சபையினால் கண்காணிக்கப்படும் தலவாக்கலை மற்றும் நில்லம்பே நீர்த்தேக்கங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நீர்நிலை கணக்கெடுப்புகளுக்கு மேலாக, கப்பல் சம்பவத்துக்குப் பிறகு சுற்றுச்சூழல் சேத மதிப்பீடுகள், ஒளுவில் துறைமுக வளர்ச்சிகள் மற்றும் பாலைத்தீவு கடலட்டை பண்ணை சாத்தியக்கூறு ஆய்விற்கான GIS அடிப்படையிலான வரைபடங்களும் உருவாக்கப்பட்டன.

## 3. கரையோர வண்டல் இயக்கவியல் மற்றும் கனரக கனிம வைப்பு விநியோகம்: இலங்கையின் தென்மேற்கு கடற்கரை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைமுகங்களில் நிலையான கடற்கரை பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான அளவு மதிப்பீடு

முதல் ஆய்வு கனிமக் களஞ்சியங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதில், இல்மனைட், கார்னெட், மற்றும் மோனசைட் போன்ற கனிமங்கள் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் 3% முதல் 35% வரை உள்ள குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்டன. எனினும், ஒளுவில் மற்றும் கிரிந்த துறைமுகங்களில் அகழ்வாராய்ச்சி மூலம் எடுக்கப்பட்ட அடிநிலக் களிமண்களில் கனிமச்சத்து அளவு பொதுவாக குறைவாக இருந்தது. இதைத் தவிர, இரு துறைமுகங்களிலும் ஆழமான அடுக்குகளில் கனிமச் சத்து அதிகரிப்பைக் (கிரிந்தவில் 6% வரை) காட்டியதால், நல்ல சாத்தியம் இருப்பதாக கருதப்பட்டது. இந்த ஆய்வு, அகழ்வாராய்ச்சி பொருளாதார ரீதியாக பயனுள்ளதாக உள்ளதா என்பதை முழுமையாக மதிப்பிட, அரிதான மண்ணிய தனிமங்கள் குறித்த மேலும் ஆழ்ந்த பகுப்பாய்வு தேவையென பரிந்துரைக்கிறது.

இரண்டாவது ஆய்வு, மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள கடற்கரை மணல் சமநிலையைப்பற்றி மேற்கொள்ளப்பட்டதில், மனிதச் செயல்பாடுகளே கடற்கரை நிலைத்தன்மை குறைவதற்கான முக்கிய காரணமாக இருப்பது தெரியவந்தது. ஆரம்ப மாதிரிகள் காட்டியதாவது, கொழும்பு பன்னாட்டு நிதி நகரத் திட்டத்தின் நில மீட்பு நடவடிக்கைகள் கடல்சுழற்சி மற்றும் அலை முறைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி, மணல் கடத்தலைத் தடுப்பதன் மூலம் கடற்கரை மண்சரிவு உருவாகியுள்ளது. கடலுக்கு வெளியே நடைபெறும் மணல் அகழ்வின் தாக்கம் பகுதிகளுக்கு மாறுபட்டாலும், பிட்டிப்பனை போன்ற இடங்களில் அலைத் தாக்கம் அதிகரித்துள்ளது. மேலும், முக்கியமான ஒரு கண்டுபிடிப்பாக, நதிகளிலிருந்து கடற்கரைக்கு செல்லும் மணல் அளவு தீவிரமாகக் குறைந்துள்ளது; உதாரணமாக, மகா ஓயா ஆற்றிலிருந்து வருடாந்திர மணல் விநியோகம் 0.05 இலிருந்து 0.01 மில்லியன் கன மீட்டர் வரை குறைந்துள்ளது. இந்தக் குறைபாடு பரவலான கடற்கரை மண்சரிவுக்கான பிரதான காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி, இக்கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நிலைத்த கடற்கரை முகாமைத்துவ திட்டங்கள் தேவையென வலியுறுத்துகிறது.

## 4. உள்நாட்டு மீன்பிடி மற்றும் நன்னீர் மீன்வளத் துறையின் முன்னேற்றத்திற்கு புதுமையான தொழில்நுட்பங்களின் பயன்பாடு

இந்த ஆய்வு கூறு, சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைத்துக்கொண்டு நீர்வள வளர்ப்பு உற்பத்தித் திறனை மேம்படுத்த புதிய வளர்ப்பு முறைகளை ஆராய்கிறது, இதில் இரண்டு மேம்பட்ட அமைப்புகள் முக்கியமாக கவனிக்கப்படுகின்றன. முதல் திட்டம் “பயோஃப்லாக்” அமைப்பைச் சார்ந்தது, இதில் கப்பி மீன்களின் இனப்பெருக்க செயல்திறனை மதிப்பீடு செய்யும் ஆரம்ப பரிசோதனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன (படம் 9). மேலும், கப்பி மீன்களின் உணவுத்திறன் மற்றும் சிறந்த வளர்ப்பு அடர்த்தியை தீர்மானிக்க அடுத்த கட்ட பரிசோதனைகளுக்கான தயாரிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதே நேரத்தில், இரண்டாவது திட்டத்தின் கீழ் இரண்டு பரிசோதனை “மீள் சுழற்சி நீர்வள வளர்ப்பு அமைப்புகள்” உருவாக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம், வேறுபட்ட நீரோட்ட விகிதங்கள் நுண்ணுயிர் செயல்பாடு மற்றும் மொத்த நீர் தரத்தின்மீது ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கம் உள்ளது.



Figure 9 கப்பி வகைகளுக்கான பயோஃப்ளாக் வளர்ப்பு சோதனைகள்

இரண்டாவது ஆய்வு கூறு தற்போது தரவு சேகரிப்பு நிலையிலுள்ளது, இது, இலங்கையின் நிலைத்த நீர்ப்பாசனக் குளங்களில் நடைபெறும் பண்பாட்டு மீன்பிடித் திட்டங்களின் உற்பத்தியை பாதிக்கும் காரணிகளை ஆராய்கிறது. இதனை அடைவதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்வளக் குழுக்களுடன் நேரடி பேட்டிகள் மூலம் சமூக-பொருளாதாரத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, இக்குழுக்களின் நிறுவன வலிமை மற்றும் இணை முகாமைத்துவ நிலை குறித்த முக்கியமான தரமான தகவல்களைப் பெற, "கிராமப்புற பங்கேற்பு அணுகுமுறை" ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
பல ஆய்வு செயல்பாடுகள் நீர்தாவரங்களின் வளர்ப்பு மற்றும் மரபணு பகுப்பாய்வை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றாக, *Microsorum pteropus* மற்றும் *Anubias barteri var. nana-petite* செடிகளை வளர்ப்பதற்காக aquasoil பயன்படுத்தி மேற்கொண்ட தொடக்க பரிசோதனைகள் காட்டியதாவது, 10 மிமீ மற்றும் 15 மிமீ அளவிலான aquasoil செடிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. இதனால், மிகச் சிறந்த வளர்ப்பு ஊடகத்தை கண்டறிவதற்கான மேலதிக பரிசோதனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மற்றொரு தனித்திட்டம், *Anubias nana 'Golden'* மற்றும் *Anubias barteri var. coffeefolia* இனங்களுக்கான நுண் பெருக்கல் தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. இத்திட்டத்தில் கிருமி நீக்க முறைகள் நிறைவடைந்துள்ளன, மேலும் சிறந்த ஊடகங்களைக் கண்டறிந்து தண்டு உருவாக்கம் மற்றும் பெருக்கம் மேற்கொள்ள பல பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன (படம் 10). அதே நேரத்தில், மூன்றாவது செயல்பாடு DNA **பார்கோடிங்** மீதானது. இத்திட்டத்தின் கீழ் வெளி மாதிரிகள் வெற்றிகரமாக சேகரிக்கப்பட்டுள்ளன, DNA பிரித்தெடுக்கும் நடைமுறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன, மேலும் *Cryptocoryne beckettii* மற்றும் *Cryptocoryne wendtii* என்ற இரண்டு நீர்ச்செடி இனங்களை மரபணு அடையாளப்படுத்த PCR பரிசோதனைகள் தொடங்கப்பட்டுள்ளன.



Figure 10 அனுபியாஸ் நானா *(Anubias nana)* 'கோல்டன்' தளிர்கள்

## 5. இலங்கையில் கடல் மற்றும் உவர்நீர் நீர்வாழ் உயிரினப் பிரிவுகளின் பல்வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தி மேம்பாடு

ஆய்வு முடிவுகளின் கீழ், மூன்று தனித்தனி செயல்பாடுகள் இலங்கையில் நிலைத்த நீர்வள வளர்ப்புக்கான முக்கிய முன்னேற்றத்தையும் எதிர்கால திறனையும் ஒருங்கிணைந்து வெளிப்படுத்துகின்றன. **முதல் செயல்பாடு**, வட மாகாணத்தின் வலைப்பாடு, அரியாலை மற்றும் மண்டதீவு ஆகிய மூன்று முன்னோடி இடங்களில் "ஒற்றுமைப்படுத்தப்பட்ட பல-உணவுத் தள நீர்வள வளர்ப்பு முறை" மாதிரியை வெற்றிகரமாக உருவாக்கி செயல்படுத்தியுள்ளது. ஆறு மாத கண்காணிப்பின் முடிவுகள் நேர்மறையான ஒத்துழைப்பு விளைவுகளை காட்டின — ஒரே வகை வளர்ப்புடன் (monoculture) ஒப்பிடுகையில், இணைந்த அமைப்புகளில் கடல் பாசிகள் அதிக வளர்ச்சி விகிதத்தையும் முத்து சிப்பிகள் (pearl oysters) குறைந்த இறப்பு விகிதத்தையும் வெளிப்படுத்தின. இந்த வளர்ப்பு மாதிரி, வளர்க்கப்படும் இனங்களின் உயிர் தக்கவைப்பு மற்றும் வளர்ச்சியை

மேம்படுத்துவதோடு மட்டுமல்லாது, விவசாயிகளுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்பாகவும் பயன்படுகிறது. இதனால், விவசாயிகள் வலுவான ஆர்வத்தைக் காட்டியுள்ளனர்.

**இரண்டாவது செயல்பாடு** ஆர்டீமியா (Artemia) இனங்களின் ஆய்வில் கவனம் செலுத்தியது. இதில், உள்ளூர் இனங்கள் நீர்வள வளர்ப்புக்குப் பொருத்தமான அதிக திறனை கொண்டிருப்பது கண்டறியப்பட்டது. உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இனங்களின் தொடக்க அளவுகள் ஒரேபோல இருந்தாலும், உள்ளூர் ஆர்டீமியா இனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிக உயிர்த் தக்கவைப்பு விகிதம், மேம்பட்ட வளர்ச்சி மற்றும் சிறந்த முதிர்ச்சியையும் வெளிப்படுத்தின. இது அவை உள்ளூர் சுற்றுச்சூழலுக்கு தம்மை உருவாக்கிக்கொண்டதனால் ஆகும். எனவே, எதிர்கால ஆய்வுகளில், குறிப்பாக உவர்தன்மை சகிப்புத் தன்மை சார்ந்த உள்ளூர் இனங்களின் மேம்பாட்டை நோக்கி கவனம் செலுத்துவது, நீர்வள வளர்ப்பில் வெற்றியை உயர்த்துவதற்கான முக்கியப் பாதையாக அமையும்.

**இறுதியாக**, **மூன்றாவது செயல்பாடு** பச்சை மட்டிகள் இனப்பெருக்கம் மற்றும் மட்டிகள் வளர்ப்புக்கான மாஸ்டர் திட்டம் தயாரிப்பை உள்ளடக்கியது. இந்தத் திட்டத்தின் நோக்கம் கடலோரப் பகுதிகளில் நிலைத்த மட்டிகள் வளர்ப்புக்கான விரிவான மாஸ்டர் திட்டத்தை உருவாக்குவதாகும். இதற்காக தளத் தேர்வு மாதிரி வடிவமைத்தல் மற்றும் மட்டிகள், சிப்பி வளர்ப்புக்குப் பொருத்தமான பகுதிகளை வரைபடமிடுதல் ஆகிய பணிகள் இடம்பெற்றுள்ளன. அதே சமயம், பச்சை மட்டிகள் இனப்பெருக்கத்திற்கான நிலையான நடைமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன, இதன் மூலம் பெரிய அளவிலான வளர்ப்பு முயற்சிகளுக்குத் தேவையான விதை வழங்கலை உறுதி செய்ய முடியும். நீர்கொழும்பு நீர்நிலையிலும் காலி கடலோர நீர்ப்பகுதிகளிலும் உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகள் நடத்தப்பட்டு, பொருத்தமான இடங்கள் அடையாளம் காணப்பட்டன. இதேநேரத்தில், பச்சை மட்டிகள் இனப்பெருக்க முயற்சிகள் ஹாட்சரியில் மேற்கொள்ளப்பட்டபோது, ஐந்து முறை இனப்பெருக்க முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இருப்பினும், இனப்பெருக்க தாய் மீன்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன, இதன் மூலம் எதிர்கால பரிசோதனைகளில் வெற்றிகரமான அடைவு இனப்பெருக்க தொழில்நுட்பங்களை உருவாக்கும் முயற்சிகள் தொடர்கின்றன.

## 6. கடல் மீன்பிடி தொழில்நுட்பங்கள் மற்றும் மீன் திரட்டும் சாதனங்கள் (FAD) நிறுவல்கள் மூலம் கடலோர மீன்பிடித் தொழில்களை நிரப்புதல் மற்றும் மேம்படுத்துதல்

இந்த திட்டத்தின் கீழ், அடித்தள செயற்கை வாழிடங்கள் மற்றும் மிதக்கும் மீன் சேர்க்கை கருவிகள் (Fish Aggregation Devices – FAD) (படம் 11) ஆகியவற்றிற்கான தளத் தேர்வு நிறைவடைந்துள்ளது. இது முழுத் திட்டத்தின் பிரதான அமைப்பிடங்களை தீர்மானிக்கும் முக்கிய ஆரம்பப்படியாகும். ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தளங்களில் இருந்து விரிவான தரவுகளைச் சேகரித்து அடிப்படை நிலையை நிறுவியுள்ளனர். இதில் மீன்கள் மற்றும் பிளாங்க்டன் பற்றிய உயிரியல் தகவல்கள், மேலும் கரைந்த ஆக்சிஜன், உப்பு அளவு (salinity), மற்றும் pH போன்ற பல இயற்பியல்-வேதியியல் அளவுகோள்களும் அடங்கும். இந்த திட்டத்திற்காக மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன: திருகோணமலை, கல்பிட்டி மற்றும் நீர்கொழும்பு. நீர்கொழும்பில் மிதக்கும் மற்றும் மூழ்கிய FADகளை அமைப்பதற்காக இரண்டு தளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், திருகோணமலை மற்றும் கல்பிட்டியிலும் கடல் அலங்கார மீன் தொழில்துறையின் வளர்ச்சியை ஆதரிக்க மூழ்கிய FADகள் நிறுவப்படவுள்ளன. இந்த தொழில், இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தளத் தேர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, கடல் நீரின் தற்போதைய இயற்பியல்-வேதியியல் அளவுகள், சேர்க்கப்பட்ட மீன் இனங்கள் மற்றும் பிளாங்க்டன் இனங்களின் நிலைமையும் ஆய்வு செய்யப்பட்டது.




**Figure 11 FAD வரிசைப்படுத்தல் திட்டத்திற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தளங்கள் (கல்பிட்டி, நீர்கொழும்பு மற்றும் திருகோணமலை)**

## 7. ஆய்வக மேம்பாடு மற்றும் சோதனை சேவைகள்: சுற்றுச்சூழல் படிப்புப் பிரிவிற்கான ஆய்வக அங்கீகாரத்தைப் பெற (ISO/IEC1025:2017) மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பப் பிரிவு ஆய்வகங்களின் திறன்களை மேம்படுத்துதல்

சுற்றுச்சூழல் ஆய்வுப் பிரிவு ஆய்வுகூடம், முக்கிய நீர் தர அளவுருக்களுக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் உருவாக்கி, அவை APHA தரநிலைகளுடன் ஒத்திசைக்கப்பட்டுள்ளன. ஆய்வுகூட பாதுகாப்பு மற்றும் நுண்ணுயிரியல் முறை சரிபார்ப்பு தொடர்பான சிறப்பு பயிற்சிகள் மூலம் பணியாளர்களின் திறன் மேம்படுத்தப்பட்டது. மேலும், முறைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI) உடன் திறன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதனுடன் இணையாக, ஈரப்பதம்/வெப்பநிலை மீட்டர்கள் மற்றும் டேக்கோமீட்டர்கள் போன்ற அவசியமான உபகரணங்களை வாங்கி, ஆய்வக உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பணியும் தொடங்கப்பட்டது.

அறுவடை பிந்தைய தொழில்நுட்பப் பிரிவு, மீன்களில் ஹிஸ்டமின் அளவை உயர்தர திரவக் கலம் தொழில்நுட்பம் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யும் சேவைக்கு இலங்கை அங்கீகார வாரியத்திடமிருந்து 2025 ஜூன் 30 அன்று அங்கீகாரம் பெற்றது. இதன் பின்னர் இதே முறையைப் பயன்படுத்தி 20 மீன் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன, மேலும் இச்சேவை தற்போது பொதுமக்களுக்குக் கிடைக்கிறது. இந்த அங்கீகாரம், ஆய்வகத்திற்கு நம்பகமான மற்றும் சர்வதேச தரநிலைகளுடன் இணங்கும் ஹிஸ்டமின் பரிசோதனைச் சேவையை வழங்குவதற்கான திறனைக் கொடுக்கிறது. இவ்வாறு அடைந்துள்ள இந்த சாதனைகள், நாரா தனது தொழில்நுட்ப திறன் மற்றும் முடிவுகளின் நம்பகத்தன்மைக்கு சுயாதீன மூன்றாம் தரப்பின் சர்வதேச மட்டப் பரிசோதனையை உறுதிசெய்யும் நோக்கில் எடுத்த முக்கிய முன்னேற்றங்களாகும்.

## 8. இலங்கையின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் சாத்தியமான நீர்வாழ் உயிரினங்களின் ஆய்வு மற்றும் மேம்பாடு

ரேகவ மையம் அலங்கார மீன் வளர்ப்பாளர்களுக்காக புதிய ஆறு இனங்களைக் கொண்ட நன்னீர் அலங்கார மீன்களை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், திக்குவெல்லா, கொக்கலை மற்றும் காலி பகுதிகளில் 30 பேருக்கு ஓட்டுடலிகள் (mollusk) விதைகள் சேகரிப்பு தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்பட்டது. அதோடு, வருமானம் உருவாக்க புதிய வளமாக நன்னீர் நீர்வாழ் தாவரங்களையும் அறிமுகப்படுத்தியது. கருவாட்டு தொழில்துறையில் இருந்து உருவாகும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான முறைகளை மையம் உருவாக்கியுள்ளது. இதில் திரவக் கழிவுகளை மீன்களுக்கு தீவனச் சேர்வாகவும், தென்னை சாகுபடிக்கான உரச் சேர்வாகவும் பயன்படுத்தும் முறைகள் உருவாக்கப்பட்டன. மேலும், உயிரியல் கழிவுநீர் சிகிச்சை அமைப்பு மற்றும் நீர்வாழ் தாவரங்களுக்கான புதிய கடற்பாசி இலைத் தெளிப்பான் ஆகியவையும் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில், அமைச்சின் "களப்பு அபிவிருத்தி திட்டம்" கீழ் ரேகவா நீர்நிலைக்குள் 27.5 இலட்சம் இறால்களை (Penaeus monodon) விடுவிக்கும் பெரும் அளவிலான மீன் இருப்பிடப் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 150 சமூக உறுப்பினர்கள் பயன்பெறவுள்ளனர்.

## 9. அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் மீன் தீவன மேம்பாட்டை மேம்படுத்துதல்

நாராவின் பனபிட்டிய பிராந்திய ஆராய்ச்சி நிலையம், நீர்வாழ் தீவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில் பல பரிசோதனைகளை நடத்தியது. கருப்பு சிப்பாய் ஈ புழு உணவு, நீடித்தல்லாத மீன் உணவுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய நிலைத்தன்மையுள்ள மாற்றாக கருதப்படுகிறது. இருப்பினும், FM-ஐ முழுமையாக BSF-ஆல் மாற்றியபோது, மீன்களில் வளர்ச்சி குறைவு மற்றும் கல்லீரல் பிரச்சனைகள் போன்ற சிக்கல்கள் ஏற்பட்டன. எனவே, முதல் பரிசோதனை FM-ஐ BSF மற்றும் மீன் சிலேஜ் ஆகியவற்றின் கலவையால் மாற்றி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள், BSF மற்றும் FS ஆகியவற்றின் கலவை FM-ஐ மாற்றி பயன்படுத்தியபோதும், GIFT திலாப்பியா குஞ்சுகளின் வளர்ச்சித் திறனில் எந்தக் குறையும் ஏற்படவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன. மேலும், BSF:FS விகிதம் 4:1 ஆக இருக்கும் போது FM-ஐ மாற்றுவதற்கு மிகச் சிறந்தது என்றும் கண்டறியப்பட்டது.

இரண்டாவது பரிசோதனையின் முடிவுகள், BSF எண்ணெய் நிலைத்தன்மையற்ற மீன் எண்ணெய் மற்றும் சோயா எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற பாரம்பரிய கொழுப்பு மூலங்களுக்குப் பதிலாக ஊட்டச்சத்து ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் சிறந்த மாற்றாக இருப்பதை உறுதிப்படுத்தின. இது அலங்கார மீன் இனமான *Poecilia reticulata* (கப்பி மீன்) தீவனத்தில்

பயன்படுத்தப்பட்டது.நவீன நானோ தொழில்நுட்பம் பல துறைகளில் செயல்திறன் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், மூன்றாவது பரிசோதனை நானோ துத்தநாகம் (nano-Zn) சேர்க்கப்பட்ட பிளாட்டி (*Xiphophorus maculatus*) மீன் தீவனத்தை பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டது. இதன் முடிவுகள், நானோ-துத்தநாகம் கொண்ட தீவனம் பிளாட்டி மீன்களில் வளர்ச்சியும் நிறப்பும் மேம்படுத்தி, கல்லீரல் செயல்பாடுகளில் எந்தத் தீமையும் ஏற்படுத்தாதது என்பதையும் உறுதிப்படுத்தின (படம் 12).




**Figure 12 மீன்களின் கல்லீரல் செயல்பாடுகளின் திசு நோயியல் பரிசோதனை**

# 3 பாதுகாப்பு செயற்திட்டங்கள்

## 1. இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு களப்புக்களான சிலாபம் மற்றும் கோக்கலை மீன் மற்றும் நீர்வாழ் வாழ்க்கைக்கான களப்பு நீரின் தர மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்களை உருவாக்குதல்

சிலாபம் மற்றும் கொக்கலை களப்புக்கள் பற்றிய ஆய்வு, இம்மாதிரியான கரையோர சுற்றுசூழல் எதிர்கொள்ளும் அழுத்தங்களை குறிப்பாக எடுத்துக்காட்டுகின்றது. சிலாபம் கலப்பு பற்றிய ஆய்வு, இறால் பண்ணை வளர்ப்பு மற்றும் கழிவு நீர் வெளியேற்றம் போன்ற மனிதச் செயல்பாடுகள் அதிக ஊட்டச்சத்து அளவுகள் மற்றும் கார்பனேற்ற மாசுபாடு ஏற்படுவதுடன் தெளிவான தொடர்பு கொண்டுள்ளதை காட்டியது. இதற்கு சான்றாக முக்கிய பகுதிகளில் அதிக அளவில் அமோனியாகல்-நைட்ரஜன் (0.0041-0.0938 mg/L) மற்றும் நைட்ரேட்-நைட்ரஜன் (0.0104-0.0278 mg/L) காணப்பட்டது. இது முதன்மை உற்பத்தித்திறனை பாதித்து, டையாட்டம்கள் (diatoms) ஆதிக்கம் செலுத்தும் பிளாங்க்டன் சமூகத்தை (92.8%) உருவாக்கியுள்ளது. கொக்கலை களப்பில், நீண்டகால கண்காணிப்பு திட்டம், நீர்த் தர அளவுருக்கள், pH (சராசரி 7.7±0.2) மற்றும் கரைந்த ஆக்சிஜன் (சராசரி 6.71±0.77 mg/L) நிலையாகவும் ஆரோக்கியமாகவும் உள்ளன என்பதைக் காட்டினாலும், மாசுபாடு சார்ந்த சவால்கள் தொடர்ந்தும் நிலவி வருகின்றன. ஆய்வில் அனைத்து மாதிரி இடங்களிலும் கொலிஃபார்ம்கள் (fecal coliforms) மற்றும் *E. coli* போன்ற நுண்ணுயிர் மாசுகள் 0 முதல் 1,800 MPN/100 mL க்கும் மேல் அளவிற்கு பரவலாக காணப்பட்டன. மேலும், மீன் திசுக்களில் கனிம உலோகங்கள் (heavy metals) தேக்கம் ஏற்பட்டிருப்பது கவலைக்கிடமாகக் கண்டறியப்பட்டது — தண்ணீரில் அதன் அளவு குறைவாக இருந்த போதிலும், அனைத்து மாதிரிகளிலும் ஆர்சனிக் (0.2–2.7 mg/kg) காணப்பட்டதுடன், சிலவற்றில் ஈயம் (lead) (0.05–0.17 mg/kg) இருந்தது. மொத்தத்தில், இவ்விரு நீர்நிலைகளின் ஆய்வுகள் ஒருங்கிணைந்த முகாமைத்துவ முறைகள் மற்றும் தனித்துவமான நீர்த் தர வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன, இதன் மூலம் சுற்றுச்சூழல் மற்றும் சமூக-பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இவ்விடங்களைக் கடுமையான சேதத்திலிருந்து பாதுகாக்க முடியும்

## 2. இலங்கையின் தெற்கு மாகாணத்தில் கடலோர கடலோர சுற்றுசூழலின் முகாமைத்துவத்துக்கு ஒரு கருவியாக சுற்றுச்சூழல் உணர்திறன் குறியீட்டினை உருவாக்குதல்

இலங்கையின் தென் மாகாணத்தில் நடைமுறைக்கு வரும் **சுற்றுச்சூழல் உணர்திறன் குறியீட்டு** திட்டம், கடலோர முகாமைத்துவம் மற்றும் எண்ணெய் அல்லது இரசாயன கசிவுகளுக்கான நடவடிக்கைத் திட்டமிடலுக்கான முக்கியமான கருவி ஒன்றை உருவாக்கும் கூட்டு முயற்சியாகும். இந்த திட்டம் இதுவரை குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தை கண்டுள்ளது. பெந்தோட்டை இருந்து அம்பாந்தோட்டை வரை உள்ள முழு கடற்கரைப் பகுதியில் கடற்கரைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் முக்கிய உயிரியல் வளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், பெந்தோட்டை இருந்து மாத்தறை வரை உள்ள கடற்கரைப் பகுதியில் **புவியியல் தகவல் முறை** (GIS) வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன, இதில் கடற்கரை, உயிரியல் மற்றும் மனித வளத் தகவல்கள் ஒருங்கிணைந்த காட்சியுடன் தொகுக்கப்பட்டுள்ளன (படம் 13). இந்தப் பணி உணர்திறன் மிக்க பகுதிகளுக்கான அடிப்படைத் தரவுகளை உருவாக்கி, எதிர்கால சுற்றுச்சூழல் சம்பவங்களுக்கு முன்னேற்பாடாகவும், திறம்படச் செயல்படவும் அதிகாரிகளுக்கு அத்தியாவசியமான தகவல்களை வழங்குகிறது.




Figure 13 காலி மாவட்டத்தின் சுற்றுச்சூழல் உணர்திறன் குறியீட்டு (ESI) வரைபடம்

## 3. நீர்கொழும்பு களப்பில் நிலையான கண்டல் தாவர தயாரிப்புகள் மூலம் காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான சதுப்பு நில சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள்

நீர்கொழும்பு களப்பின் கண்டல்தாவரங்களின் கார்பன் உறிஞ்சும் திறனை மதிப்பிடும் நோக்கில் நீல கார்பன் மதிப்பீட்டை மேற்கொள்ளும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்காக, வடக்கு பகுதியிலுள்ள ஐந்து தீவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேல்நிலை மற்றும் அடிநில உயிரிசை அளவிடுவதற்கும், கார்பன் பகுப்பாய்வுக்கான மண் மாதிரிகள் சேகரிப்பதற்கும் மாதிரி நிலப்பகுதிகள் அமைக்கப்பட்டன (படம் 14; அட்டவணை 1).




**Figure 14 நீல கார்பன் ஆய்வுக்காக ஐந்து தீவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன**

Table 2 ஆய்வு செய்யப்பட்ட தீவுகளுக்கான நீல கார்பன் மதிப்புகள்

| இடம் | மொத்த கார்பன் (உயிர்த்திணிவு) AGC+BGC (Mg C ha-1) | மண்ணிலுள்ள மொத்த சேதன கார்பன் (Mg C ha-1) | கண்டல்தாவரங்களில் உள்ள நீல கார்பன்(Mg C ha-1) |
|---|---|---|---|
| மிரிஸ்சாண்டுவா | 1094.94 | 438.4 | 1533.34 |
| காக்கத்தூவ | 584.62 | 328.26 | 912.88 |
| வெடிகந்த | 982.74 | 405.68 | 1388.42 |
| மஹாஉப்பளமா | 1025.37 | 410.98 | 1436.35 |
| மண்டகசலம்ப | 884.96 | 378.52 | 1263.48 |

அதிகபட்ச **நீல கார்பன் கையிருப்பு** மிரிஸ்ஸாண்டுவாவில் பதிவாகியுள்ளது (1,533.34 Mg C ha$^{-1}$), அதற்கு அடுத்ததாக மஹாஉப்பளமா, வெடிகந்த, மண்டகசலம்ப மற்றும் காக்கத்தூவ பகுதிகளில் படிப்படியாக குறைந்த மதிப்புகள் காணப்பட்டன. இந்த மதிப்பீட்டில் கண்டல்கள் கழிவுகளை தக்கவைத்திருக்கும் திறனை மதிப்பிடுவதற்காக **கழிவு மூடிய அளவை** அளவிடுதலும் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், மைக்ரோபிளாஸ்டிக் தங்குதன்மையையும் பின்னர் மதிப்பிட்டு, அதன் சூழலியல் விளைவுகளைப் புரிந்துகொள்வது நோக்கமாகும்.

இரண்டாவது செயற்பாடு கண்டல்தாவர வளங்களை அடிப்படையாகக் கொண்டு **நிலைத்திருக்கும் வாழ்வாதாரங்களை** உருவாக்கும் சமூக அடிப்படையிலான முயற்சியாகும். முக்கியமான சாதனைகளில், **மருத்துவ குணங்கள் கொண்ட** Acanthus ilicifolius செடியிலிருந்து கண்டல்தாவர மூலிகை தேநீர் தயாரித்தல் அடங்கும். மேலும், Xylocarpus granatum மற்றும் Rhizophora mucronata ஆகிய மாங்க்ரோவ் இனங்களிலிருந்து இயற்கை நிறமிகள் (natural dyes) வெற்றிகரமாக எடுக்கப்பட்டு, அவை துணிநூல் மற்றும் கைவினைப் பொருட்களில் பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்தின. அதனைத் தவிர, உலர்ந்த கண்டல்தாவர மலர்களைப் பயன்படுத்தி கையால் செய்யப்பட்ட **திறவுகோல் தொங்கல்கள்** தயாரிக்கப்பட்டு, உள்ளூர் கைவினைஞர்களுக்கு மாற்று வருமான மூலமாக அமைந்தது (படம் 15). இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை, கண்டல்தாவர**ங்**களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கான இரட்டைப் பயன்பாட்டை தெளிவாக வெளிப்படுத்துகிறது.



Herbal tea preparation — Prepared ornaments by using resins — Extracted dyes from mangroves

**Figure 15 கண்டால்தாவரங்களை அடிப்படையாகக்கொண்டு உற்பத்திகளை மேற்கொள்ளுதல்**

## 4. நேரம் மற்றும் இடம் சார் கடல்வாழ் முலையூட்டிகளின் பரம்பல் மற்றும் மிகுதியின் தன்மையை அடையாளம் காணுதல்: பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மைக்கான தாக்கங்கள்

இந்த ஆய்வு இலங்கையின் தெற்கு கடற்கரைப் பகுதியில் காணப்படும் **கடல் பாலூட்டிகளின் இனப் பன்மை**, **பரவல்**, **மற்றும் அதிகரிப்பு/குறைவுத் தன்மைகள்** குறித்து ஆராய்கிறது, இது முக்கியமான சூழலியல் முறைமைகள் மற்றும் தொகைச் சார்ந்த போக்குகளை கவனமாக மதிப்பிடுகிறது. வணிக திமிங்கில பார்வையிடல் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில், **நீல திமிங்கிலங்களின்** அவதானிப்பு குறிப்பிடத்தக்க அளவில் குறைவு ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது. கடந்த ஆண்டுகளில் உச்ச அவதானிப்பு காலமாகக் கருதப்பட்ட ஜனவரி முதல் மே மாதங்கள் வரை, குறைந்தபட்சமான 23 அவதானிப்புகள் மட்டுமே பதிவாகின. எனினும், **ஜூலை மாத இறுதியில் இருந்து நீல திமிங்கில அவதானிப்புகள் மீண்டும் அதிகரித்தன**. மேலும், ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை மொத்தம் 12 **இனமான கடல் பாலூட்டிகள்** இந்த ஆய்வு பகுதியில் பதிவாகின. ஆய்வு காலத்தில் குறிப்பிடத்தகுந்த கண்டுபிடிப்பு என்னவெனில், **பெரிய திமிங்கிலங்களின் கரை ஒதுங்குதல்** அல்லது **கப்பல் மோதல்** சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. **செட்டேசியன்** கூட்டங்கள் பெரும்பாலும் **கண்டமண்டல விளிம்புப் பகுதியில்** காணப்பட்டன, இது கிழக்கு-மேற்கு திசையில் செல்வதற்கான மிகச் செயல்பாட்டு கப்பல் பாதையுடன் ஒட்டியுள்ளது. ஆனால், 2025 **ஆம் ஆண்டில் பெரிய திமிங்கிலங்களின்** (**முக்கியமாக நீல திமிங்கிலங்கள்**) **அவதானிப்புகள் மிகவும் அரிதாக இருந்தன**. பெரிய டால்பின் இனங்கள், குறிப்பாக **சூரைமீன் நீளநூல் மீன்பிடி** நடவடிக்கைகளில், **இனப்பெருக்கத் சூறையாடல் மூலம்** மீன்வளத்துறைக்கு பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்த ஆய்வு வெளிப்படுத்தியது, **இந்தியப் பெருங்கடலில் நீளநூல் மீன்பிடியில் கடல் பாலூட்டிகளால் ஏற்படும் சூறையாடல் ஒரு முக்கிய சவாலாக உள்ளது** என்பதை. மொத்த **மஞ்சள் சூரைமீன்** (yellowfin tuna) பிடிப்பில் 29% சேதமடைந்தது மற்றும் 32% மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன, இதனால் சூறையாடல் குறியீடு 1.35 ஆகக் கணக்கிடப்பட்டது. ஒரு மீன்பிடி பயணத்திற்கான **பொருளாதார இழப்பு** சுமார் 1.2 **முதல்** 1.4 **மில்லியன் இலங்கை ரூபாய்** (LKR) என மதிப்பிடப்பட்டது. இவ்வாறு ஏற்படும் சூறையாடல், **பூமத்திய ரேகை சார்ந்த பகுதிகளில்** மிகக் கடுமையாக இருந்தது, ஆனால் **கடலோரப் பகுதிகளில்** ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தது. இதனை சமாளிக்க **வணிக ரீதியாக கிடைக்கும் பிங்கர்கள்** பயன்படுத்தப்பட்டபோதும், அதன் விளைவுகள் கலப்பானவையாக இருந்தன. இதற்கான நீடித்த தீர்வை உருவாக்குவதற்காக, தற்போது **ஆர்தர் சி. கிளார்க் மையத்துடன்** இணைந்து புதிய **தடுப்பு சாதனங்களை** உருவாக்கும் கூட்டு ஆராய்ச்சி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

# 4 தொழில்நுட்ப பரிமாற்ற திட்டங்கள்

## 1. தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்வளங்களை அடிப்படையிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான புதுமையான தொழில்நுட்ப மேம்பாடுகள்

பிந்தைய அறுவடை தொழில்நுட்ப பிரிவினால் பல புதுமையான தயாரிப்புகள் உருவாக்கப்பட்டு, மீன்வளம் மற்றும் கடல் தொழில்களில் மதிப்பூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான திறனை வெளிப்படுத்தின (படம் 16). Kappaphycus alvarezii, **கைட்டோசான்**, மற்றும் **டிரிகர்ஃபிஷ் தோல் ஜெலட்டின்** ஆகியவற்றை பயன்படுத்தி ஒரு **உண்ணக்கூடிய**, **உயிரி சிதைவுறக்கூடிய படலம்** உருவாக்கப்பட்டது. இது பிளாஸ்டிக் இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் சுவைச்சாறு பைகள் என்பவற்றிற்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றாக விளங்குகிறது. மேலும், **ரஃப் டிரிகர்ஃபிஷ்** (*Canthidermis maculata*) இன் தோலை பயன்படுத்தி **கொலாஜன் நிறைந்த முகமூடி** மற்றும் **புரதச்சத்து கொண்ட ஸ்பிரெட்பொருள்** ஆகியவை தயாரிக்கப்பட்டன, இதன் பல்துறை பயன்பாட்டை இது காட்டுகிறது. Gracilaria வகை கடற்பாசி தூள் **காலை உணவுக்கான க்ராக்கரில்** சேர்க்கப்பட்டு, ஒரு வல்லுறுதியான செயல்பாட்டு உணவாக உருவாகியுள்ளது. மேலும், **மதிப்பிடப்படாத சூரைமீன் கருப்பு சதை பகுதி** மற்றும் **கட்லா கட்லா அரைத்த மீன்** ஆகியவற்றை இணைத்து **புதிய மீன் உருண்டை தயாரிப்பு** உருவாக்கப்பட்டது; இது ஊட்டச்சத்து மற்றும் உணர்வுசார் பண்புகளை மேம்படுத்தியது. அதோடு, Pangasius hypophthalmus மீன் தோல்களைப் பயன்படுத்தி, இயற்கை டேனிங் முறைகளின் மூலம் உயர்தர **மீன் தோல்** தயாரிக்கப்பட்டது. இதன் செயல்திறனை நிரூபிக்கும் வகையில், ஒரு **பாஸ்போர்ட் கவர் மாதிரி** உருவாக்கப்பட்டது.



Using *Kappaphycus alvarezii*, chitosan and triggerfish skin gelatin for instant noodle seasoning sachets



Developed collagen rich facial mask by using rough Triggerfish (*Canthidermis maculate*) skin extract



Developed breakfast cracker by using seaweeds (*Gracilaria sp.*)



Developed proteinaceous spread by using Trigger fish skin (*Canthidermis maculate)*



Developed of value added fish ball product using Catla (*Catla catla*) mince and tuna (*Thunnus spp*) black flesh for sustainable fishery

**Figure 16** மீன் மற்றும் மீன் கழிவுகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான புதுமையான தயாரிப்புகள்

### இறக்குமதி செய்யப்பட்ட மாதிரிகளுடன் ஒப்பிடும்போது, உள்ளூர் உற்பத்தி செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட மீன்களுக்கான நுகர்வோர் தேவை குறைவதற்கு பங்களிக்கும் காரணிகளின் மதிப்பீடு குறித்த அறிக்கை

இத்தாய்வில், இலங்கையில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் டின் மீன்களுக்கு ஒப்பிடும்போது இறக்குமதி செய்யப்பட்ட மாதிரிகளுக்கு நுகர்வோர் தேவையைக் குறைக்கும் காரணிகளை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகள் காட்டுவது, நுகர்வோரில் குறிப்பிடத்தக்க பகுதியான 46% பேர் உள்நாட்டு தயாரிப்புகளின் தரம் குறித்த அச்சங்களின் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட தயாரிப்புகளை விரும்புகிறார்கள் என்பதாகும். இதில், உள்நாட்டு டின் மீன்களின் தோற்றம், அமைப்பு, ருசி மற்றும் வாசனை போன்ற தரச் சிக்கல்கள் அடங்கும். இந்த ஆராய்ச்சி முடிவின் படி, உள்நாட்டு தொழில்துறையின் நிலைத்தன்மையும் போட்டித்திறனும் உறுதிப்படுத்துவதற்கு, உற்பத்தியாளர்கள் இத்தரச் சிக்கல்களை உடனடியாக சரிசெய்ய வேண்டும். இதற்காக பயன்படுத்தப்படும் மீன்களின் (இன்டியன் ஸ்காட் - *Indian Scad*) தரத்தை மேம்படுத்துவதோடு, செயலாக்க நுட்பங்களையும் மேம்படுத்துதல் அவசியம். நுகர்வோரின் உணர்வுத் தரத்துக்கான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்தல், சந்தை நம்பிக்கையை வலுப்படுத்தவும் உள்நாட்டு டின் மீன் விற்பனையை அதிகரிக்கவும் முக்கியமானது என ஆய்வு வலியுறுத்துகிறது.

இலங்கை டின் மீன் தொழில்துறைக்காக பரிந்துரைக்கப்பட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறை என்பது — மலிவான மற்றும் உயர்தர மூலப்பொருட்களை நிலையான முறையில் வழங்கும் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதும், அதேசமயம் மூலப்பொருட்களையும் தயாரிப்புகளையும் வழக்கமாக கண்காணிக்கும் முறையையும் நடைமுறைப்படுத்துவதும் ஆகும். இவ்விரு நடவடிக்கைகள் நுகர்வோரின் ஆரோக்கியத்தையும் தயாரிப்புகளின் தரத்தையும் பாதுகாப்பதோடு, உள்ளீட்டு பற்றாக்குறை மற்றும் தரக் கட்டுப்பாட்டு பிரச்சினைகளையும் சமாளித்து நிலைத்த உற்பத்தியை ஆதரிக்கின்றன.

### இலங்கையில் பனிக்கட்டி உற்பத்தி ஆலைகளில் உள்ள பனிக்கட்டிகளின் நுண்ணுயிரியல் தர மதிப்பீடு குறித்த அறிக்கை

இலங்கையில் பனிக்கட்டித் தயாரிப்பு/ உற்பத்தி ஆலைகளில் தயாரிக்கப்படும் பனியின் நுண்ணுயிரியல் தரத்தை மதிப்பீடு செய்யும் ஆய்வொன்றின் முடிவுகள், பெரும்பாலான ஆலைகளில் ஏற்றுக்கொள்ள முடியாத தரத்திலான பனி தயாராகி வருவதை வெளிப்படுத்துகின்றன. ஆய்வுக்குட்பட்ட 30 ஆலைகளில் 93.33% (அதாவது 28 ஆலைகள்) பனியில் *Escherichia coli* (E. coli) எனும் பாக்டீரியா கண்டறியப்பட்டது — இது மலக் கலப்பு) ஏற்பட்டதற்கான வலுவான சுட்டிகாட்டியாகும். இந்தக் கலப்பின் மூல காரணமாக தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் நீர் இருப்பதாக ஆய்வு காட்டியது. ஆய்வில், 21 ஆலைகளின் நீரில் Fecal coliforms காணப்பட்டன; அவற்றில் 17 ஆலைகளில் குறிப்பாக *E.coli* கண்டறியப்பட்டது. மேலும், இந்தக் கலப்பு முழு உற்பத்தி செயல்முறையிலும் தென்பட்டது — 28 ஆலைகளில் சேமிக்கப்பட்ட பனியிலும், 25 ஆலைகளில் அரைத்த பனியிலும் மலக் கலப்பு பாக்டீரியா காணப்பட்டது.குறிப்பாக, எந்த மாதிரிகளிலும் Salmonella பாக்டீரியா கண்டறியப்படவில்லை. இந்த முடிவுகள், பனித் தயாரிப்பு செயல்முறைகளில் சுகாதார நடைமுறைகளையும் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் நீரின் தரத்தையும் அவசரமாக மேம்படுத்த வேண்டியதைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றன. தற்போதைய நிலைமையில், இத்தகைய குறைபாடுகள் மீன்களின் பாதுகாப்புக்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் ஆபத்தாக உள்ளன — இது இலங்கையின் உள்ளூர் பொருளாதாரத்திற்கும் உணவுக் கலாச்சாரத்திற்கும் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

### புத்தளம் களப்பில் ஏற்றுமதி சார்ந்த இருவால்விகளை வளர்ப்பதற்கும் பதப்படுத்துவதற்கும் பாதுகாப்பான உணவு தயாரிப்பை உருவாக்குவதற்கு நுண்ணுயிரியல் தர மதிப்பீடு மற்றும் நல்ல உற்பத்தி நடைமுறைகள் நிறுவுதல் குறித்த அறிக்கை

இலங்கையின் புத்தளம் களப்பில் இரட்டை சிப்பி வகை நீர்வாழ் உயிரினங்களான கவாட்டிகள் சேகரிக்கும் முக்கியப் பகுதிகளில் அவற்றின் நுண்ணுயிரியல் தரத்தை மதிப்பீடு செய்யும் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பக் கண்டுபிடிப்புகள், உணவு பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்த வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டும் வகையில் குறிப்பிடத்தக்க அளவிலான நுண்ணுயிர் கலப்பை வெளிப்படுத்தின. ஓய்ஸ்டர் மாதிரிகளின் பகுப்பாய்வில், நுண்ணுயிர் அளவுகள் பெரிதாக மாறுபட்டன — Aerobic Plate Count (APC) மதிப்பு $2.0\times10^2$ முதல் $7.6\times10^6$ CFU/g வரை காணப்பட்டது. மேலும், Escherichia coli (*E.coli*) பாக்டீரியா ஓய்ஸ்டர் மாதிரிகளில் (அதிகபட்சம் 1100 MPN/g வரை) மற்றும் நீர் மாதிரிகளில் (அதிகபட்சம் 170 MPN/100 ml வரை) கண்டறியப்பட்டது, இது மலக் கலப்பைக் குறிக்கிறது. அதோடு, உணவின் மூலம் பரவும் நோய்களை ஏற்படுத்தக்கூடிய *Vibrio parahaemolyticus* என்ற பாக்டீரியாவின் ஆறு பிரிவுகள் கண்டறியப்பட்டன. எனினும், *Salmonella spp.* எதுவும் மாதிரிகளில் காணப்படவில்லை. இந்த முடிவுகள், ஓய்ஸ்டர்களை பாதுகாப்பாக நுகர்வதற்கு முன் அவற்றை

சுத்திகரிக்கும் செயல்முறையை கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. இத்தாய்வு, இலங்கையின் ஒய்ஸ்டர் வளர்ப்பு தொழில்துறையின் நிலைத்த வளர்ச்சியும் உணவு பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுவதற்காக, மாசு முகாமைத்துவத்தை மேம்படுத்தல், ஒழுங்கையான கண்காணிப்பு, மற்றும் நல்ல உற்பத்தி நடைமுறைகள் கடைபிடிப்பு ஆகியவை அவசியமானவை என்பதை விளக்கும் முக்கிய அடிப்படைத் தரவுகளை வழங்குகிறது.

## 2. சூரைமீன் மீன்பிடித் தள ஆலோசனை மற்றும் மீன்பிடித் தகவல் சேவை

சூரைமீன் மீன்பிடி வலய ஆலோசனை மற்றும் மீன்பிடி தகவல் சேவைத் திட்டம் பலநாள் கடல்பயண மீன்பிடி கப்பல்களுக்கு சாத்தியமான மீன்பிடி வலயங்களைப் பற்றிய ஆலோசனைகளை வழங்கி, பொருளாதார மற்றும் நேர திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. செயற்கைக்கோள் தரவுகள் (கடல் மேற்பரப்பின் வெப்பநிலை, உயரம், குளோரோபில் அளவு) மற்றும் உலக கடல் மாதிரிகள்) பயன்படுத்தி, இந்தத் திட்டம் யெலோபின் மற்றும் பிக்ஐ சூரை மீன்களுக்கு உகந்த நீண்ட கயிறு மீன்பிடி பகுதிகளை அடையாளம் காண்கிறது. மேலும், ஸ்கிப்ப்ஜாக் சூரை மீன்களுக்கு வலை பயன்படுத்தும் கப்பல்களுக்காக வாரத்தில் மூன்று முறை 5 நாள் முன்னறிவிப்புகளையும் வழங்குகிறது. இந்த ஆலோசனைகள் WhatsApp (1,600 பயனர்கள்), மின்னஞ்சல் (380 சந்தாதாரர்கள்) மற்றும் NARA-வின் Facebook பக்கம் (2,700 பின்தொடர்பவர்கள்) மூலமாக பகிரப்படுகின்றன. ஆலோசனைகளின் பரவலை வலுப்படுத்துவதற்காக, NARA, Dialog Axiata PLC நிறுவனத்துடன் இணைந்து "Sayuru" எனும் மொபைல் பயன்பாட்டில் Potential Fishing Zones (PFZs) தரவை ஒருங்கிணைத்துள்ளது. 2025 ஆகஸ்ட் 31 ஆம் தேதியளவில், இந்தத் திட்டம் மொத்தம் 84 யெலோபின் சூரைமீன்,30 பிக்ஐ சூரைமீன், மற்றும் 72 ஸ்கிப்ப்ஜாக் சூரைமீன் மீன்பிடி ஆலோசனைகளை வெளியிட்டுள்ளது (படம் 17). எனினும், பணியாளர் பற்றாக்குறை, தொழில்நுட்ப சிக்கல்கள், மற்றும் Vessel Monitoring System தரவுகளுக்கான அணுகல் இல்லாமை ஆகியவை தரச்சோதனை மற்றும் சரிபார்ப்பு செயல்முறைகளை பாதிக்கின்றன. திட்டத்தின் கீழ், பல மீன்பிடி துறைமுகங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் விளக்கத்தாள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.திட்டத்தின் நீடித்த வெற்றிக்காக, தரவுத் தரம், பணியாளர் ஆதரவு மற்றும் நிகழ்நிலை தரவு அணுகல் ஆகிய துறைகளில் மேம்பாடுகள் அவசியமாகின்றன.




ஆழ் கடல் மீன்பிடித் தளங்களுக்கான எதிர்வு கூறல்

பிரசுரிக்கப்பட்ட திகதி : 2025-09-22

| அகலாங்கு | | | நெட்டாங்கு | | | ஆழம் |
|---|---|---|---|---|---|---|
| பாகை | கலை | | பாகை | கலை | | பாகம் |
| 7 | 40 | N | 82 | 43 | E | 23 |
| 5 | 28 | N | 86 | 8 | E | 51 |
| 5 | 14 | N | 84 | 15 | E | 59 |
| 3 | 59 | N | 83 | 53 | E | 58 |
| 8 | 45 | N | 65 | 53 | E | 56 |
| 8 | 34 | N | 64 | 50 | E | 57 |
| 6 | 43 | N | 63 | 37 | E | 52 |
| 4 | 18 | N | 61 | 33 | E | 49 |
| 5 | 49 | N | 59 | 21 | E | 51 |
| 2 | 21 | N | 60 | 47 | E | 50 |
| 2 | 27 | N | 59 | 29 | E | 55 |
| 0 | 36 | N | 59 | 29 | E | 37 |
| 0 | 4 | N | 61 | 47 | E | 38 |
| -1 | 49 | S | 61 | 52 | E | 34 |
| -4 | 50 | S | 80 | 20 | E | 38 |
| -8 | 4 | S | 83 | 34 | E | 22 |

Figure 17 சூரைமீன் மீன்பிடி தள ஆலோசனை வரைபடம்

## 3. தேசிய பெருங்கடல் மற்றும் மீன்வள தரவு மையம் மற்றும் டிஜிட்டல் நூலகத்தை நிறுவுவதை எளிதாக்குதல்

இந்தத் திட்டம் தரவு ஒழுங்கமைப்பு, தரவு பகிர்வு, மனிதவள மேம்பாடு மற்றும் தேசிய டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளுக்கான ஆதரவு ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. முக்கியமான சாதனையாக, மேனிலைத் தரவு தாள்கள் புதுப்பிக்கப்பட்டும் இறுதியாக முடிவுறுத்தப்பட்டும் உள்ளன. இத்தாள்கள் கடல் மற்றும் மீன்பிடித் தரவுகளை சரிவர ஆவணப்படுத்துவதற்கும் அவற்றை நீண்டகாலம் அணுகக் கூடிய வகையில் பாதுகாப்பதற்கும் இன்றியமையாதவையாகும். மேலும், மேனிலைத் தரவு இணைய தள வாயில் உருவாக்கும் பணியும்

நடைபெற்று வருகிறது. இது பல்வேறு தரவுத் தொகுப்புகளை ஒரே முறைப்படுத்தப்பட்ட தளத்தின் கீழ் பகிர்ந்து பயன்பெறுவதற்கான மைய தளமாகச் செயல்படும். அதோடு, திட்டக் குழு உறுப்பினர்கள் தரவு மேலாண்மை, தரவு பகிர்வு, மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பான ஆறு நிறுவனக் கூட்டங்களில் தீவிரமாக பங்கேற்றனர். திட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சமாக திறன் மேம்பாடு காணப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக, கொரிய தரவியல் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் இரண்டு நிபுணர் பயிற்சி பட்டறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன (படம் 18). மேலும், NARA நிறுவனத்தின் நிறுவல் திறனைக் கட்டியெழுப்பும் நோக்கில், 23 பணியாளர்கள் தரவு மேலாண்மை மற்றும் தரவியல் துறைகளில் பயிற்சி பெற்றனர். அதேபோல், 5 பல்கலைக்கழக மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. இத்திட்டம் கூடுதலாக மூன்று முக்கியமான தேசிய டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு பங்களித்துள்ளது: கடல் பரப்புத் திட்டமிடல், FAO இயங்குதன்மை திட்டம், இலங்கை டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டம். இந்த பங்களிப்புகள், தரவு பரிமாற்றத் திறனை மேம்படுத்துவதற்கும், நாட்டின் பரந்த டிஜிட்டல் மாற்றம் நோக்கத்துக்கு ஆதரவாகவும் மிக முக்கியமானவையாகும்.






Figure 18 தரவு முகாமைத்துவம் மற்றும் தரவு அறிவியல் பயிற்சி பட்டறைகள்

## 4. நாராவின் நிகழ்நிலை தகவல் அமைப்புகள், வலைத்தள மேம்பாடு, இணையம், நூலகம் மற்றும் விரிவாக்க சேவைகள்

### 1 நூலகம் மற்றும் தகவல் பிரிவு

